உ

தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ரு	சுக்கில—ஐப்பசி, கார்த்திகை.	மலர் எ-அ

உ

கலித்தொகையும் நச்சினார்க்கினியரும்.

(முற்றொடர்ச்சி துணர் 5. பக்கம் 131.)

திருவாளர் அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள்,
தமிழ்ப்புலவர், சலகண்டபுரம்.

9. உடன்போக்குத்துணிந்து தலைவனொடு சென்ற தலைவியைத் தேடிச்செல்லும் செவிலி, ஆற்றிடை முக்கோற்பகவரை வினாதலும், அவர் கூறும் தேறுதலும் உரைப்பது இச்செய்யுள்:—

எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழ
லுறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலு
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செய்ன்மாலைக் கொளைநடை யந்தணீர்
வெவ்விடைச் செலன்மாலை யொழுக்கத்தீ ரிவ்விடை
யென்மக ளொருத்தியும் பிறண்மக னொருவனுந்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சிய
ரன்னா ரிருவரைக் காணிரோ பெரும!

இதில் 'உரைசான்ற முக்கோல்' என்பதற்கு 'அரி, அயன், அரன் என்னும் மூவரும் ஒருவரென்று சொல்லுதல் தன்னிடத்தே அமைந்த முக்கோல்' எனப்பொருட்குக் காட்டி விளக்கியும், 'குறிப்பேவல் செயன்மாலை' என்பதற்கு 'ஐம்பொறிகளும் நமக்கேவல் செய்தலை இயல்பாகவுடைய' எனக் கூறியும், அந்தணீர் என முன் கூறி, பின் பெரும என்று விளித்துப் பன்மை ஒருமை மயக்கக்கிடப்பதை நீக்குவார் "பெரும! என்றாள் அவர்கள் ஆசிரியனாகிய பெரியோனை; அந்தணர் அவன் மாணுக்கர்" என்றுரை கூறியும் செல்லும் உரையாசிரியர் மதிநுட்பம் மகிழத்தக்கது.

பின், அவ்வந்தணர், 'காணே மல்லேம் கண்டனம்' என விரித்துரைத்ததற்குக் காரணங் காட்டுகின்றனர் "அங்ஙனம் போகின்றவரை அறிந்து விலக்கல் அறமன்றென்று போந்தேம்" என்னுங் கருத்தால் கூறியதென்று. இறுதியில், "அறந்தலை பிரியா வாறுமற் றதுவே" என்னுந் தொடர்க்கு 'இல்லறத்தே பிரியாது வாழும் நல்வழி அதுவேயாம்' எனப் பொதுப்படப் பொருள் கூறாமே, அறந்தலை என்பதனைத் தலைஅறம் எனப் பிரித்துக்கூட்டி 'இவ்வில்லறமே தலைமையாய அறம்' என முடித்து, 'பிரியாவாறு மற்றதுவே' என்பதற்கு "இவ்விருவரும் நீங்காமற் சுவர்க்கத்திலே செல்லும் வழியும் அவ்வழிபாடே" என்று பொருள் கூறுகின்றார். தாம் இவ்வாறு பொருள்கூறியதுவே நேர் என நாட்டற்கு முற்கூறியவாறு சிலர் கூறுவர் அது பொருந்தாது எனக் காரணங்காட்டுகின்றார், தலைப் பிரியா என்று வேற்றுமைத் தொகைப் புணர்ச்சி மிகவேண்டியது, அது மிகாமையினால் என்று. இவ்வுரைநயம் பாராட்டற்குரியதே.

இனி நூலாசிரியன் நுண்மதித்திறனையுங் காண்பாம். தனது மகளைத் தேடிவருந்தும் செவிலியைத் தேற்றும் அவ்வந்தணர் உலகியல் கூறிவிடுகின்றார்

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதா மென்செய்யும்?

சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதா மென்செய்யும்?

ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யும்?

என்று எடுத்துக்காட்டி, ஒரு பொருண்மேல் பலவடுக்கிவரல் தாழிசையிலக்கணமேனும் அவ்வடுக்குகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு சிறப்புடைய பொருள்தந்து விகற்பித்தல்வேண்டும். இன்றெனிற் கூறியது கூறலாய் வழூப்படும். மேற்போந்த மூன்று தாழிசைகளும் அங்ஙனம் வெவ்வேறு பொருள்தருதல் யாங்ஙனம்? நோக்குவோம்.

முதலாவது :—சந்தனம், மலையிற்றோன்றி வளர்ந்தும் அதனின்று பிரிந்து வெட்டித்தறித்து உரைத்துப் பூசிக்கொள்வோர்க்குப் பயன் தருதல் போன்று, நும்பாலிதுகாறும் பிறந்து வளர்ந்தாளை நும்மிற் பிரித்துத் தன் கைப்படுத்து மெய்யிளைப்ப நடாத்திப் பயன்கொள்வானுக்கு இன்பம் விளைத்தனள் என மனங்கலந்த மெய்புறு புணர்ச்சியின்பங் கூறினர்.

இரண்டாவது :—முத்து, நீரிற் பிறப்பினும், அங்கு நின்று மாற்றி உட்டுளை செய்து சரட்டிற் கோத்து அணிவோர் மார்பில் அசைந்தாடி அழகு தருவதுபோல, நும் மகளை நும்மிற் பிரித்து வேறாக்கி நுங் காதல்வன்மை நீங்க உள்ளங்கரைத்துத் தன்னன்பை அவளுள்ளத்தே புகுத்துத் தன் மார்பில் இடம் தந்தானுக்கு அங்கே தங்கி அழகு செய்து பயன்படுவாளாயினள் நும் மகள், எனத் தழுவி முயங்குமின்பங் கூறினர்.

மூன்றாவது :—யாழ் ஒலி ; அவ் வின்னோசை, யாழ் நரம்பிற்றோன்றுவதாயினும் விரலாற் றெட்டிசைப்பார்க்கே பயன் தரும். அஃதேபோல் நும்மகளை நீவிர் பெற்றுத் தாங்கினும் அவளோடு முயங்கி அவள் இன்சொல்லைக் கேட்டு மகிழ்வோர்க்குப் பயன் படுவாளாயினள் எனக் காதன்மொழி யாடிக்கொண்டும், இழுக்கலுடைய வழிகளில் ஒருவரையொருவர் தழீஇக்கொண்டும் நடை

வருத்தந்தோன்றாது இனிது செல்கின்றனர் என அவரது உவகைச் செயல்களை மொழிந்தனர். இங்ஙனம் நூலாசிரியர் ஒருபுறம், உரையாசிரியர் ஒருபுறம்* நமக்களிக்கும் விருந்து உண்டாணுத் தகைமையதே யன்றோ !

11. அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல்............

இச்செய்யுள், தலைவன் பொருளீட்டக் கருதிச் சென்ற நோக்கமும், அவர் விரைந்து வினைமுற்றி மீள்வார் என்பதற்குப் போதிய காரண முண்மையும் தலைவி தோழிக்குக் கூறியது. உரைகாரர், தொடக்கத்தே "...........மூன்றன் பகுதி தலைவன்கூறிப் பொருள் வயிற் பிரிகின்ற காலத்து...........கூறினார், எனக் காட்டி மூன்றன் பகுதி கூறலாவது அறத்தினாற் பொருளாக்கி அப் பொருளாற் காமம் நுகர்வேனென்றலாம் என விளக்கிப் பொருளையே பெரிதென நினைத்துச் சென்றானென்னில் கூடாது காமம் பொருளாசைப் பிரிவை விலக்குதலின் என்னும் பொருளைத் தோற்றுவிக்கின்றார். நுண்ணுணர்வினாராய்ச்சி ஆண்பாற்கே யுரித்தாகலின் தலைவி இம் மூன்றன் பகுதியைத் தலைவன் கூறக் கேட்டவாறு கூறுகின்றாள் என்றும், இஃது, அறம் பொருள் இன்பங்கள் முறையே காரண காரியங்களாக அமைந்த வியற்கையை நுதலிற்றென்றும், ஒன்றினிடத்து மிக்க ஆசை நிகழின் வேறொன்றினிடத்துள்ள காதல் குறைந்ததெனப் படுமாதலின் அதனை விலக்கித் தலைவியின்பால் ஆராக்காதல் கூர்தலின் அவ்வின்பத்தை நனிமகிழ்ந்து துய்த்தற் பொருட்டே பொருளீட்டப் பிரிந்ததன்றிப் பொருளை மிகவிழைந்தீட்டற்கன்று என்றும் பொருந்தவுரைக்கும் வன்மை அநுமைப்பாடுடையது. இது, தலைவி தோழியை ஆற்றுவித்தது எனக் கொள்வதற்குக் காரணம் கூறுகின்றார். தோழி கூற்றாயின் வருவர் என்றே

*நமது புலவரோ அவ்விருபுற விருந்தும் ஒருங்களிக்கின்றனர்.—வே.

தேற்றியிருப்பள். வருவர்கொல் என ஐயச்சொல் சார்த்தலின் தலைவி கூற்றேயாம் எனத் துணிகின்றார். இங்ஙனம் உரைகாரர் நயங்காட்டுவதொருபுறமிருப்ப, நூலாசிரியர், தலைவன் விரைந்து மீள்வதனைத் தலைவி நம்புதற்கு அவன் கூறிச்சென்ற காரணங்களை மிக வுருக்கம் தோன்ற உரைக்கின்றார்; அவை—

(1) யானைக்கன்றுகள் கலக்கிய சின்னீரைக் களிற்றி யானை, தன் பிடிக்கு முன்னே உண்பித்துப் பின் தானுண்ணும்.

(2) புறாக்கள், தமது சிறகைவிரித்துத் தம்பெடைகளுக்கு நிழல் செய்து வெப்பந்தீர்க்கும்.

(3) கலைமான்கள், பிணைகளுக்குத் தம் உடல் நீழலை யளித்து வெயிலின் கடுமை தீர்க்கும். இக்காட்டு வழியே தலைவன் செல்வேனென்றமைபின், தாழ்ந்த அவ்விலங்கு புட்களின் காதற்காமம் பெருமை கண்ணுற்று விரைந்து மீளல் ஒருதலை என்பன.

"இனைநல முடைய கானஞ் சென்றோர், புனைநலம் வாட்டுந ரல்லர்" என்பதில் இனைய நலம், இனைநலம் என விகார முற்ற தென்பாரும் உளர் எனப் புறக்கணித்துத் துன்பந்தருதற்குக் காரணமான நன்மைகளையுடைய காடு எனப் பொருள்கூறிய உரையாசிரியர், தலைவியைத் தலைவன் மறப்பானேனும் அவன்முன் விலங்கும் புட்களும் காம மூட்டிப் பிரிவாற்றாமையை மிகத் தூண்டி வருந்துவித்துத் தலைவியோடு கூடுமாறு நலம் தருதலை யுடைய காடு என விரித்துக் காட்டிய அளவு, இப்படிப்பட்ட நலமுடைய காடு எனக்கூறுவதில் பொருள் சிறவாதன்றோ! 'புனைநலம் வாட்டுநரல்லர்' என்பதற்கு "நமது அழகுகழிய வருத்துவாரல்லர்" எனப் பொதுப்படக்கூறாது, 'தலைவர், குறித்த வினை முற்றப்பெறாது வருதல் தனக்கும் வருத்தந்தருவதாகலானும், வினைமுற்றக் காலம் நீடித்தலும் துன்பமாயிருத்தலானும், விரைந்து வினைமுற்றியே மீள்வர் அதனால் நமது புனைநலம் வாட்டார்' எனத் தலைவி கூறியதாக நுணிகிப் பொருள் கண்டது பாராட்டற்குரியது.

12-வது செய்யுள் :—தலைவன் பிரிவுணர்த்தப்பட்ட தோழி செலவழுங்குவிப்பதைக் கூறுவது. இதனுள் .... “சிறுநனி நீதுஞ்சி எற்பினு மஞ்சும்—நறுநுதல்” என்பதற்குப் “பண்டு துயில்கொள்ளுங் காலத்தின் மிகச்சிறுபொழுது தாழ்த்துத் துயில் கொண்டெழுந்திருப்பினும் இதுவும் ஒன்றுடைத்தென்று அஞ்சும் நறியநுதலையுடையவள்” எனவுரைத்து. “அஞ்சுமென்றது—பிரியுமாறு நினைத்து முன்னர்த் துயிலின்றிப் பின்னர்த் தாழ்க்கத் துயின்றாளென்று அஞ்சினாளென்க” என விரிக்கின்றார். இவ்வாறு விரியாக்கால் கற்றுவல்ல ஒரு சிலர்க்கன்றி இப்பொருள் தோன்றாதாம். இச் செய்யுளின் பகுதிகளைக்கொண்டு “நாளது சின்மையும், இளமைய தருமையும், தாளாண் பக்கமும், தகுதிய தமைதியும். அன்பின தகலமும், அகற்சிய தருமையுங்” கூறிச் செலவழுங்குவித்தது என எடுத்துக் காட்டிலரேல் நுணுகி யறிவதரிதாம்.

16-வது செய்யுள் :—இது தலைமகன் பொருள்வயிற்பிரிய, அவன் செல்லுங் காட்டகத்தே மிக்க கானல் கடுமை செய்யுமோ என்றஞ்சி ஆற்றாத தலைமகள், அக்காட்டில் வெப்பம் நீங்கித் தட்பம்மிகுவிக்கச் சில கடவுளர்களைப் பராவுவோமயின் அது கணவனையன்றி வழிபடாத கற்புக்கிழுக்காகுமன்றோ எனத் தோழியோடு கூறுவதாக வுள்ளது. இதனுள் .... காதலர் துறந்தேகுமாரிடை .... எழிலியை இரப்பவு மினையவதோ? .... கனலியைக் காமுற லினையவதோ? .... வளிதரும் செல்வனை வாழ்த்தலு மினையவதோ? எனுந்தொடர்கட்கு, எழிலியை—மேகத்திற்குரிய ஞாயிற்றை எனவும் வளிதருஞ் செல்வனை—காற்றைத் தருகின்ற ஞாயிற்றை எனவும் பொருள் கூறுகின்றார். பாலைத்திணைக்குத் தெய்வம், “மழையையுங் காற்றையுந்தரும் ஞாயிறு” எனக்கூறி. இதனை “மாயோன்மேய” என்னுஞ் சூத்திரத்தானுணர்க வெனக் குறிக்கின்றார். ஆண்டுத் தொல்காப்பியத்தில், ஆதித்தன் எல்லா நிலத்துக்கும் பொதுவென மறுத்துத் தங்கோள் நாட்டுகின்றாராதலின், இது பிறமதந் தழுவியுரைத்ததென் றறிதல் வேண்டும். அச் சூத்திரத்தும், இக்

கலித்தொகைச் சொற்றொடர்களையே எடுத்துக்காட்டி "ஞாயிற்றைத் தெய்வமாக்கி அவனிற்றோன்றிய மழையினையுங் காற்றினையும் அத் தெய்வப்பகுதியாக்கிக் கூறுபவால் எனின்" என்று தொடங்குவதால், இவ்வுரைகாரர்க்குடம்பாடு பிறிதென்றறியப் பட்டது. இக்கலியின் ஈற்றில் "இது தங்குலதெய்வமன்றி எல்லோர்க்கும் பொதுவாகலிற் கற்பிற்கியைவதோ வென்றாள்" எனக் குறிப்பதுகொண்டு, கற்புடைப் பெண்டிர் தம் கணவரையும் அவர் சொல்வழித் தங்குலதெய்வங்களையும் தொழுதலன்றி ஏனைக் கடவுளரை வணங்கல் மாபன்று என்பது புலனாகின்றது.

18-வது செய்யுள் :—இதுவும் "நாளதுசின்மை" முதலியன கூறித் தோழி தலைவனைச் செலவழுங்குவித்தது.

இதனுள்........"விரும்பி நீ-யென்றோ-ளெழுதிய தொய்யிலும் யாழநின்-மைந்துடை மார்பிற் சுணங்கு நினைத்துக்காண்......" எனுஞ் சொற்றொடர்க்கு யாது கூறுவரோ என அவ்வுரையை நோக்கி யாமடைந்த வியப்பு அம்ம! மிகப்பெரிது! ஓர் தோழி தலைவனை விளித்து நீ என் தோளில் விரும்பி எழுதிய *தொய்யில் அழகையும், உனது வலிமிக்க மார்பில் சுணங்கின் அழகையும் நினைத்துப்பாரும் என மொழிவதாகவன்றே நேர் பொருள் படுகின்றது. இங்ஙனங் கூறுதல் பெரிதும் முரண்படுவ தொன்றாமே எனக்கருதத்தக்கது. இவ்விடர்ப்பாட்டை எளிதே கடந்துவிட்ட நம் நச்சினார்க்கினியர் ஆற்றல் இருந்தவாறென்னே! தொல்காப்பியக் கடலை முற்றுங்குடித்து ஏப்பமிட்ட இவர், தலைவி தோளைத் தோழி தன்றோளென உரிமைபாராட்டித் தலைவிக்குந் தனக்கும் உயிரேயன்றி உடம்பும் ஒன்றேபோலுமென நட்பின் திட்பத்தை விளக்குகின்றாள். இவ்வாறு வருதற்கு விதி........ 'எம்மென வரூஉங் கிழமைத்தோற்ற—மல்லா வாயினும் புல்லுவ வுளவே' என்பதாம் எனக் குறித்துச் சென்றார். மற்று "நின் மைந்துடை மார்பு" என்னுந் தொடர்க்கு "நின்னை வலியாக வுடைய இவளது மார்பின் சுணங்கு" என எளிதாக வுரைக்கின்றார். மாதர்கள் தலைவரைப் பிரியுங்காற் பசப்பூரப் பெறுவ

---

* தொய்யில்—சந்தனத்தால் எழுதும் கோலம்.

தன்றித் தலைவர்தம் மார்பிற் பசப்புடையாரானர் என்பது வழக்கன்று. இங்ஙனம் நம்போல்வார்க்குச் சிக்கல்தோன்றுழியெல்லாம் தமதரும்பெறற் கல்வியாற்றல் கொண்டு ஐயமறுக்கும் நாவலரேறு அன்றோ நம் உரையாசிரியர். மென்றோளென்றும் பாடம் உண்டெனக் கண்டுவைத்தும் என்றோள் என்ற பாடத்தையே மேற்கொண்டு நுண்பொருளை மாட்சிபெற விளக்கிய இவர் திறமை பாராட்டற்குரியதே. மற்றும் கல்வியறிவாற் சிறந்தானோர் தலைமகனுக்குப் பெண்டன்மைமிக்காள் ஒருதோழி "நாளது சின்மை முதலிய நீதிகளைக் கூறுமாறு தகுதியன்றே என்னும் ஐயமறுப்பார் "நிகழ்ந்தது கூறி நிலையலுந் திணையே" என்னும் சூத்திர விதிகாட்டி முன்னோர்கால் தலைவனுரைத்ததை நினைவு கூர்ந்து தக்க ஆமயத்தில் கூறியதாம் என மாபுவழுவமைப்பாராயினர். இங்ஙனம் நுணுகிய இவரது புலமை கற்றோர்க்கு வியப்பளிக்குந் தகையது; இவரது உலகியலறிவும் சாலச் சிறந்ததொன்றாம்.

22-வது செய்யுள்:—தலைவனைக் களவுகாலத்தொழுக்கங் கூறித் தோழி செலவழுங்குவிக்குங் குறிப்பினது. இதனுள்,

..........தாயுயிர் பெய்த பாவை போல—நலனுடை யார் மொழிக்கட் டாவார் ....தாதுதேர் பறவையி னருந்திறல் கொடுக்குங்கா — லேதிலார் கூறுவதெவனோ? ....எனுந் தொடர்க்கு, "ஓவியம் எழுதுவோன் உயிர்ப்புக் கொடுத்த பாவை, தான் அழியுமளவும் அக்குறிப்பு நிற்குமாறுபோல, நல்லோர்தாங் கூறிய மொழியிடத்து உயிராகிய உண்மைகெடார் என்றும், 'தாதுதேர் பறவையி னருந்திறல் கொடுக்குங்கால்' என்புழி, அரும்+திறல், எனக் கண்ணழியாது, அருந்து என்பது ஆர்ந்தென்பதன் விகாரமென நுணுகியுணர்ந்து, மலரின் புதியசெவ்வி நறவை இரந்து உண்டு, பின் அம்பலர்க்கு நல்காது கேடுதரும் வண்டேபோல நீர் ஒழுகுதிராயின் ஏதிலராகிய எம்போல்வார் கூறுவதனாற் பயன் யாதுள்ளதாம்? என உரைத்தது போற்றத்தக்கது. இச்செய்யுளின் தாழிசைகளில், தலைவியின் இளம் பருவத்து நலம்பாராட்டி நுகர்ந்த நீ, செவ்வி முதிர்ந்துழிப் பிரிய

வெண்ணுதல் நன்றாங்கொலோ! எனத் தோழி மொழிவதாக, "நறுமுல்லை நேர்முகை யொப்ப நிரைத்த—செறிமுறை பாராட்டி னாய்மற்றெம் பல்லின்—பறிமுறை பாராட் டினையோ வைய!...... ஐவகை பாராட்டி னாய்மற் றெங்கூந்தற்—செய்வினை பாராட் டினையோ வைய!...... தாமரைப் பாசரும் பேய்க்கு மிளமுலை பாராட்டினாய்மற் றெம் மார்பிற்—றளர்முலை பாராட் டினையோ வைய!" எனவரும் பகுதிகள், நேரேதரும் பொருளை ஐயுற்று, "காமஞ்சான்ற கடைக்கோட்காலை...கிழவனுங் கிழத்தியும்...சிறந் தது பயிற்றல்...பயனாதலின்" முதுமைப் பருவம் எய்தியபோதும் பிரியாமை வேண்டுமென்பது, கூறும் தோழியின் மடமையையும், கேட்குந் தலைவன் இழிதகைமையையும் இல்லறத்தின் உயரிய நோக்கம் இஃதெனக்கூறும் ஆன்றோருரைக்கு மாறுபாட்டை யும் புலப்படுத்துக் கடியத்தக்கதாதலின், நல்லிசைப் புலமைத் தொல்லாசிரியர் அங்ஙனங்கூறுவாரல்லர் எனத்துணிந்து, இழுக் கம் ஒன்றும் இன்றாமாறு வேறுபொருள் கூறுகின்றார். "பல் லின் பறிமுறை பாராட்டினை: செறிமுறை பாராட்டினையோ: எனமாற்றி, "பல்லினுடைய விழுந்தெழுந்த முறைமையினை யுடைய இளம்பருவத்தை இதற்கு முன்பு பாராட்டிவிட்டாய்; அப்பருவம் ஒழிந்து: நறிய முல்லையினது தன்னிலொத்த முகையை ஒக்கும்படி நிரைத்த செறிந்த முறைமையாகிய நுகர்ச் சிக்குரிய இளமைப்பருவமெல்லாம் முற்றப்பாராட்டிவிட்டாயோ? அது செய்திலையே! எனவும், "ஐவகை பாராட்டினாய் மற்றெங் கூந்தற் செய்வினை பாராட்டினையோ வைய" என்பதற்கு "தாயர்" என ஓர் சொல் வருவித்து, அத்தாயர் ஐந்துவகையாக முடித்த கூந்தலின் இளம்பருவத்தைப் பாராட்டிவிட்டாய்...... நீதான் அதனிடத்துச் செய்புந்தொழில்களை முற்றச்செய்து பாராட்டிவிட்டாயோ?' அது செய்திலையே! எனவும், "இளமுலை பாராட்டினா யெம்மார்பிற்—றளர்முலை பாராட்டினையோ வைய" என்பதற்கு, தாமரையினது பசிய அரும்பையொக்கும் எம் முடைய ஊற்றின்பம் மிகவுமில்லாத இளமுலையை இதற்குமுன்பு பாராட்டிவிட்டாய்; அப்பருவம் ஒழிந்து ஊற்றின்பத்தை மிகவு முடைய எந்தின நிலைமை சிறிதுசாய்ந்த முலையினையுடைய மிக்க

இளமைப் பருவமெல்லாம் முற்றப்பாராட்டிவிட்டாயோ? அது செய்திலையே! என்றும், வேண்டியவாறு இடைப்பிற வருவித்து முற்றமுடித்து விளக்கியமாட்சி, கற்றோர்கருத்திலகலாது காணி கொள்ளுந்தகையதே. கூந்தல் தாயர் முடித்ததைத் தலைவன் மகிழ்ந்துபாராட்டியதல்லாது தானே கைப்படமுடித்துக் கோலம் புனைந்து அவ்வணையிற்றுயின்று இன்பம் நல்கவில்லையே எனக் குறிக்கின்றனளாம் தோழி. இங்ஙனங்கூறி, "காமஞ்சான்ற" என்னும் சூத்திரத்தை எடுத்துக்காட்டித் "தலைவனுந் தலைவியும் மூப்பு வருவதன்முன் துறப்பாரென்றலிற் பல் (முளைத்து விழுந்து பின் முளைத்து) விழும்பருவத்தும் நரைவரும் பருவத்தும் (முலை திரங்கவும்) இல்லறஞ் செய்திருப்பாரென்றல் பொருந்தாமை புணர்க" எனக்குறிக்கின்றார். என்னே இவர்தம் ஆழ்ந்த கருத்து! வியக்கத்தக்க மெய்புணர்வு!! ஆ! ஆ! கற்றோர் மகிழ்ந்தாடும் கல்விக்கடலின் கரையற்ற பெருமை! இவரால் காட்டப்பட்ட மாட்சி!!

24-வது கவியில்— இன்றீங்கிளவியாய்! எனுஞ் சொற்களுக்கு உரை, ஒருபொருட் பன்மொழி எனினும் பொருந்துவதாக அங்ஙனங்கூறாது அதனை விகற்பித்து இன்+கிளவி; தீம்+கிளவி; என இரண்டாக்கி, இனியகிளவி—பின்னர்க்காரியத்தில் இனிய (அஃதாவது பின் நற்பயன்தருதற்குரிய) சொல் என்றும், தீங்கிளவி—கேட்டதுணையானே (அதாவது முன்னே கேட்பதற்கு மாத்திரம் இன்பம் தரும்சொல் என்றும் கூறி, மக்களினது சொற்கள் பயன்தருவன இவ்விரண்டு வகையானும் ஆம். இருவகையினும் பயன்படும் சொற்களே கேட்டற்குரியன என நாம் கருதுமாறுரைக்கின்றார்.

தொடரும்.

தமிழர் கடமை.

திரு. S. இராமச்சந்திரன் அவர்கள், B. A., மாணவர்,
அரசியலார் கல்லூரி, கும்பகோணம்.

"அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்."

1. உலக முழுவதும் பல்வேறு துறைகளிலும் சிறப்புற்றோங்கவும், அவ்வாறு அவைகள் சிறப்புற்றோங்கிடும் செய்தி செவியிடத் தொலிக்கவும், அங்ஙனம் சிறப்புற்றோர்கள் நம் கண்முன் நிற்கவும், நம் தமிழ் மக்கள் துயில் நீத்தெழுவதற்குத் தினையளவும் முயலாதிருக்கின்றனர். "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்—தோன்றலிற் றோன்றாமை நன்று" என்ற மறைமொழியையும் மறந்தனர் போலும்! பிறர் புகழொலியாகிய பேரொலி யனைத்தும் தங்களைப் படுக்கையை விட்டெழுப்பும் முரசொலி யென்றுணராது, தங்களைத் துயிலுறச் செய்யும் பாட்டொலி யெனக்கருதி, மீண்டும் அயர்ந்துறங்கல் அறிவுடையோர் செயலன்று. நாகரிக முதிர்ந்த மேன்மக்கள்பாற் காணப்படும் சீரிய குணங்களாகவும், நாகரிகம் தோன்றுவதற்கு இன்றியமையாத அடிப்படைகளாகவும் விளங்கும் தம் தாய்நாட்டன்பு, தம் தாய்மொழிப்பற்று, தமது சமய உறுதிப்பாடு என்னும் இம்மூன்றனுள் நாம் இக்காலத்து எதனை உற்றவர்களாக விளங்குகிறோம்? அரிச்சந்திர புராணத்தின் இறுதியில் பொய் ஒன்று கூறி மீட்சிபெறுமாறு கௌசிகனால் அரிச்சந்திரன் மிக நெருக்கப்பட்ட காலையில், பின்னவன் கூற்றாகவுள்ள செய்யுளில் சிலவற்றைக் கூட்டிக் குறைத்து,

"பதியி ழந்தனம் தாய்மொழிப் பற்றொடும் படைத்த
நிதியி ழந்தன மினிநமக் குளதென நினைக்கும்

கதியொன் றேயுள ததனையு மிழந்திடக் காலம்
புதிது தோன்றிடில் மதிப்பரோ பிறரெமைப் பொருட்டாய்.''

என்று ஓர் பெரியார் மொழிந்தவாறு விழிநீர் பெருகக் கலங்கத் தான் வேண்டும்.

2. மேற்கூறிய மூன்றனுள் நடுவணைய்த இருதலைபும் எய்தும். தம் மொழியின் இடையறாப் பயிற்சியாலும், தாய் மொழியின் கலைப் பெருக்கத்தாலும், போற்றலாலுமே மேனாட்டார் மேன்மை யுற்றது இதை அறிவுறுத்தும். மன்பதைத் தொகுதி தனக்குரிய மாண்புநிலை அடையப் பல்வேறு துறைகளில் பலர் முயன்று வருகின்றார்களானாலும், இலக்கிய உணர்வு இயங்காமல் நிகழ்கின்ற வாழ்க்கை நிலைபெறாது என்னுங் கொள்கையைச் சொல்லளவிலே னும் மறப்பார் யாருமிலர். எனவே, நம் தமிழகம் முன்னேற்ற மடையத் தாய்மொழி வளர்ச்சி இன்றியமையாதது. இங்ஙன மாகத் தமிழ் மொழியில் கலைப்பெருக்க மில்லையாதலும், அறிவு நூல் கள் மலிந்திலவாதலும் ஒருபுறமிருக்க, நம் தமிழ் மக்களும் அதைப் போற்றாது சீர்குலையவிட்டிருக்கின்றார்கள். இருகோடி மக்கள் ஆகிய தமிழர் ஒவ்வொருவரும் நம் பண்டைப் பெரியோரது அறிவு, ஆண்மை, வீரம், ஒழுக்கம், வாழ்வுகளை அடைந்து உய்ய வேண்டின், நம் தாய் மொழியாகிய தமிழ்மொழி, பண்டு அடைந் திருந்த பெருமையை மீண்டும் அடைய வேண்டும். மேலும், காலத்திற்கேற்ற புதுக்கலைகளையும், அறிவு நூல்களையும் நம்மொழி அடைதல் வேண்டும். எனவே, இக் கட்டுரையில், இத்துறையில் பாடுபட்ட ஆன்றோர்களின் அறிவுரைகளைப் பற்றுக் கோடாகக் கொண்டு, தமிழகத்திற் பிறந்தோர் ஒவ்வொருவரும், தம்மொழி வளர்ச்சிக்குச் செய்யவேண்டிய கடமைகளில் சிலவற்றைக் குறிக்க முன்வந்துள்ளேன். முழுமுதற் கடவுள் முன்னிற்பதாக.

3. இவ்வமயத்தில் எம்மொழியாளர்க்குங் கூறவேண்டிய நன்மொழி யொன்றுண்டு. இருப்பனவால் என்ன பயன் உண்டாயிற்றென்பதைச் சிறிதளவும் சிந்தியாது, இல்லாதன இருந்தால் நலமுண்டு என்று இழுத்துவைத்துப் பிதற்றுவதே இக்காலத் தொழிலாகிவிட்டது. இதைத் தற்கால இயக்கங்கள்

யாவற்றிலும் காணலாம். இத்தமிழகம் முன்னேற்றமடைய வேண்டுமானுல் யாவரும் "இந்தி" மொழியைப் பயிலவேண்டு மென்றும் ஒரு சாரார் கிளம்பியுள்ளார். தாய்மொழியாகிய தமிழ் மொழியாயிற்று ; காளிதாசரும் வால்மீகரும் வளர்த்த வடமொழியாயிற்று ; பள்ளியில் பன்னுட் பயின்ற ஆங்கில மாயிற்று ; இனி "இந்தி" ஒன்று இல்லாக் குறைவால் இந்நாடு துயருறுகிறது ! கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர், ஹோமர் முதலிய புலவர்தம் காவியங்கள் போன்ற நூல்கள் அம் மொழியில் உளவோ இலவோ யாம் அறியேம். ஆனுல் அம் மொழியின் இலக்கியங்களின் அருமை பெருமைகளை அறிந்து அனுபவிக்காது கெட்டோமென்று அல்லலுறுவார் யாவரையும் இதுவரையில் காணேம். நன்று. இந்தியர்களுக்குள் ஒற்றுமை யில்லாதது பொதுவாக ஒரு மொழியில்லாக் குறைவில் ஏற்படுவ தென்பர். அவ்விதமாயின் ஒரேமொழி, மேலும் தாய்மொழி, பேசுகின்ற மக்களிடையே அவ்வொற்றுமையைக் காணக்கூட வில்லையே ? இவ்வொற்றுமை இன்மையை இவர் அறியவில்லை போலும் ! இத்தகைய மயக்கங்களுக்கெல்லாம் மூலகாரணமாக இருப்பது முறைகள் மாறினுல் வாழ்வின் வளமனைத்தும் வந்தெய் தும் என்னுமோர் கோட்பாடு. மனம்மாறினுல், மனத்திற்கேற்ற முறைகள் தாமே வந்தமையும் என்னும் உண்மை நினைவிலில்லை போலும்

4. "கைப்புண்ணிற்குக் கண்ணுடி வேண்டா", என்றவாறு தற்சமயம் தமிழ்மொழி மிகவும் சீர்கேடான நிலையிலிருப்பதை விரிக்காமலே ஒவ்வொரு தமிழ்மகனும் அறிவான். பிறமொழி களில் அறிவு நூல்கள் மலிந்துகிடக்க, நம்மொழியில் அவை பெரிதும் இல்லாமலிருப்பதே நம்மொழியின் குறைவை அறிவுறுத் தும். இவ்வாறு நம்மொழி தாழ்வடைதற்குத் துணையாக நின்றது, நம்மவரது ஊக்கக் குறைவேயன்றி வேறுளதோ என்று விளம்புமிடத்து, அயல் நாட்டினராலும் அயல்நாட்டு மொழி களாலுமே நம்மொழி தாழ்வடைந்தது என்று தடித்துகூற ஒரு சிலர் முன்வருவர். அவர்களுக்கு விடையுமுளது. அது

யாதெனின், மேற்கூறியவற்றால் தமிழ்மொழி வளர்ச்சியில் ஏற்படும் இடையூறும் தாழ்வும், தற்காலத்திய போலிப் புலவர்களால் ஏற்படும் இடையூற்றையும் தாழ்வையும்போல் அவ்வளவு மிக்கன அல்ல. ஏனெனில், இப்போலிப் புலவர்கள், இலக்கணத்தில் சில சூத்திரங்களையும், நிகண்டு, இராமாயணம், பாரதம் இவைகளிற் சில செய்யுட்களையும் மனப்பாடம் செய்த அளவிலே, தாம் பெரும் புலவர்கள் எனக் கூறிக்கொள்வதோடு நில்லாமல், 'எழுந்த ஞாயிறு வீழ்வதன்முன் கம்பன் பாடியது எழுநூறே, மயிர் வினைஞன் தனக்கு மயிர் போக்குவதற்குள் மகாவித்துவான் பிள்ளையவர்கள் பாடியது நூறே, யாமோ எண்ணிறந்தன பாடிடுவோம்' எனச் சிறப்பித்துக்கொண்டு, கவி பாடத்தொடங்கி விடுகிறார்கள். கவிபாட விருப்பு ஏற்பட்டதும், பருப்பு, நெருப்பு, செருப்பு என்ற எதுகைகளும் அகப்படாமல் போவதில்லை. "நாயும் நயக்கும் நல்லெழில் நங்கையர்," என்பவை போன்ற முற்றுமோனை யமைந்த அடிகளும் முன்வந்து நிற்க முரண்படுவதுமில்லை. மனோபாவம், கற்பனா சக்தி இவைகள் காததூரமே. "கல்லாதான் சொற் காமுறுதல் முலையிரண்டும்- இல்லாதாள் பெண்காமுற் றற்று," என்ற பொய்யா மொழியும் புலனாகவில்லை போலும். பல்கலைக் கழகத்தாரால் பள்ளிமாணவர்க்கு ஏற்படுத்தப்படும் உரை நடை நூல்களையும், செய்யுட் பாடங்களுக்குச் சில புலவர்களால் எழுதப்பெறும் குறிப்புரைகளையும், விரிவுரைகளையும் நோக்குவோர்க்கு, இப்புலவர்தம் புலமை புலப்படாது போகாது. அந்தோ! இவர்களால் தமிழ்மொழி படும் சின்னம் செப்பற் பாலதன்று. இவைகளெல்லாம் வில்லியும் கூத்தனுமில்லாக் குறையினால் விளைந்தவையன்றி வேறல்ல என்பதை விளம்பவும் வேண்டுமோ.

5. இப்புலவர்களால் இயற்றமிழ்தான் சீர்குலைந்து நிற்கின்றது என்றாலோ, மற்ற இரண்டு தமிழ்ப்பிரிவுகளும் இருந்தவிடமே தெரியாதபடி மறைந்துவிட்டன. தமிழ்க்கூத்து நூல்களாகிய "முறுவல்", "சயந்தம்", "செயற்றியம்", "கூத்தநூல்", "குணநூல்", "பரதம்", "பஞ்சபாரதீயம்" முதலியவை நீருக்

கும் நெருப்புக்கும் கறையானுக்கும் செல்லுக்கும் செல்லாய் விட்டன. என்னே! இப்படியா தமிழ்மக்கள் தாய்மொழியைப் போற்றுவது! நாடக நூல்களின் ஏடுகள் ஒன்றும் இல்லாது போகவே, ஒரு சிலர், தமிழர்களுக்கு நாடகம் என்பதே தெரியாது, ஆரியர் வந்து கலந்தபின்னரே அவர்களிடமிருந்து இவர்கள் அதைக் கற்றுக்கொண்டனர் என்றும் கூறுகின்றனர். இப் பகுதியை உணர்த்தும் தமிழுக்கு "நாடகம்" என்ற வடமொழிச் சொல்லையே வழங்கியது இதற்குச் சான்று என்றும் பிதற்றுகின்றனர். (இவர்தம் பேச்சு நமக்கு வியப்பையே பயக்கின்றது. வடமொழியில் "வாய்" என்பதற்குச் சொல்லே கிடையாது; ஆகையால் நாம் வடமொழியாளர்க்கே வாய் இல்லை என்று கூறிவிடலாமா? நாடகத்திற்குக் "கூத்து" என்ற சொல்லையே முன்பு தமிழர் வழங்கிவந்தனர். "கூத்து" என்பது பொது, "நாடகம்" என்பது சிறப்பு) நிற்க, எஞ்சிய கொஞ்சமும் வல்லினம் மெல்லினமறியாத நடிகர்களாலும், நாடகாசாரியர்களாலும் எவ்வளவோ சீர்குலைந்த நிலையை அடைந்துவிட்டன. இதைவிட்டு இசைத்தமிழை நோக்குவோமாயின், கண்களில் நீர் பெருகுகிறது; மனம் மங்குகிறது; கைசெயலற மெய் சோர்வடைகின்றது. தமிழ்மொழியாளர்க்கு இசை என்பதே தெரிந்திலது. இசைகளின் பெயர்களெல்லாம் பிறமொழியிலிருப்பதே இதற்குச் சான்று என்று பகருமளவில் வந்துளது. என்ன இவ்வாராய்ச்சியாளர் தம் முடிவு! இசையும் நாடகமும் நம் மொழி தன்னகத்தே பெற்றிருந்தும் நாம் பெற்றிலேம். மற்றும் மெல்லிசைவாய்ந்த தமிழ் இசைநூற்களாகிய "முதுகுருகு", "முதுநாரை", ". இசை நுணுக்கம்" "இந்திரகாளியம்", "பஞ்சமரபு", "பஞ்சபாரதீயம்" முதலியவற்றை அழிவடையவும் விட்டோம். இத்தன்மையராகிய நம்மை எவர் எதுகூறினும் நாம் கேட்க வேண்டியவரே. தமிழ்த்தாயே! தமிழகமே! நீங்கள் இவ்வளவு சீர்குலையவா வேண்டும். கழகமோடமர்ந்த கண்ணுதற் பெரும! நின்னருள் வெள்ளத்தைக் காலமென்னும் வரம்பால் கட்டுண்ண விட்டனையோ? நன்று நன்று நின்செய்கை!

நிற்க, தமிழ்மொழி தாழ்வுறுகிறது; தமிழகம் கீழ்மையுறுகிறது என்று கூறுவோரிடம், நம்மவரிற் சிலர் ஆவேசங் கொண்டவர்போல் பாய்ந்து, "நன்று நும் கூற்று, நாம் பழங் காலத்தில் பெருமையாக வாழ்ந்தோம்; நம்மொழி மாண்புற்றிருந்தது; நம்மொழிக்கு இணையாக வேறு மொழிகளுண்டோ? தன்னேரில்லாத் தண்டமிழ் அல்லவா? அகத்தியன் பயந்த செஞ்சொல் ஆரணங்கல்லவா?, பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்-திருப்பிலே இருந்து வைகை எட்டிலே தவழ்ந்தவள் தமிழ்க் கன்னியன்றோ? கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோடமர்ந்து, பண்ணுறத் தெரிந்து ஆய்ந்தநிப் பசுந்தமிழன்றோ? தமர நீர்ப்புவனமீன்றுள் தடாதகா தேவியானதும், தனி முதல் ஒருவன் சௌந்திர மாறனானதும், குமரவேள் வழுதி உக்கிரன் எனப் பெயர்கொண்டதும், தண்டமிழ் மதுரம் கூட்டுணவெழுந்த வேட்கையால் எனில் இக் கொழுந்தமிழ்ப் பெருமையாரறிவார்? தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை—உண்டபாலனை அழைத்ததும், எலும்பு பெண்ணுரு வாக்கியதும்............." தமிழ்மொழியன்றோ என்றும், ஆங்கிலம் ஆரியம் ஈங்கிலாக்காலத்துப் பாங்கொடு பாண்டியர் தாங்கியும், தீந்தமிழ்க் கலையுடன் திகழ்ந்ததும் தமிழன்றோ? என்னும் எதுகைமோனையோடு சொல்லமைத்துப் புகழ்ந்தும், இவ்விதம் தாங்கள் புகழ்ந்து பேசிவிட்டதனாலேயே தமிழும் தமிழகமும் உயர்வடைந்து விட்டனவென்றும் அயர் வடைந்து விடுகின்றனர். நம் பண்டைச் சீரிய பெருமைகளைக் கூறுவதில் எமக்கு அருவருப்பின்று. அவ்விதம் புகழமைந்த தமிழகந்தான்; தமிழ்மொழிதான்; வளங்கள் நிறைந்த தமிழ் நாடுதான்; வண்மை மிகுந்த தமிழ் நாடுதான்; வீரம் செறிந்த தமிழ் நாடுதான்; மறைகள் மலிந்த தமிழ் நாடுதான்; நீதிகள் நிறைந்த தமிழ்நாடுதான்; "முல்லைக்குத்தேரும் மயிலுக்குப் போர்வையும் இரவாமலீந்த இறைவராண்ட" தமிழ் நாடுதான்; யான் இச்செருவில் தோற்பேனாயின், "பொருந்திய என்னிழல் வாழ்நர் சென்னிழல் காணாது, கொடியன் எம்மிறை எனக் கண்ணீர் பரப்பிக் குடிபழி தூற்றும் கோலோனாக" என்று பழி

யஞ்சின மன்னர்களையும், "யானோ அரசன்? யானேகள்வன் மன்பதை காக்கும் தென்புலங்காவல்—என் முதற் பிழைத்தது கெடுக என் ஆயுள்". என்றுரைத்து அரியணையிலேயே உயிர்நீத்த நீதியாளர்களையும் பெற்றிருந்த தமிழ் நாடுதான்; தொல்காப்பியர், இளங்கோவடிகள், கம்பர், சேக்கிழார், நால்வர் இவர்கள் பிறந்த தமிழ்நாடுதான், "வள்ளுவன் தன்னை உலகினுக்கேதந்து வான் புகழ்கொண்ட தமிழ்நாடே;" தொல்காப்பியம், திருக்குறள், ஐம் பெருங்காப்பியம் முதலிய அரும் பெரும் நூல்களைத் தன்னகத்தே யுடைய தமிழ்மொழிதான். ஆனால் நம் முன்னோர் பெருமைக் கேற்ப நாம் நடந்துகொள்ளுகின்றோமா? அல்லது அவ்விதம் நடக்க ஏதாவது முயற்சி எடுத்துக்கொள்ளுகின்றோமா? அவ்வளவு பெருமைவாய்ந்த நூல்களைப்பயின்றுவது பயன்பெற எண்ணு கிறோமா? என்பதுதான் கேள்வி. திருவள்ளுவர் நூல் செய்தது நாம் அந்நூலிற் கூறியபடி கடைப்பிடிப்போம் என்ற நோக்கத்தோ டன்றி "நம்மவராகிய திருவள்ளுவர் செய்த நூல் எவ்வளவு சிறப்புடையது பாருங்கள்! உலகத்திலுள்ள பதினெட்டு மொழி களிலும் அது மொழிபெயர்க்கப்பெற்றுத் திகழ்கிறது" என்று பேச்சளவில் மகிழ்ச்சியுறுதற்கன்றே. இவர்கள் செய்கை "கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்—நெல்லினுட் பிறந்த பதரா கும்மே" என்ற நறுந்தொகையின் நல்லுரையை நினைவூட்டுவ தன்றி வேறன்றே.

7. நம்மை ஆளுபவர்கள் நம் தாய்மொழியைத் தள்ளிவிட ஆணையிட்டிலர். "அரசியல் மொழியைக் கற்கவேண்டும்" என்ற உரையில் தாய்மொழியை விட்டுவிடவேண்டுமென்ற உள்ளுறை இல்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. 'தாய்மொழியை ஊன்றிக் கல்லா ஒருவன் பிறமொழிகளில் புலமை யடைவது எளியதன்று" என்று ஒரு அறிஞர் கூறியுள்ளார். இதற்குச் சான்றாகத் தாய்மொழியை நன்குகற்ற பலர், பிறமொழிகளை எளிதில் கற்றுப் பெரும்புலமை யடைந்திருக்கின்றனர். ஏனைய நாடுகளில் ஒரு சிலரே பிறநாட்டு ஒழுக்க வழக்கங்களையும், கலை களையும், அறிவு நூல்களையும், வரலாற்று நூல்களையும், செயல்களை

யும் கற்பதற்கு, அந்நாட்டு மொழிகளைக் கற்பதல்லாமல் எல்லோரும் பிறமொழிகளைக் கற்பது அருமை. அவர்கள் பிறநாட்டுச் செய்திகளையெல்லாம் தத்தம் தாய்மொழியில் விளங்க எழுதிக் கற்றார், கல்லார் யாவரும் எளிதில் உணரச்செய்கின்றனர். எனவே பிறநாட்டு வரலாறுகளையும், யாவரும் உணர்ந்தவர்களாய் ஒத்த உணர்ச்சி பெற்றவர்களாய்ப் புகழொடு பொலிகின்றனர்.

8. நமது மொழியும் நாமும் முன்னேறுவதென்பது ஏதோ ஒரு சிலர் கையிலிருப்பதாக எண்ணங்கொண்டு சிலர் வீணே காலத்தைக் கழிக்கின்றனர். உடலின் நலத்திற்கும் வளத்திற்கும் ஒவ்வொரு உறுப்பின் உதவியும் எவ்வாறு வேண்டப்படுகின்றதோ, அவ்விதமே தமிழகம் முன்னேற்றமடைய ஒவ்வொரு தமிழ்மகனும் ஒவ்வொரு வகையில் உதவிபுரியவேண்டியவனாவன். அவரவர்கள் தத்தம் கடமையை நன்கு தெரிந்து செவ்வனே செய்யவேண்டும். ஆகையால் தமிழக முன்னேற்றத்திற்கு இன்றியமையாததான தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய கடமைகளிற் சிலவற்றை இனி வரைவாம்.

9. நம்முன்னோர் தமிழ்மொழியைத் தெய்வம் என்றே போற்றிவந்தனர். நாம் அதனைப் போற்றாது இகழ்ந்து வருகின்றோம். நம் முன்னோர் மிகு பாடுபட்டுத் தேடிவைத்த செல்வமாகிய அரும் பெரும் நூல்களை நாம் கண்ணெடுத்துப் பார்க்கின்றோமில்லை. அவற்றின் சீரிய பொருள்களைக் கூறுவோர்க்குச் செவி சாய்க்கின்றோமில்லை. அல்லது அவ்வரிய நூல்களைப் பணம் செலவிட்டாவது பாதுகாக்கின்றோமில்லை. என்னே நம் கருத்தும் காரியமும். "செவிக்குண வில்லாத போழ்தே சிறிது வயிற்றுக்கும் ஈயப் படும்" என்றார் பொய்யாமொழியார். மற்றும் நம் செய்கையை நோக்குவோர், "தமிழ்மைந்தர் இத்திறம் நன்று நன்று" என நகை விளைப்பர் என்பதை நாம் சிறிதளவாவது எண்ண வேண்டாமா? முன்னரே பலப்பல நூல்களை இழந்தோம்; இன்னும் இழந்து வருகிறோம். எனவே நம் முன்னோர் நமக்குத் தேடிவைத்த அருஞ்செல்வங்களை இழந்து

விடாது காப்பாற்றுதல் நம் முதற்கடமையாகும். முற்காலத்தில் சிலர் தமிழ் எட்டுச் சுவடிகளைச் சேர்த்துவைத்திருந்தார்கள். இப்போது அவர்கள் வழிவந்தோர் அவைகளின் பெரும்பான்மையைச் சிதல்வாய்க் கொடுத்தும், நீரிலிட்டும், நெருப்பிலிட்டும் ஒழித்துவிட்டார்கள். ஒழிந்ததுபோக எஞ்சியவற்றையாவது, ஊக்கத்துடன் தேடி ஆராய்ந்து வெளியிடவேண்டும். இதற்கு ஒவ்வொரு தமிழ் மகனும் உதவிபுரிய வேண்டியவனாவன்.

10. தமிழ்ப் புலவர்களாயுள்ளவர்கள் பண்டைத் தமிழ் நூற்களை நன்காராய்ந்து அவ்வவற்றின் திட்பநுட்பங்களை யாவரும் உணருமாறு தெள்ளிய நடையில் வெளியிட வேண்டும். மேலும் சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் தமிழ் நூற்களை யாவரும் விரும்பிப்பயில ஆவலுறும் வண்ணம், அவைகளின் அருமை பெருமைகளைப்பற்றிக் கற்றோரும் மற்றோரும் விரும்பும் நடையில் சொற் பொழிவுகள் நிகழ்த்த வேண்டும்.

11. இவ்விதம் ஒரு சாரர் தமிழ்மொழியின் பெருமையைத் தெரிவிக்க, பிறமொழிவல்லார் அவ்வம்மொழியிலுள்ள அரிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும். அறிவு நூல்களில் தேர்ச்சியுற்றவர்கள் அவரவர்கள் தேர்ந்துள்ள கலைகளைத் தமிழாக்க வேண்டும். இவ்விதம், பல்வேறு மொழிகளிலுள்ள உயர் நூல்களையெல்லாம் நம் தமிழில் மொழிபெயர்த்து யாவரும் அறிந்து பயனுறும் வண்ணம் வெளியிடவேண்டும். வங்காளிகள் சில்லாண்டுகளுக்குள் மேனாட்டு அரிய நூல்களையெல்லாம் தங்கள் மொழியில் எழுதிவிட்டார்கள். இவ்வாறு மொழி பெயர்த்தலுக்குச் செய்யுள்நடையைவிட உரைநடையே யாவருக்கும் பயன்படக்கூடியதாகும். மொழி பெயர்ப்பாளர்களுக்கு ஈண்டு உரைப்பன சில உள.

12. மொழிபெயர்ப்பாளர்கள் கூடியவரையில் வேற்று மொழி விரவாத தனித்தமிழ் நடையையே பின்பற்றவேண்டும். ஈண்டுக் கூறுவது வேற்றுமொழியிடத்தில் அருவருப்பால் எழுந்ததன்று. இதுபோது பெரும்பான்மையாய் வழங்கும் பிறமொழி

கலந்த தமிழ்நடை தமிழ்மொழிக்குத் திணையளவும் நன்மையைத் தாத்தக்கதல்லாததோடு, வழங்குவோரது உள்ள உயர்வையும் தன்னேக்கத்தையும் கெடுக்கக்கூடியது. இதைக் குறிக்குமிடத் துப் பிறமொழிச் சொற்களைக் கையாள்பவர் அச்சொற்கள் மக்கள் பேச்சு வழக்கில் உள்ளவை என்று அமைவு கூறுநிற்பர். எழுது வோரும், படிப்போரும் ஒருவராய் இருத்தல் இல்லை. அதனுல் ஒருவர் ஒன்றெழுதினுல் அதனைப் பிறரெல்லாம் படித்தறிந்து பயன்பெற வேண்டுமென்ற நோக்கத்துடனே எழுதுகின்றவர்க ளாதல் வேண்டும். இவ்வாறு பேச்சு வழக்கிலுள்ள பிறமொழிச் சொற்களை நூல் வழக்கில்கொண்டு வருவதால் நம்முடைய பழஞ் சொற்கள் மறைந்துவிடும். பொதுவான சொற்கள் மறைந்து வழக்குச் சொற்கள் பெருகுமாயின், ஒரு சாரர் வழக்குச்சொல் மற்ருேரது வழக்குச்சொல்லினும் மாறுபட்டிருப்பதால் ஒருவர் எழுதியநூல் பிறிதொருவருக்குப் புலனுகாது நலமற்றதாகும்.

13. இவர்களை விடுத்து மறுபுறம் திரும்புவோமாயின் புதுக் கலைகளை உணர்த்தும் சொற்கள் தமிழ்மொழியில் இல்லாதபடியால் அக்கலைகளின் கருத்தைத் தெரிவிக்கப் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துவது இன்றியமையாததென்பர். இவர்தம் கூற்றில் பெரும்பாலும் உண்மை உளது. உலகத்தின்கண் நாகரிக முதிர்ச் சிக்குத் தக்கவாறு மொழியும் ஒத்தியங்கித் திருந்தி முதிர்ச்சி யடைதல் வேண்டும். உள்ளத்தியல்பு விரியுந்தோறும், புதுக் கருத்துக்களும் பொருண்மைகளும் கண்டுபிடிக்கப்படுந்தோறும், வேற்றுநாடுகளிலிருந்து புதியபொருள்கள் உட்புகுந்தோறும், மொழியும் முதிர்ந்து சீர்திருந்துதலே சிறப்புடைத்து. அங்ஙனம் முதிரும் மொழியே செழிப்புள்ள மொழியாய்த்திகழும். முதி ராதமொழி நிலைத்துநில்லாது நாளடைவில் காலஞ்சென்றுவிடும். இது இவ்விதமிருக்க, நம் தமிழ்மொழியின் வளர்ச்சி நாகரிக வளர்ச்சிக்குத் தக்கவாறு அமையவில்லை. கடவுளால் ஆக்கப் பட்டமொழி என்பது ஒருபுறமிருக்க, மக்களின் ஆக்கப் பொருளாகிய மொழியின் கண்ணே மக்கள் கருத்துக்களின் போக்குக்கியைந்தபடி யெல்லாச் சொற்களும் அகப்படுமென்று

எதிர்பார்த்தல் எண்ணத்தக்கதே. அவரவர்களும் ஆராய்ந்தே புதுச்சொற்கள் அமைத்தல் வேண்டும். தமிழ் மொழியில் தக்க சொற்கள் இல்லையே என்று பிறமொழிச் சொற்களைப் பயன் படுத்துவதைவிட, புதுக்கலைக் கருத்துக்கள் முதலியவற்றைத் தமிழில் எழுதும்பொழுது, அக் கலைக்கருத்துப்பொருள் எத் தன்மையது எவ்வினையது என்பவற்றை உணர்ந்து, அந்தந்தத் திறம் தன்மை வினை முதலியவற்றைக் குறிக்கும் தமிழ்ச் சொற் களைத் தனித்தேனும் சேர்த்தேனும் அவற்றைக் குறிப்பதற்கு அமைப்பது நன்று. சிலர் ஆங்கிலக்கருத்துக்களை ஏற்ற சொற்கள் தமிழில் அகப்படாவிடத்து வடமொழிச் சொற்களின் வழியாக அவற்றைத் தமிழில் வெளியிடுகின்றனர். இது தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவதொக்கும். ஆங்கிலச் சொற்களையே திசைச் சொற்களாக மேற்கொள்ளுதலே ஏற்புடைத்து.

14. தமிழ்மொழியில் சொற்கள் மலிந்து கிடப்பதால், இன்றியமையாத இடங்களில் வேற்றுமொழிச் சொற்களைக் கை யாள வேண்டுமேயன்றி, நூல் முழுதும் பிறமொழிச் சொற் களையே புகுத்துத் தமிழின் நிலைகுலைய எழுதுவது புலமையின் பாற்பட்டதன்று. தமிழ்மொழிச் சொற்களைக்கொண்டே புதுக் கலைகளின் பெயரையும் கருத்தையும் உணர்த்துவதால் அவற்றைக் கற்போருக்குப் பொருள் விளங்குவதுடன் அவர்தம் உள்ளம் உயர்ந்து, தன்னுணர்ச்சி பெருகும். மாந்தர் மேம்பாடடைவதற்கு விளங்கிய உள்ளமும் விரிந்த தன்னுணர்ச்சியுமே இன்றியமை யாதவை. அடிப்படையான மொழிப்பயிற்சியிலேயே தன்னுணர்ச் சி பின்னுணர்ச்சியாயின் நாம் பிறவழிகளில் பெரியோராவது பேய்த்தேரே. விரிந்து பரந்த தொல்காப்பியத்தை நோக்கின், மக்களின் மனப்பாங்கையும், எழுத்திலக்கணத்தையும் எடுத் துரைக்க எழுதிய இந்நூலில் ஏதோ சிலவிடங்களில் நாலைந்து பிறமொழிச் சொற்களே அகப்படுகின்றன. மனிதன் இம்மை யில் அடையவேண்டிய அறம்பொருள் இன்பத்தை அறிவுறுத்த எழுதிய திருக்குறளிலுள்ள இரண்டாயிரத்தறுநூற்றறுபது அடி களில் சுமார் ஐம்பது பிறமொழிச் சொற்களே காணப்படுகின்றன.

மேலும் இச்சொற்கள்யாவும் தற்பவமாகவும் தற்சமமாகவும் (உடன்பிறப்பு, உடன்பாடு) தமிழ் வயமுற்றே விளங்குகின்றன. இவ்விதமிருக்க இக்காலத்தில் தமிழ் எழுத்துக்களைப்பயிலும் சிறூர்களுக்கு முதற்பாடம் எழுதி முடிப்பதற்குள், எத்தனையோ பிறமொழிச் சொற்கள் கையாளப்படுகின்றன.

15. இக்காலத்தில் கற்றவர் தமிழும் மற்றவர் தமிழும் மிகவும் வேறுபடுகின்றன. இருவேறு மொழிகளோ என்று எண்ணவும் இடமுண்டாகி விடும்போல் இருக்கின்றது. இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாடு மிகுந்துகொண்டே போகுமாயின் பண்டிதர் தமிழ் வடமொழியைப்போல் வழக்கற்று நூல் வழக்கில் மட்டும் நின்றுவிடும். மற்றும் பாமரர் தமிழ் தெலுங்கு மலையாளங்கள் போல ஒரு வழிமொழியாய் அமைந்துவிடும். எனவே, பாமரர் தமிழைச் சீர்திருத்துவது இன்றியமையாதது.

16. மற்றவர்களது கடமையாதெனின், மேற்கூறிய நூல்கள் வெளிவருவதற்கும், பரவுவதற்கும் தங்கள் தங்கள் தகுதிக்கேற்பத் துணைபுரியவேண்டும். அரிய நூல்களை வெளியிடுவோர் பெரும் பொருளீட்டும் பேராசையால் நூல்களுக்கு அதிக விலையேற்றி ஏழைகளை அல்லற்படுத்தல் தமிழகத்திற்குச் செய்யும் கடமையாகாது; கொடுமையேயாகும். வருவாயை முதல் நோக்காகக்கொள்ளாது நூல்களைக் குறைந்த விலைக்கே விற்கவேண்டும். நம் தமிழ் மக்கள் வீண் ஆடம்பரங்களில் பொருளைச் செலவிடாது, மேனாட்டினரைப்போல் கல்விக்கழகத்திற்கும், தமிழ் நூல்நிலையங்களுக்கும், தமிழ்நூல்களில் முதன்மையானவற்றை மிகுதியாக அச்சிட்டு இனமாகவும் குறைந்த விலைக்கும் வழங்குவதற்கும் பொருளைச் செலவிடவேண்டும். வெளியிடும் நூல்களை யாவரும் ஆவலுடன் வாங்கி, வெளியிடுவோர்க்கு ஊக்கத்தை உண்டாக்குவதோடு, தாம் அவைகளைப் பயின்று பயனையுமடைய வேண்டும். திருவள்ளுவர், கம்பர், சேக்கிழார் முதலிய புலவர்கள் பிறந்த நாடாக இருந்து தமிழ்நாடு சிறப்புற்றது போதும். இனி அவர்கள் நூல்களைப் பயிலும் நாடாகமாறிச் சிறப்புற வேண்டும். திருக்குறளை, பிறமொழிகளில் அம்மொழியாளர்

மொழிபெயர்த்துக் கொண்டதால் நாம் அடைந்த புகழ் போதும். இனி அதை ஓதி உணர்ந்துயர்ந்தவர்களாகிப் புகழ்பெற வேண்டும். நம் நாட்டில் தொல்காப்பியம், கம்பராமாயணம், பெரியபுராணம், பாரதம் முதலிய அரிய பெரிய நூல்களையும், அவைகளுக்கு உரை நூல்களையும் பதித்து வெளியிட்ட தமிழ்ப்புலவர்களும் பதிப்பாளர்களும் கைப்பொருள்களையெல்லாம் இழந்து வறிஞரானார்கள் என்பது யாவரும் அறிந்ததே. அவர்கள்பட்ட துன்பமெல்லாம் நூல்களை வாங்குந் தகுதியுடையோரும் அவற்றை வாங்காதிருந்ததால் ஏற்பட்டவையன்றி வேறல்ல. நிற்க, நூல்களை வாங்கிப் போற்றாததாலல்லவா பல அரிய நூல்கள் பதிப்பிக்கப்படாமல் அழிந்துபோயின? மேலும் அறிவாளர்கள் வழியாகப் புதிய பல ஆராய்ச்சி நூல்களும் அறிவு நூல்களும் வெளிவரக்கூடாமல் போகின்றன. மேனாடுகளில் ஒருவர் ஒரு சிறு நூல் எழுதி அதற்கு எவ்வளவு அதிக விலை கூறினாலும் அந்நாட்டார் அதை உடனே வாங்கிப் போற்றுகின்றனர். பிறமொழியாளர்க்குத் தங்கள் மொழியிலுள்ள பற்றில் நூற்றில் ஒருபங்கு கூட நம் தமிழர்களுக்குத் தாய்மொழியில் இல்லை என்று யாவரும் நகைக்கிறார்கள். "மானங்கெடவரின் உயிர்வாழ்தல் நனிஇன்னா" என்றும், "மானங்கெடவரின் உயிர் விடுதல் முன்னினிதே" என்றும் கூறியது நம் தமிழ் மக்களைத் தவிர்த்துப்போலும். பிற்காலக்கவியரசராகிய பாரதியார்

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்குங்காணோம்!
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சிசொலப் பான்மைகெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல்நன்றோ? சொல்லீர்
தேமதுரத் தமிழோசை உலகனைத்தும் செழிக்கும்வகை செய்தல்வேண்டும்"

என்ற வீரமொழியையாவது கடைப்பிடிக்க வேண்டாமா?

17. மேனாடுகளில் நூல் நிலையங்களை உயிரினும் சிறந்ததாய்ப் போற்றிவருகின்றனர். எல்லா வகையான நூல்களும்

நிரம்பிய பொது நூல் நிலையங்களைப் பல்வேறு இடங்களில் நிறுவி இருக்கிறார்கள். மேலும் ஒவ்வொரு குடும்பத்திலும் தனித்தனி நூல் நிலையங்களைப் பார்க்கலாமென்று, ஆங்குச் சென்றுவந்தோர் கூறக்கேட்டுள்ளேன். நூல் நிலையங்களாலேதான் நூற் பாது காப்பு ஏற்படும். நம் நாட்டில் முற்காலத்தில் சிலர் தமிழ் ஏட்டுச் சுவடிகளைச் சேர்த்துவைத்திருந்தார்கள். இப்போது அவர்கள் வழிவந்தோர் அவைகளை நீரிலிட்டும் நெருப்பிலிட்டும் ஒழித்து விட்டார்கள் என்று முன்னரே கூறினோம். ஆகவே பல நூல்களை இழந்துவிட்டோம். நம் பண்டைத் தமிழ்ப்பெருமக்க ளின் அறிவின் பெரும்பகுதியைப் பெற்றிலோம். இவ்விதக் குறைபாடு என்பதே மேனாட்டில் இல்லை. சிறந்த புலவர்களின் கையெழுத்துப் பிரதிகளைக்கூடக் காப்பாற்றுகின்றனர். ஆதலால் நம் தமிழகத்தில் நூல் நிலையக் கிளர்ச்சி ஏற்படவேண்டும். ஒவ் வொருவர் வீட்டிலும் அவரவர்கள் தகுதிக்கேற்ப ஒரு சிறிய நூல்நிலையமாவது தகுந்த முறையில் அமைக்கப்பெறவேண்டும். நூல் நிலையமின்றேல் அறிவு விளக்கம் குன்றும். தாய்மொழி யைப் பேணாத நாடு எதுவோ? அது வறுமைப் படுகுழியில் வீழ்ந்து வாட்டமுறும். தாய்மொழியைப் போற்றுவதாலன்றோ மேல்நாடு எல்லாத்துறைகளிலும் சிறப்புற்ற மேல் நாடாகவே விளங்குகின்றது. அச்சீரிய குணம் நம்மிடத்தில்லாததாலல்லவோ நம் கீழ்நாடு கீழ்நாடாகவே தாழ்கிறது.

18. கல்லூரிகளிலும், உயர்தரப் பாடசாலைகளிலும் தமிழ்ப் புலவர்களா யுள்ளவர்களுக்கு, பிறமொழிகளையும் கலைகளையும் கற்றுக்கொள்ள ஏற்ற வழிகளிருப்பதால், அவர்களெல்லாம் தம் மொழியோடு பிற மொழிகளையும் கலைகளையும் பயின்று விரிந்த அறிவுடையவராய்த் திகழ வேண்டும். இது நிற்க. தமிழ் மக்களுக்கு இனியேனும் நம் பண்டைப் பெருமை நினைவுக்கு வருவதற்கு, பண்டைத் தமிழரசர்கள், தமிழ்ப் பெருமக்கள், புலவர்கள், அக்காலத்திய பழக்க வழக்கங்கள் ஆகிய இவைகளைப் பற்றிய பொருள்களை ஊக்கத்துடன் தேடி ஆராய்ச்சி செய்து வெளியிடவேண்டும். அறிஞர் பலரால் ஆராய்ச்சி நூல்களும்

அறிவு நூல்களும் எழுதப்பட வேண்டும். இவைகளை யெல்லாம் பலருமறிந்து பயன்பெறும் வண்ணம் ஆங்காங்குப் பத்திரிகைகள் பதிப்பிக்கப்பட வேண்டும். பத்திரிகைகளுக்குப் பலராலும் கட்டுரைகள் எழுதப்படவேண்டும். இதுபோது தமிழும் ஆங்கிலமும் நன்கு தேர்ந்த அறிஞர்பலரால் எழுதப்பட்ட கட்டுரைகள் அடங்கிய கிழமைத்தாள்களும், திங்கட்டாள்களும் வெளிவருவதை நோக்கு மிடத்து மகிழ்வுறுகின்றோம். இத்தாள்களுக்கு ஆண்டுக் கையொப்பங்களும் குறைத்தே குறிக்கப் பெற்றுள்ளன. ஒவ்வொரு தமிழ் மகனும் அவைகளில் ஏதாவதொன்றிற்காவது கையொப்பக் காரனாகச் சேரவேண்டும். சில விடங்களில் தாள்கள் தோன்றுவதும் மறைவதுமாக இருக்கின்றன. ஏனைய நாடுகளில் அவ்வாறு அவைகள் தோன்றி அழிவது அரிதினுமரிது. ஆங்கு, சீரிய கருத்துக்களையும் பொருள்களையும் பெற்றிலாப் பத்திரிகைகளும் பல்லாயிரக் கணக்குள்ள கையொப்பக்காரர்களையுடையனவாய் இருக்கின்றன. எனவே தமிழ்ப் பத்திரிகைகளைப்போற்றி ஒவ்வொரு தமிழ் மகனும் தொண்டாற்றவேண்டும். ஆராய்ச்சி நூல்கள் சிலவற்றை எழுதி வெளியிடச் சிலர் முன் வந்திருப்பது தமிழகம் போற்றற்பாலதே. ஈண்டு ஓர் வேண்டுகோள் உளது. ஆராய்ச்சியாளரும், நூல் வெளியிடுவோரும், வைணவ நூலென்றும், சைவநூலென்றும், சைனநூலென்றும் வேறுபாடு பாராட்டாது, நடுநிலை பிறழாது தங்கள் கடமையைச் செவ்வனே செய்ய வேண்டும். எம்மொழியினையும் எவ்வெக் கொள்கையினையும் எவ்வெவரையும் இகழ்ந்து குறைகூறும் கொள்கையை அறவே ஒழிக்கவேண்டும். இன்னும் இக்கட்டுரையில் என் அறிவுக் கெட்டாததால் குறிக்காதுவிட்ட தொண்டுகளையும், அவ்வக் காலத்திற்கேற்ற முறைகளையும் செவ்வனே தெரிந்து, செய்யும் வழியறிந்து செய்யவும் வேண்டும்.

19. தமிழர்க்கும் பிறர்க்கும் இறுதியாக ஓர் வேண்டுகோள் உளது. இதுவே மற்றெல்லாச் செயல்களைக்காட்டிலும் எளியதும் யாவரும் போற்றுவதுமாகும். அஃது யாதெனின் “நுங்களால் அறஞ்செய்ய ஆற்றலில்லா விட்டால், தீயவை செய்யும் திறனையேனும் விட்டுவிடல் வேண்டு” மெனும் பொருளமைந்த

"நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமி னதுதான்
எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற் றுப் படூஉ நெறியுமாதுவே"

என்ற அறவுரையின்படி, தமிழக முன்னேற்றத்திற்குத் தொண்டு புரிய அன்போ ஆற்றலோ தங்களுக்கு இல்லாவிட்டால், அது எங்களுக்குப் பெரிதும் இடையூறு பயப்பதன்று. நுங்களுக்கு இயல்பாயமைந்த வலிகொண்டு, தமிழகத்திற்குச் செய்ய இடிலும் தீங்குகளையேனும் தவிர்ப்பீராயின் அதுவே தமிழகத்திற்குச் செய்யாமற் செய்யும் சீரியதொண்டாம்.

20. தெவிட்டாத செந்தமிழ்த்தேனை யாவரும் மாந்தி மாண்புறவும், தமிழ்மொழி வளர்ச்சியுறவும், தமிழகம் பல்வேறு துறைகளிலும் முன்னேற்றமடையவும், தென்னாடுடைய கண்ணுதற் பெருமான் திருவருள் புரிக.

"திசையனைத்தின் பெருமை யெலாந் தென்றிசையே வென்றேற
மிசை யுலகும் பிறவுலகு மேதினியே தனிவெல்ல
அசைவில் செழுந் தமிழ்வழக்கே யயல்வழக்கின் றுறைவெல்ல
இசைமுழுது மெய்யறிவு மிடங்கொள்ளு நிலைபெருக"

"வைய மீன்றதொன் மக்களு ளத்தினை
கையி னுலுறை காலமி ரிந்திடப்
பைய நாவை யசைத்த பழந்தமிழ்
ஐயை தாடலைக் கொண்டு பணிகுவாம்".

நலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

குரங்கெறி விளங்காய்.

திருவாளர், பண்டிதர், அ. கந்தசாமிப் பிள்ளையவர்கள்,
கும்பகோணம்.

உரையாசிரியர் இளம்பூரணவடிகள் தொல்காப்பியப் பாயிரத்துப் பொதுப்பாயிரத்தின் இலக்கணம் கூறுமிடத்து, ஆசிரியராவார் "மலை, நிலம், பூ, துலாக்கோல்" இவற்றின் நன்மையர்; ஆசிரியர் ஆகாதார் "கழற்பெய்குடம், மடற்பனை, முடத்தெங்கு, குண்டிகைப் பருத்தி" இவற்றின் தன்மையர்; மாணுக்கர் ஆதற்குரியார் "அன்னம், கிளி, நன்னிறம், நெய்யரி, யானை, ஆனேறு" இவற்றின் தன்மையர் எனக்கூறி, மாணுக்கராகும் தகுதியில்லாதார் இத்தன்மையர் எனற்கு உவமையாக

"குரங்கெறி விளங்காய், எருமை, ஆடே,
தோணி யென்றுங் கிவையென மொழிப" எனச் சூத்திரம்

கூறினர்.

இங்குக்கூறிய குரங்கெறி விளங்காய் என்பதுபற்றி நான் அறிந்த சில இப்பகுதியில் எழுதுகிறேன்.

உரையாசிரியர் இந்நால்வர் தன்மையையும் உவமையாகக் கூறினுரேயன்றிப் பொதுத்தன்மையையேனும், அதனை உவமேயத்தோடு பொருத்தியேனும் காட்டிற்றிலர். பின்வந்த ஆசிரியர் நச்சினுர்க்கினியரோ, மலை, நிலம், பூ, துலாக்கோல் என்பவற்றின் பொதுத்தன்மையைச் சூத்திரமாகக் காட்டினர்; கழற்பெய்குடம் முதலியவற்றின் (பொதுத்தன்மை கூருது) தன்மையை உவமேயத்தினிடத்துப் பொருத்திக்காட்டுவாராய் "கழற்

பெய்குடமாவது கொள்வோன் உணர்வு சிறிதாயினும், தான் கற்றதெல்லாம் ஒருங்குணர்த்தல்......'' என உரையால் விளக்கினர். ஏனைய, அன்னம், குரங்கெறி விளங்காய் முதலிய வற்றிற்குப் பொதுத் தன்மையும், அவற்றைஉவமையத்தொடு பொருத்தியறியும் முறையும் இவ்வாறே காண்கவெனக் குறித்த வராய் மாணுக்கர்க்கு உணர்வு பெறுகல் வேண்டி ஒன்றுங்கூறுதே வாளாசென்றனர்.

அன்னம் முதலிய பத்து உவமங்களின் பொதுத்தன்மை யிவையென இலக்கண விளக்க உரைகாரர் கூறுகின்றனர். அவர் கூற்றில், மாணுக்கர் ஆகும் தகுதியிலார் உவமைகளில் எருமையின் தன்மை—

"விலங்கி வீழ்ந்து வெண்ணீ ருழக்கிக்
கலங்கல்செய் தருந்தல் காரா பேற்றே'' எனவும்

ஆட்டின் தன்மை—

"ஒன்றிடை யார வுறினும் குளகு
சென்று சென்றருந்தல் யாட்டின் சீரே'' எனவும்,

தோணியின் தன்மை—

"நிலத்திடை யன்றி நீரிடை யோடாச்
சிறுடை யதுவே தோணி யென்ப'' எனவும் கூறிக்

குரங்கெறி விளங்காயின் தன்மைக்குக்

"கல்லா லெறிந்து கருதுபயன் கொள்வோன்
குரங்கெறி விளங்கா யாமெனக் கூறுப'' என்று கூறினர்.

இவர் இங்குக் கூறி விளக்கியவற்றில் குரங்கெறிவிளங்காய் என்பதே விளங்காமலும் பொருந்தாமலுமிருக்கிறது. இதனை மற்றொரு ஆசிரியர் விளக்குகின்றனர். அவர் மாறனலங்காரக் காரர்; தம் நூலில் மாணுக்கராகாரிவரென்பதை (பாயிரம், சூ-ம் 51)

"ஆடு பந் துறுசுவர், அளந்தறி முகவை,
கோடின் றும்குளன் எனும் குறி யோரே" என்றுவமை யாற்கூறி, அதனோடுடைமையாமல், விளங்காத ஒரு பொருளை விளக்கும் முகத்தால்

"குரங்கெறி விளங்காய் கோள்பவர் போல்வார்
... ...
... ...
கரந்தங் கொருவரைக் கற்கவிட் டுணர்வான்
வருபவர் தமக்கும் வழங்கார் நூலே" (ஷை—52)

என்று கூறித்தெளிவித்தனர்.

இதனுல், குரங்கெறி விளங்காய் எனற்குக் குரங்கெறிவிளங்காய் கோள்வோர் என்பதே பொருளாம். இப்பொருளோடு நோக்கின் பொதுத்தன்மையும் விளங்கி உவமேயத்தோடும் பொருந்தி நிற்கும். இச்சூத்திரத்துக்கு அம் மாறனலங்காரவுரைகாரர் உரைத்த உரையே இதனை நன்கு தெளிவிக்குமாறு அறிக. அவ்வுரை :—

"கோள்வதற்கரிய விளங்கனியை யுண்ணவிரும்பி, அவ் விளவிலிருக்கும் குரங்கைக் கற்கோண்டு எறிந்து அக்குரங்கு எறியும் விளங்கனியைக் கோள்பவரைப் போல, உபாயத்தால் *கல்வி கோடற்கு வருவார்க்கும்,......கல்வியால் நிறைவிலராயும், அறிவிலாதாராற் சிறப்பெய்தினோர், பிறசான்றோருழை உடையார் முன்னில்லார்போல் எக்கற்றும் வெளிப்படவந்து கல்லாது மாண்பிறந்த மானத்தால், பிறரை யவரிடத்துக் கரந்துவிட்டு அவரேவலால் வருவார்க்கும் சான்றோர் நூற்பொருள் வழங்கார் என்றவாறு என்பதாம்.

---

*இங்கு உபாயத்தாற் கல்வி கோடலாவது.—நிரம்பிய புலமை வாய்ந்த ஓர் ஆசிரியர்முன் சென்று, தாம் ஐயமுற்ற ஒருபொருளை ஐயவினவால் வினவி யறிந்துகொள்ளாது, அறிவன் வினைவைப்போல் "யான் இக் கருத்துடையேன் ; இப்பொருளில் நீவிர்கொள்ளும் கருத்து யாது?" என வினவி "ஓ! அப்படியா? இதுவும் நல்ல கருத்துத்தான்" என்று வஞ்சனையால் அறிந்துகொள்ளல்.

இவ் வலங்கார நூலாலும், உரையாலும் உரையாசிரியர் இளம் பூரணவடிகள் கூறிய குரங்கெறி விளங்காய் என்பது குரங்கெறி விளங்காய் கோள்வோர் என்ற பொருளினதே என்பது தெளிவுறப்பெற்றும். மானமங்கலத்தார் குடிவந்த வாதவூரடிகளை "மானமங்கலம்"* என்று அழைத்ததுபோல, குரங்கெறி விளங்காய் கொள்வோரைக் குரங்கெறி விளங்காய் என வழங்கியதும் ஒரு இலக்கணையாம்.

இத்தொடர் பிற்காலத்திலும் வழங்கியதென்பதை நன்னூல்

"தொக்குழி மயங்குந இரண்டு முதலேழ்
எல்லைப் பொருளின் மயங்கும் என்ப" என்னும் (பொதுவியல் 22) சூத்திரத்துக்கு மயிலைநாதர் உரைத்த உரையாலும் அறியலாம்.

அவருரை :—"........குரங்கெறிவிளங்காய் என்பது நான்கு தொடர்ச்சிப் பொருள் மயங்கிய பல தொடர்த்தொகைமொழி. இது குரங்கை யெறிந்தவிளங்காய்; குரங்கால் எறியப்பட்ட விளங்காய்........ எனவரும்" என்பதாம்.

பிற்பட்ட இலக்கியங்களிலும் இவ்வாட்சி காணப்படுகிறது. திருவாதவூரர் புராணத்தில்,

"மற்கட விலங்கு தன்னால் வளங்கெழு விளவின் மேவும்
நற்கனி கொள்ளவேண்டி நயந்துகல் லெறிவார் போலச்
சற்குரு வுளனேவென்று நாடுவார் தர்க்க மெல்லாம்
சொற்கலை ஞான சைவர் தம்மொடுஞ் சொல்லலுற்றார்"

எனத் தண்டமிழ்ப் புலவர் கடவுண்மா முனிவர் கூறுகின்றனர். (மந்திரி 23)

கவிபாடும் நுண்ணியல் புணர்ந்தார் அனைவராலும் பெரிதும் பாராட்டப்படும் பெருங் கவிஞராகிய எமது இராமலிங்க அடிகளார் தமது அருட்திருமுறையிலும்,

---

* திருவாலவாயுடையார் திருவிளையாடல், பக்கம்-80.

"பீழைபுரிவான் வருத்துகின்ற பேய்க்குங் கருணைபெரிதளிப்பான்
ஊழையகற்றும் பெருங்கருணை யுடையானென்பா ருனையையோ
மூழைமனத்தாற் குரங்கெறிந்த விளங்காயாகி மோத்துண்ணும்
ஏழையடியேன் வருத்தங்கண்டிருத்தல் அழகோ எங்கோவே"

என்க் கூறுகின்றனர்.

இஃதிங்ஙனமாகவும், நமது அரசஞ்சண்முகனுர் தமது தோல்காப்பியப் பாயிரவிருத்தியிலே இதனை மறுக்கின்ருர். (பக்கம்-142) அவர் கூற்று அவர் தம் திறமை கண்டுமகிழத்தக்க அவ்வளவேயன்றி ஒரு உண்மை தெரிவித்துப் பயன்தருவதா யில்லை.

இதற்கு அவர்கூறும் தடை :—

(1) ஆசிரியராவார்க்கு, மலை முதலாகிய நான்கு உவமைகள் கூறினதற்கேற்ப, ஆசிரியராகார்க்கும், கழற்பெய்குடம் முதலிய நான்கு உவமை கூறினதுபோலவே, மாணக்கராவார்க்கு, அன்னம் முதலிய ஆறு உவமை கூறினவர், மாணக்கராகார்க்கும் ஆறு உவமைகூறலே முறையாமன்றி நான்கு கூறல் சாலாது.

(2) குரங்கெறிகாய் பிறவற்றை நீக்கி விளங்காய் என ஒரு காயினைக் கூறற்குச் சிறப்பியல்பு இல்லை.

(3) பொதுத்தன்மை கூறப்படவில்லை. "கல்லால் எறிந்து கருதுபயன் கோடல்" விளங்காயின் பொதுத்தன்மையாகாது.

(4) விளங்காயை ஒப்புமைகூறி அதன் தன்மையைக் கூருது, அதனைக் கொள்வோர் தன்மையைப் பொதுத்தன்மை யாக்குதல் வழு.

இவற்றிற்கு விடை,—

(1) அவ்வக்குணங்களை வகுத்து, அவற்றை உவமையாற் கூறல்வேண்டுமேயன்றி, ஒரு எண் வரையறைக்குள் அவற்றை யடக்கிக் கூறநேரின் உள்ளனவிடுத்தும், இல்லனதொடுத்தும் கூற நேருமாகலான் அவற்றையறிஞர் சொள்ளார் என்க.

அன்றியும், மாணுக்காரவோர் "தன் மகன்" முதலிய அறுவர் என்று கூறிய ஆசிரியர், மாணுக்கரர்கான "மடிமாணி" முதலிய எண்மர் என்று கூறலும் வழுவாம். ஆகலான் அவர் உரை போலி யென்க.

(2) தேங்காய்போன்ற பெருங்காய்களைப் பறித்துத் தூர வீசியெறிதற்கு எல்லாக் குரங்குகளுக்கும் வலியிராது ஆகலானும், தம்மீது எறியப்படும் கல்லினையொப்ப, உறுதி, திரட்சியுடையவற்றில், மா, கொய்யா, எலுமிச்சை முதலிய பிறகாய்களினும், வன்காய் விளங்காயே யாகலின், யாவரானும் அதன் சிறப்பியல்பு உணரப்படுமாகலானும், வடநூலார் கொள்கைப்படி * அசோக வனிகா நியாயம் எனினும் பொருந்துமாகலானும் அவ்வுரை போலியென்க.

(3, 4) மேலே காட்டியவாறு விளங்காய் என்பது அதனைக் கொள்வோரை யிலக்கணையால் உணர்த்துமாகலானும், பின் வழிச் சான்றோரனைவரும் மிக நுண்ணிதின் ஆயாது கண்மூடித் தனமாய்க் கைக்கொள்ளாராகலானும், இலக்கண இலக்கியங்களிற் பயின்றுவராலானும் வழுவாகாது என்பது.

இனி, நமது அரசஞ்சண்முகனார் இங்குத் தமிழுக்குச்செய்த தீமையும் உண்டு. அது, "நன்னிறம்" என்பதனை "நன்னீரம்", என்று மாற்றினது. அவர்க்கது கருத்தாயின் நீர் என்ற தமிழ்ச் சொல்லையும் விடுத்து, நீரம் என்ற வடசொல்லைப் புகுத்தினர்; ஓசைவேறுபடுவதையுங் கவனித்திலர், பழைய நூல்களில் நீரம் என்ற வடசொல் ஆட்சியும் யாம் கண்டிலம்.

அன்றியும் அவர் "குரங்கேறிவிளங்காய் எருமை" என்பதற்குக் குரங்கு, எரி, விலங்கு, ஆய்எருமை என்று திரித்துரைத் தனர். அதிலும் ஆய் எருமை என்பதற்குக் கன்றை யிழந்த எருமை என்று பொருள்கண்டமையும் புதிதே. நச்சினார்க்கினியர் போல்வார் மூலபாடஞ் சிதையாமலே தங்கருத்தையேற்றிக்

* இராவணன் சீதையை அசோகவனத்தில் வைப்பானேன்? ஏன் வேறு வனத்தில் வைக்கலாகாது? என்பது.

கூறினர்; அதனால் ஒரு தீமையுமின்று; அந்த மூலபாடத்துக்கு அதனினுஞ் சிறக்கப் பிறபொருள் கூறுதலுமாகும். அன்றிப் பாடபேதமென்று கூறிப் பொருள் கொள்ளினும் கொள்ளலுமாம்; அங்ஙனமின்றித் தம் மனம்போனவாறெல்லாம் ஒருவர் மூலபாடத்தைச் சிதைப்பது ஒரு பெருந் தீமையேயன்றோ?

இனிப் பின்னோன் வேண்டும் விகற்பங்கூறும் வழிநூலாகத் தம் கருத்தையடக்கி நம் சண்முகனார் கூறியிருப்பினும், அது ஒரு நலந்தருவதாம். மாறனலங்கார முடையாரும், பந்துறுசுவர் முதலியன தம் கருத்தாகக் கூறினது ஒருவருக்கும் மாறுபாடு விளைத்திலது. இனி, அவர் கூறும் பிண்ட உவமைப் பொதுத் தன்மையை மறுத்துப் பிறரும் பிறிது கூறலுமாகும். அவற்றைப் பின்னர்க் காண்பாம்.

இவற்றால், உரையாசிரியர் கூறும் ஒரு உவமையின் பொருள் இன்னதென்பதும், அரசஞ்சண்முகனார் கூற்றுப் பொருந்தாதென்பதும்பெற்றாம்.

உ

திருமலை வெண்பா.

திருவாளர், T. V. சதாசிவப் பண்டாரத்தாரவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

திருமலைவெண்பா என்பது புறத்திரட்டாசிரியர் எடுத்தாண்டுள்ள நூல்களுள் ஒன்றாகும். இஃது இதுபோது யாண்டும் கிடைக்கவில்லையாதலின் இறந்தொழிந்த நூல்களுள் ஒன்றாகி

விட்டது என்று எண்ணவேண்டியிருக்கின்றது. புறத்திரட்டாசிரியரால் எடுத்தாளப்பெற்ற நூல்களுள் இதனைப்போலத் தற்காலத்திற் கிடைக்காமல் அழிந்துபோன நூல்கள் இன்னுஞ் சில உள. அவை, வளையாபதி, குண்டலகேசி, முத்தொள்ளாயிரம், இரும்பல்காஞ்சி, ஆசிரியமாலை, தகடூர்யாத்திரை, பாரத வெண்பா, சாந்திபுராணம், பெரும்பொருள்விளக்கம், நாரதசரிதை என்பன. இந்நூல்களிலிருந்து புறத்திரட்டிலும் தொல்காப்பிய உரைகளிலும் எடுத்தாளப்பட்ட செய்யுட்களை அறிஞர்கள் சிலர் திரட்டிச் 'செந்தமிழ்ப்' பத்திரிகையில் சில ஆண்டுகட்கு முன்னர் வெளியிட்டுள்ளனர். பாரதவெண்பாவும் முத்தொள்ளாயிரமும் கிடைத்த அளவில் தனிநூல்களாகவும் வெளிவந்துள்ளன. எனவே, எஞ்சிநின்ற திருமலைவெண்பாவில் புறத்திரட்டுடையார் எடுத்தாண்டுள்ள பாடல்களைத்திரட்டி நம் 'தமிழ்ப் பொழி'லில் வெளியிடுவது ஒருவாறு பொருந்துமென்க.

இனி, புறத்திரட்டு என்பது பண்டைத் தமிழ்நூல்களிலிருந்து தொகுக்கப்பெற்ற எழுநூற்றைம்பத்துமூன்று பாடல்கள் அடங்கிய ஒரு தொகைநூலாகும். இஃது, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பெரும்பகுதிகளையுடையது; கடவுள் வாழ்த்து, அவையடக்கம், வான் சிறப்பு, நீத்தார்பெருமை, அறன்வலியுறுத்தல், இல்வாழ்க்கை, கற்பின் மகளிர் முதலான பல அதிகாரங்களையுடையது. இதனைத் தொகுத்த ஆசிரியர் யாவர் என்பது இக்காலத்திற் புலப்படவில்லை. இவரால் எடுத்தாளப்பெற்ற தமிழ்நூல்கள் இருபத்தொன்பது. இவர், கலிங்கத்துப்பரணி, நளவெண்பா, பெரியபுராணம் முதலான சிறந்த நூல்களிலுள்ள பாடல்களைத் தம் தொகைநூலுள் எடுத்தாளாமையின் இவை தோன்றுவதற்கு முன்னர் நம் தமிழகத்தில் வாழ்ந்தவராதல் வேண்டும். இவரால் எடுத்தாளப்பட்ட நூல்களுள் யாப்பருங்கலவிருத்தியும் ஒன்றாகும். இவ்யாப்பருங்கலவிருத்தி, கி. பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதியிலாதல் பதினொன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலாதல் எழுதப்பெற்றிருத்தல் வேண்டும் என்பது மாயூரத்திற்கு அண்மையிலுள்ள

திருநீடூரில் வரையப்பெற்றுள்ள இரண்டு கல்வெட்டுக்களால் புலப்படுகின்றது. எனவே, புறத்திரட்டுடையார் கி. பி. பத்தாம் நூற்றாண்டிற்குப் பின்னர் விளங்கியவர் என்பது நன்கு அறியக் கிடக்கின்றது. அன்றியும் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாடப்பெற்ற கலிங்கத்துப்பரணியையும் அந்நூற்றாண்டின் இடைப்பகுதியில் இயற்றப்பெற்ற நளவெண்பாவையும் புறத்திரட்டுடையார் தம் தொகை நூலுள் எடுத்தாளாமையே இவர், கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்டவராதல் வேண்டுமென்பதை இனிது வலியுறுத்துகின்றதன்றோ? ஆகவே, புறத்திரட்டின் ஆசிரியரது காலம் கி. பி. பதினொன்றாம் நூற்றாண்டு ஆகும் என்பதிற் சிறிதும் ஐயமின்று.

இனி, இத்துணைத்தொன்மைவாய்ந்த ஆசிரியரால் எடுத்தாளப்பெற்ற பெருமையுடையது இத் திருமலைவெண்பா என்னும் நூலாகும். புறத்திரட்டாசிரியரால் இந்நூலிலிருந்து எடுத்தாளப்பெற்ற பாடல்கள் இருபத்தாறு. இஃது, இதுபோது கிடைக்காத நூல்களுள் ஒன்றாதலின் இதனைப்பற்றிய வரலாற்றை அறிய இயலவில்லை. இந்நூல் சிவஞானபோத மாபாடியத்தின் ஆசிரியராகிய சிவஞானமுனிவரால் இயற்றப்பெற்ற சோமேசர் முதுமொழி வெண்பாவைப் போன்றது என்பது மாத்திரம் அறியப்படுகின்றது.

கடவுள் வாழ்த்து.

நீடாழி வட்ட நிலத்துக் கெலாமுதன்மை
வாடாத நீதிரும லைக்கொழுந்தே—பீடார்
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. (க)

புதல்வரைப் பெறுதல்.

முன்னவர் மெய்ச்சுடலை மூழ்கப் பகீரதியோர்
மன்னவனுய்த் தான்றிரும லைக்கொழுந்தே—யன்னதாற்
றம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொருள்
தந்தம் வினையான் வரும். (உ)

அன்புடைமை.

என்புகொடுத் தானிருடி யீந்தா னுடலொருகோ
மன்புறவுக் கேதிரும லைக்கொழுந்தே—நன்புவியில்
அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு. (௩)

விருந்தோம்பல்.

தீய வறுத்த தினைத்தரும னுக்குவிளை
மாயமதென் னேதிரும லைக்கொழுந்தே—ஆயுங்கால்
வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம். (௪)

இனியவை கூறல்.

நன்னலஞ்சொல் லாதழிந்தான் நந்திசா பத்தாக்கன்
மன்னவரே றேதிரும லைக்கொழுந்தே—பன்னும்
இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. (௫)

செய்ந்நன்றியறிதல்.

ஓராய் வயிற்றி லுதித்துமைவ ரோடுகன்னன்
வாரானன் ஏேதிரும லைக்கொழுந்தே—ஆராயின்
எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (௬)

நடுவுநிலைமை.

தந்துணைவர் நீங்கமறு தாய்மகவைப் பாண்டவர்கோன்
வந்தெழுப்பி னான்திரும லைக்கொழுந்தே—நந்தாது
கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி. (௭)

அடக்கமுடைமை

சொல்வசைபொ ருது துணிக்துவிது ரன்றனது
வில்லொடிக் தான்றிரும லைக்கொழுந்தே—தொல்லுலகில்
தீயினாற் சுட்டபு ணுள்ளா றுமாறாதே
நாவினாற் சுட்ட வடு. (அ)

ஒழுக்கமுடைமை

பொன்னார் முடிபொ றுத்தான் பூந யதுவிழுந்தான்
மன்னு வளர்திரும லைக்கொழுந்தே—நன்னர்
ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும். (கூ)

பிறனில்விழையாமை

மெய்தான் முழுதும் விழியானன் போகியுற
வைதான் முனிதிரும லைக்கொழுந்தே—செய்தல்
எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி. (ம)

அழுக்காறுமை

நல்வினையா லெந்நலமும் நண்ணினர்பா லவ்வியஞ்சேர்
வல்வினைநன் றேதிரும லைக்கொழுந்தே—நல்லை
அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான். (மக)

வெஃகாமை

கூட்டநெடுந் தானை குறைத்துப்பசு காதிசேய்
மாட்டெய்து மோதிரும லைக்கொழுந்தே—யீட்டப்
படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர். (மஉ)

தீவினையச்சம்

கொல்லாது செய்காப்பான் கொன்றைத்தா ரைக்கடவான்
மல்லார்வீ மன்றிரும லைக்கொழுந்தே—நல்லவாய்த்
தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால். (௱௩)

புலால்மறுத்தல்

உண்புலால் நீக்க லுயர்கதிவேட் டுக்கோறல்
வண்பதநல் குந்திரும லைக்கொழுந்தே—பண்பாய்
அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று. (௱௪)

வெகுளாமை

தூசு துரோபதைபாற் சோர்புகண்டும் பாண்டவர்கோன்
மாசினம்விட் டான்றிரும லைக்கொழுந்தே—தேசுபெற
உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தால்
உள்ளான் வெகுளி யெனின். (௱௫)

கொல்லாமை

தானழியக் கொன்றான் றனைக்கொல்லா மெய்ப்பொருளார்
வானவரா னார்திரும லைக்கொழுந்தே—ஞானஞ்சேர்
தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. (௱௬)

தெரிந்துசெயல்வகை

நன்மைதவிர்ந் தான்சிவனை நாடாம லேதக்கன்
மன்மகஞ்செய் துந்திரும லைக்கொழுந்தே—அந்நிலையே
நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை. (௱௭)

இடனறிதல்

நீடறிவி னாரும் நெறிநில்லார் பாற்சேரின்
வாடுவர்கண் டாய்திரும லைக்கொழுந்தே—நாடுங்காற்
காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு. (மஅ)

ஒற்றாடல்

ஆணைவேல் வேந்துக் ககத்தினிலி ரண்டுண்டு
வாணயன மேதிரும லைக்கொழுந்தே—காணுங்கால்
ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண். (மகூ)

ஆள்வினையுடைமை

காட்டத்திற் கூலிகொண் டோர் காளை தமிழுமிவால்
வாட்டமொழிந் தான்றிரும லைக்கொழுந்தே—நாட்டும்
அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். (உ௦)

மன்னரைச்சேர்ந்தொழுகல்

வேகருக்கு மன்சிரிக்க வீடினு னேமுசலி
வாதுவலி யாற்றிரும லைக்கொழுந்தே—யாகச்
செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுக
லான்ற பெரியா ரகத்து. (உக)

பொருள் செயல்வகை.

வில்லிமத னைத்தனதன் வென்றானோ மாதினால்
வல்லதுபொன் னேதிரும லைக்கொழுந்தே—செல்வப்
பொருளல்ல வற்றைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். (உஉ)

நட்பிற் பிழைபொறுத்தல்.

வெம்பிவிரா டன்சூது விட்டெறிந்து மேதான்
வம்புசகித் தான்றிரும லைக்கொழுந்தே--நம்பிய
பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின். (உங)

கூடாநட்பு

நேரிலே கஞ்சனிலை நின்று பிலைமீது
வாரிதோ யாதிரும லைக்கொழுந்தே—தேரில்
இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும். (உச)

பகைத்திறந் தெரிதல்.

தாகமதன் வேலைதள்ளுஞ் சம்பானை வென்றேமுன்
வாகைபடைத் தான்றிரும லைக்கொழுந்தே--யாக
இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து. (உரு)

படைச்செருக்கு

துஞ்சினர்போன் றுய்நாளைத் தோன்றற்க வென்றுமால்
வஞ்சினஞ்சொன் னான்றிரும லைக்கொழுந்தே—யஞ்சாத
போராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கா
லூராண்மை மற்றத னெஃகு. (உகூ)

திருக்கழுக்குன்றத்துக் கல்வெட்டுக்கள்

திருவாளர், T. V. சதாசிவப் பண்டாரத்தவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

(க)

காலம் :—முதல் ஆதித்த சோழனது இருபத்தேழாம் ஆண்டு.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிராஜ கேசரிவர்மற்கு யாண்டு இ
2 ருபத்தேழாவது களத்தூர்க் கோட்டத்துத் தங்கூற்றுத்
3 திருக்கழுக்குன்றத்து ஸ்ரீ மூலஸ்தானத்துப் பெருமான் அ
4 டிகளுக்கு இறையிலியாக ஸ்கந்த சிஷ்யன் கொடுத்தமையி
5 ல் அப்படியே வாதாவிகொண்ட நரசிங்கப் போத்
6 தரையரும் அப்பரிசே ரக்ஷித்தமையில் அந்துறைய
7 ன் குணவன்மகன் புத்தன் விண்ணப்பத்தினால் பூர்வ
8 ராஜாக்கள் வைத்தபடியே வைத்தே னிராஜகேசரி வ
9 ர்மனேன் இத்தர்மம் ரக்ஷித்தான்அடி என்முடிமேலின.

(உ)

காலம் :—முதற் பராந்தகசோழனது பதின்மூன்றாம் ஆண்டு.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ மதிரை கொண்ட கோப் பரகே
2 சரிபன்மற்கு யாண்டு பதின்மூன்றாவது
3 களத்தூர்க் கோட்டத்துத் தங்கூற்றத் திரு
4 க் கழுக்குன்றத்து ஸ்ரீ மூலஸ்தானத்துப்
5 பெருமானுக்கு ஆமூர்க் கோட்டத்துக்கரைக்கா
6 ட்டூர் நெடுமாற் சாத்தன் சென்னிப் பேர
7 யனும் இவன்தாயார் கோயினங்கை
8 யும் ஆகவைத்த நந்தாவிளக்கு ஒன்று
9 இது சந்திராதித்தவல் இத்தர்மம் ரக்ஷிப்பார் ச
10 பையார்.

(௩)

காலம் :—கன்னரதேவனது பதினேழாம் ஆண்டு.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கச்சியுந் தஞ்சையுங்கொண்ட ஸ்ரீ கன்னர
2 தேவற்கு யாண்டு பதினேழாவது களத்தூர்க் கோட்டத்
3 துத்தங்கூற்றுத் திருக்கழுக்குன்றத்து ஸ்ரீ மூலஸ்தானத்
4 து பெருமான் அடிகளுக்குக் காரையுடையபல தேவனாகிய பாரந்
5 தகப்பேரரையன்வைத்த நந்தாவிளக்கு ஒன்று இது ச
6 ந்திராதித்தவற்பன்மாஹேச்வரர்ரக்ஷை பராந்தகப்பேரரைய
7 ன் வைத்தவிளக்கு முட்டில் கங்கையிடைக்குமரியி
8 டை எழுநூற்றுக்காதமுஞ்செய்தார் செய்த பாவத்திற்படு
9 ம் ஆனோம் திருக்கழுக்குன்றத்துச் சபையோம். [வோ

(௪)

காலம் :—கன்னரதேவனது பத்தொன்பதாம் ஆண்டு

1 ஸ்வஸ்திஸ்ரீ கச்சியுந் தஞ்சையுங்கொண்ட
2 கன்னரதேவற்கு யாண்டுபத்தொன்ப
3 தாவது களத்தூர்க் கோட்டத்துத் தங்கூற்றுத்
4 திருக்கழுக்குன்றத்து ஸ்ரீ மூலஸ்தானத்துத்
5 தெற்கில் அம்பலங் கரையுடைய
6 சாத்தன் சென்னிப்பேரையன் அம்ப
7 லம் எடுத்து இதனுக்கு அம்பலப்புறம் ஆக ஈசா
8 னசிவன் ஆகிய நக்கடிபட்டன் பக்கல்விலைகொண்ட
9 பூமிகாலரிச்செறுவும் கிணறும் தண்ணீர் அட்டுவ
10 தற்கும் அக்னியிடுவதற்கும் ஆக அம்பலப்பட்
11 டிவைத்தமையில் சபையோமும் இவ
12 ன் பக்கல் இறைத்திரவியம்கொண்டு எம்மூரும் சந்திராதி
13 த்தரும் உள்ளளவும் இறையிழித்துக் கொடுத்தோம். இத்தர்ம
14 ம் ரக்ஷித்தான் அடிதலைமேலின இத்தர்மம் இறக்கினான்
15 கங்கையிடைக் குமரியிடை எழுநூற்றுக்காத
16 மும் செய்தார் செய்த பாவத்தில் படுவார்.

உ

மூவர் தமிழ்.

(ஆராய்ச்சி)

இருக்கு சாமம் ஆறங்கம்.

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள், B.A., L.T.,
உரத்தநாடு.

(முற்றொடர்ச்சி 199.)

மறை, வேதம் என்னும் இரு சொற்களும் இருக்கை முதன்மைத்தாக வுடைய நான்கு ஆரிய வேதங்களைத்தான் குறிக்கின்றன வெனல் பொருந்தாதென்றும், தமிழ் நூற்களையுங் குறிக்கின்றனவென்றும் அருண்மொழியாளர் வழக்காற்றிலிருந்தே நிறுவினும். இனி இருக்கு, சாமம், ஆறங்கம் என்னுஞ் சொற்கள் எக்குறிப்பின வென ஆராய்வாம்.

வடமொழி மறைகள் நான்கனுள் இருக்குஞ் சாமமுந் தொடுமிடந்தொறும் மூவர் தமிழுள் எடுத்தியம்பப் பட்டிருப்ப, யசுரும் அதர்வணமுமாகிய ஏனைய விரண்டும் ஓரிடத்தும் ஓதப்பெறுதது பெரும் வியப்புறுத்துவ தொன்றன்றோ? யசுரும் அதர்வணமும் ஏனைய விரண்டையும் போல் அத்துணைச் சிறந்ததன்றாதலின் இயம்பப் பெறுதொழிந்தன வெனல் கூடும். ஆனால் இறை வழிபாட்டினர் (சைவர்கள்) இன்புடன் கையாளுகின்ற திருவைந்தெழுத்தும் திருஉருத்திரமும் யசுர் வேதத்துள்ளும், இறைக்குறியின் (சிவலிங்கத்தின்) குறிப்பும் பலப்பல அறிவுறுத்தல்களையுடைய பல உபநிடதங்களும் அதர்வண வேதத்துள்ளுங் காணப்படுவதால் இவற்றாற் சிறப்புறும் இவ்விரு வேதங்களினும் இவற்றாற் சிறப்புறா ஏனைய விரண்டும் இறை வழிபாட்டு முதல்வர்

களுக்கு எவ்வாறு மிகச் சிறப்புடையனவாகும்? ஆதலின் இருக்கு சாமத்தினும் யசுரும் அதர்வணமுமே அவர்களால் நீக்கப்பெறும் இயல் புடையன வல்லவன்றே?

இனி, 'ஒன்றின முடித்தல், தன்னின முடித்தல்' என்னும் உத்தியால், ஒன்று கூறின் யாவுங் கூறப்பட்டவேயெனின், முதலாவதாகிய இருக்கு மட்டுங் கூறப்படாது மூன்றாவதாகிய சாமமுங் கூறப்படுவானேன்? இரண்டாவதும் நான்காவதும் மறந்துங் கூறப்பெறு தொழிவானேன்? ஆதலின் இருக்கு, சாமம் ஆகிய இவ்விரு சொற்களும் இவ் வேதங்களைத்தான், அல்லது நால் வேதங்களையுங் குறிக்குமெனல் பொருந்தாது. பிற் காட்டப் பெறுமாறு இந்நால் வேதங்களுக்கும் பொதுவாகிய இரு சிறப்பியல்புகளையே குறிக்கின்றனவென்றும் எண்ண இடமிருக்கிறது.

'இருக் குருவாம் எழில் வேதத்தினுள்ளே' 1 என்னுந் திருமந்திரம் இருக்கென்னுஞ் சொல் வேதத்தின் உருவைக் குறிக்குமென்று குறிப்பிடுகின்றது. இதற் கேற்பவே பூர்வமீமாம்சையிலும் "தேஷாம் ருக்யத்ர அர்த்தவ ரென பாதவ்யவஸ்தா" (என்பது அர்த்தத்திற்காக எங்கே அடி அடியாக—அதாவது செய்யுள் வடிவாக—இருக்கிறதோ அதற்கு ருக் என்று பெயர்) என்று கூறப்பட்டிருக்கிறது. இதற்கிணங்கவே கந்த புராணத்தும்

"மையு லாவரு களத்தினன் அளப்பிலா மறைகள்,
செய்ய வாகமம் பற்பல புரிந்ததிற் சிலயா
னுய்யு மாறருள் செய்தன னவையுணர்ந் துடையேன்"

என்று நான்முகன் கூற, அதற்குமுருகவேள் "அவற்றினுளிருக்கா மொன்று நீ விளம்புதி 2" என ஓர் பா வினவினதாகக் கூறப்பட்டுளது. இதுவே இச் சொல்லின் முதற்பொருளாகும்.

இரண்டாவதாக, இச் சொல்லை நிறை மொழி (மந்திரம்) என்னும் பொருளில்

---

1 திருமந்திரம்-வேதச் சிறப்பு-3வது பாட்டு

2 கந்தபுராணம்-அயனைச்சிறைபுரி படலம்

"இருக்கியல் பாயின இன்னம் பரான்ற னிணையடியே" 1

"இருக்காலே நினைந்து துதிப்பார் நாவி னெஞ்சி
விருப்பா யானை தங்கு......மணிமார்பா" 2

என்ற பல்வேறிடங்களிற் பயனுறுத்தியமை உற்று நோக்கிற் றெரியும். இருக் கென்னுஞ் சொல்லிற்கு ஆரியத்தில் (மந்திரம்) நிறைமொழி யென்னும் பொருளுண்மையாலும், மேற் கண்ட முதன் மேற்கோளில் 'இருக்கு வேதத்தின் தன்மையது-அல்லது-அதனியல் புடைத்து இறைவன் திருவடி' என்று பொருள் கூறுவதினும்; நிறை மொழி வடிவினது அவன் திருவடி என்னும் பொருளே 'மந்திரமுந் தந்திரமுமாய வடி'3 என்பதற் கிணங்கப் பொருத்த முடைத்தாதலானும் இரண்டாவது மேற்கோளில் இடையீடின்றி 'நினைந்து துதித்து' முருகக் கடவுளை நாவி னெஞ்சிலிருத்துவதற்கு இருக்கு முதலாய வேதங்களினும் ஆறெழுத்து, ஆறுமுகம் முதலிய நிறை மொழிகளே (மந்திரங்களே) சிறந்தனவாதலானும் இவை யிரண்டு மேற்கோள்களினும் நிறை மொழிகளே குறிக்கப்பட்ட தொருதலை. அந் நிறைமொழிகளுள் இறைவன் திருவடி வடிவுடையன தமிழினத்தனவே யாதலானும் 'நினைந்து துதிப்பதற்குத்' தமிழ் நிறை மொழிகளே யாவர்க்கு முரித்தாவவன்றி இறைவனாற் பெரிதும் விரும்பப்படுவவாதலானும் இவ் விருக் கென்னுஞ் சொல் தமிழ் நிறைமொழிகளையே குறிக்கின்றன வென்று சொல்லவுந் துணிவேம். இதற்குச் சான்றாக வேதம் ஓதுதற்கு உரிமையற்றவரென் றெண்ணப்படுகிற வேளாளராகிய அப்பரடிகள்

தொண்டனேன் பட்ட தென்னே தூயகா விரியி னன்னீர்
கொண்டிருக்கோதி யாட்டிக் குங்குமக் குழம்பு சாத்தி
இண்டைகொண் டேற நோக்கி யீசனை யெம்பி ரானைக்
கண்டனைக் கண்டி ராதே காலத்தைக் கழித்த வாறே 4

---

1 திருநாவுக்கரசர்-திரு விருத்தம்-திருவின்னம்பர் (10)
2 திருப்புகழ்-திருப் போரூர்
3 திருநாவுக்கரசர்-திருவதிகைத்திருவீரட்டானம்-திருவடித் [திருத்தாண்டகம் (8)
4 திருநாவுக்கரசு-தனித்திரு நேரிசை (1)

என்று அவர் அருள் பெறுமுன் தமக்கு உரிமை யற்ற இருக் கோதி யாட்டாது பொழுதைச் செவ்வனே கழிக்காததை நினைந்து வருந்துவதையும், அருள் பெற்ற பின்

"சலம் பூவொடு தூப மறந் தறியேன்
தமிழோ டிசை பாடன் மறந் தறியேன்" 1

என்று கூறுவதையும் நோக்க, தாம் பாடியருளும் இத் தமிழோடிசையையே முந்திய மேற்கோளில் இருக் கென்று குறித்தது நன்கு விளக்கும். இதற்கிணங்கவே இத்தமிழ்மூவரும் பாடியருளிய தமிழ்ப் பாக்களை உமாபதிசிவம்

மந்திரங்க ளேழுகோடி யாதலினுன் மன்னுமவ
ரிந்தவகை திருமுறைக ளேழாக வெடுத்தமைத்து 2

என்று நிறை மொழியாகக் கணக்கிட்டிருக்கின்றனர். இவ்வாறு இருக்கு என்னுஞ் சொல்லின் இரண்டாம் பொருள் நிறைமொழி ஆகின்றது.

மூன்றாவதாக 'இருக்கு, சுருதி, மறை, எழுதாக்கிளவி, ஆதிநூல், சாகை, ஆரணம், வேதம்' என்ற திவாகரம் இச் சொல் மறை அல்லது வேதத்தைக் குறிக்குஞ் சொல்லாகக் காட்டுகிறது. இவ்வேத மென்னுஞ் சொல் எல்லா அறிவு நூற்களையுங் குறிக்குமென்று முன் நிறுவியதற்கிணங்க, இருக் கென்னுஞ் சொல்லுங் குறிக்கின்ற தென்பதை நிறுவ, குமரகுருபர அடிகள் எல்லா அறிவு நூற்களுக்கும் பிறப்பிடம் முருகன் அடிச் சிலம்பு என்பதை 'இருக் கோலிடும் பரி புரக் கோலமும்' 3 என்று விளக்குகின்றனர். ஆதலின் இச் சொல்லின் மூன்றாவது பொருள் 'அறிவு நூற்கள்' என்பதாம்.

இப் பொருளில் இச் சொல் ஆகமங்களையுங் குறிக்கின்றது. எவ்வாறெனின் இறையோன் கோயில்களில் எல்லாச் செயல்களிலும் ஆகம நிறை மொழிகளே ஓதப் பெறுவதாலும், இறை வழிபாட்டினரியற்றும் நாட் செயல்களிலும் (நித்திய கருமம்), உயிர்

1 ஷை பண்கொல்லி-திருவதிகை (6)
2 திரு முறை கண்ட புராணம் (28)
3 முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்

வழிபாட்டிலும் (ஆன்மார்த்த பூசை) அம் மந்திரங்களே பயிலப் படுவதாலும், இருக்காதி வேத நிறைமொழிகள் கோயில்களில் மட்டும் எல்லாச் செயல்களும் முடிந்தபின் அவைகளைப் பெருமைப் படுத்துவதற்காகச் சிறிதே ஓதப் பெறுவதாலும்

நன்றுநகு நாண்மலரால் நல்லிருக்கு மந்திரங்கொண்
டொன்றிவழி பாடுசெய லுற்றவன்ற னோங்குயிர்மேல்
கன்றிவரு காலனுயிர் கண்டவன் 1

என்ற விடத்தும் இத்தகைய பல்வேறிடங்களிலும் இருக் கென்னுஞ் சொல்லால் ஆகமங்களே குறிக்கப்பட்டமை விளங்கும். ஈண்டு இருக்கு மந்திர மென்றது வேத மந்திரமென்றும் பொருள் பட்டு வேதத்தில் ஆகமும் அடங்குமென்று முற் காட்டியபடி 2 ஆகமமந்திர மென்று பொருள் படுவதும் பொருத்த முடையதே. இவ்வாறு பாவினம், நிறைமொழி, மறை என்னும் முப் பொருளுடைய இச் சொல் யாண்டும் இருக்கு வேதத்தையே குறிக்குமெனல் பொருந்தாக் கொள்கையாம்.

இனிச் சாமம் என்னுஞ் சொல்லைப் பெரிய புராணத்தில் சீகாழியாகிய 'காமர் திருப்பதி'......தேமரு மென்சுரும் பிசையால் செழுஞ் சாமம் பாடுமால்' 3 என்று பயனுறுத்தி யிருப்பதை நோக்க, அதற்கு இசை யென்னும் பொதுப் பொருளே ஈண்டு உரித்தாகின்றது. இனி இராவணன் பாடியதும் இறைவனால் 'சாம வேதம் பெரிது கப்பானை' 4 என்பதற் கிணங்கப் பெரிதும் விரும்பப்பட்டதும் இப்போது வழக்காற்றிள்ள வடமொழிச் சாம வேதமேயா மென்று சிலர் சாற்றினும், சாமம் என்ற சொல்லிற்குப் பதிலாக வன்றொண்டர் 'குறி கொள் பாடலின்னிசை' 5 என்று குறிப்பிடுகின்றதை நோக்கியும், இது

---

1 திருஞான சம்பந்தர்-பழந்தக்க ராகம்-திருக்கோளிலி (3)
2 தமிழ்ப்பொழில் துணர் 2-பக்கம் 375.
3 திருஞானசம்பந்தர் புராணம் (9)
4 சுந்தரர்-தக்கேசி-திருவேகம்பம் (6)
5 சுந்தரர்-தக்கேசி-திருப்புன்கூர் (9)

போது வழங்கும் வடமொழிச் சாம வேதத்தில் இசை விரும்புங் கூத்தனாகிய இறைவனைப் பெரிதும் உவப்பிக்கக் கூடிய செயலில்லாததைக் கண்டும் அதை ஒப்பமுடியவில்லை. பின் இக்குறி கொள் பாடல் யாதென ஆராயும் பொழுது அஃது அவனைக் குறியாகவுடைய ஐந்தெழுத்தே யென்பதைத் திருஞான சம்பந்தர் "பண்டை யிராவணன் பாடியுய்ந்தன...அஞ்செழுத்துமே" 1 என்றும், இலங்கை மன்னன்......மலங்கி வாய் மொழி செய்தவனுய்வகை, நலங் கொள் நாமம் நமச்சிவாயவே' 2 என்றும் நவில்கின்றனர். இதற்கிசையவே அப்பாடிகளும் 'முன்கையானரம்பு வெட்டி முன்னிருக்கிசைகள் பாட-அங்கை வாளருளினான்' 3 என்று இருக்காய (ஐந்தெழுத்து) நிறைமொழியைப் போல்பல்வேறிசையிற் பாடினதாகக் குறிக்கின்றனர். இவ்வாறு ஒரு நிறை மொழியைப் பன்னெடுங்காலம் பாடுதல் இயலுமோவென ஐயுறுவார்க்குச் சேக்கிழார், ஆனாய நாயனார் வேய்ங்குழலால் இறைவனை யேத்தி இன்பும் வீடும் எய்தியது திருவைந்தெழுத்தாலேயே யென்பதை ஒருமுறையின்றி அறுமுறை குறிப்பதுடன் 4 அவற்றைப் பாடுந் தமிழிசை முறையையும் விரித்து

"மாறுமுதற் பண்ணின்பின் வளர்முல்லைப் பண்ணாக்கி
யேறியதா ரமுமுழையுங் கிழமைகொள் விடுந்தான
மாறுலவுஞ் சடையாரஞ் செழுத்தி னிசை பெருகக்
கூறியபட் டடைக்குரலாங் கொடிப்பாலையினுறுத்தி" 5

1 பண்-காந்தார பஞ்சமம்-திருப்பஞ்சாக்கரப்பதிகம் (8)
2 ஷை கௌசிகம்-நமச்சிவாயத் திருப்திபகம் (8)
3 திருநேரிசை-திருமறைக்காடு-2-வது பதிகம் (10) ஈண்டு இருக்கென்றது இருக்கு வேதத்தை குறிப்பிடாததினாலும், நிறை மொழிகளும் இறைவனுக்குப் பெரிதும் உவப்பினைத் தரக்கூடிய தொன்றாதலானும் இருக்கென்னுஞ் சொல்லால் இம் மேற்கோளில் நிறை மொழிகளே குறிக்கப்பட்டன இம் மேற்கோளுக் கிசையவே பரஞ்சோதியாரும்
'பொருப்பகழ்ந் தெடுத்தோன் சென்னி புயமிற மிதித்தாய் போற்றி
யிருக்கிசைத்தவனே பாடவிரங்கிவாழ் சொடுத்தாய்போற்றி' என்றார்.
4 ஆனாய நாயனார் புராணம் 14, 22, 25, 26, 29, 39-ம் பாடல்களிற் கண்டு கொள்க
5 ஷை 25-வது பாடல்

என்றும் இயம்புகின்றனர். இன்னும் சாம வேதம் இறைவியின் ஊடலை ஒழிக்கப்பாடிய தென்றும் அஃது இறைவனின் கூத்திற் குடனிகழு மென்றும் திருநாவுக்கரசு நாயனர்

சூடினர் கங்கை யாளைச் சூடிய துழனி கேட்டங்
கூடினள் நங்கை யாளும் ஊடலை ஒழிக்க வேண்டிப்
பாடினர் சாம வேதம் பாடிய பாணியாலே
ஆடினர் கெடில வேலி யதிகைவீ ரட்ட னரே 1

'சாமுண்டி சாம வேதங் கூத்தொடும் பாடவைத்தார்' 2 என்ற பாடல்களினுற் குறித்திருப்பதையும், வடமொழிச் சாமவேதத்தில் ஊடலை ஒழிக்கக் கூடிய செய்தியுஞ் செயலும் இல்லை யென்பதை யும், இவ்வேதத்திற்குங் கூத்திற்கும் பல்காத தூரமென்பதையும் நோக்க, அப்பாடிகள் இவ் வடமொழிச் சாம வேதத்தையே குறித்திருக்க முடியாதென்பது வெள்ளிடை. திருஞானசம்பந்தர் "தமிழினீர்மை பேசித் தாளம் வீணை பண்ணி நல்ல, முழவ மொந்தை மல்கு பாடல் செய்கை யிடமோவார்" 3 என்று குறித்திருப்பதனையும், காரைக்காலம்மையார் கைலை வெற்பில் இறைவனை "வேண்டு நான் மகிழ்ந்துபாடி யறவா நீ யாடும் போ துன் னடியின் கீழிருக்க" வென்று வேண்டிக் கொண்டபடி "ஆதியோ டந்தமில்லா னருணடமாடும்போது கீதமுன் பாடு மம்மை" 4 'கொங்கை திரங்கி,' 'எட்டியிலவ மீகை' என் றெடுத்துத் தமிழ்ப்பதிகம் தமிழிசை முறையிற் பாடியதுமன்றி இன்னும் பாடிக்கொண்டிருப்பதைச் சேக்கிழார் எடுத்தியம்பி யிருக்கின்றதையும், இத்தமிழ் வழங்கு நிலத்திலேதான் இறைவன் ஐந்து அம்பலம் வகுத்துக் கூத்தாடுகின்றதையும் நோக்க, இறைவன் திருக்கூத்திற்குத் தமிழ்ப்பாடலே உடனிகழு மென்றும், அதனல் சாம மென்றது தமிழிசையையும் உட்படுத்தி யோ அல்லது மேற்காட்டியபடி சில விடங்களில் அவற்றையே குறித்தோ நிற்கும் என்றும் உணர்க. இவ்வாறே

1 திருநேரிசை - திருவதிகை-3ம் பதிகம் (2)
2 திருநேரிசை - திருப்பயற்றூர் (4)
3 தக்கேசி - திருக்காளூர் (8)
4 காரைக்காலம்மையார் புராணம் (60, 66)

"பண்பொலி நான்மறை பாடியாடிப் பலவூர்கள் போய்
உண்பலி கொண்டுழல் வானும்" 1

"பண்ணமரு நான்மறையே பாடியாடல் பயில்கின்றீர்" 2

"பண்ணினூர் மறை பாடலன் ஆடலன்" 3

"பண்ணார் மறைபாடப் பரமனதிகையுள்
விண்ணோர் பரவ நின்றாடும் வீரட்டானத்தே. 4

என்றற் றொடக்கத்த பல் வேறு பாசுரங்களிலுள்ள பண்ணார் மறை பண் முறையில்லா ஆரியமறை யாகாது. தமிழ் மறையே யாமென்று தெளிக. இன்னும்

"முன்னொரு நான் மறை யாறங்கம் பழியாமை
பண்ணிசை யான பகர்வானை" 5

"பாடினுய் மறையோடு பல் கீதமும்" 6

"மன்னி நான் மறையோடு பல் கீதமும்
பன்னி னாவர் பாலைத்துறையரே" 7

"சாம வேதக் கந்தருவம் விரும்புமே" 8

என்ற பாடல்களில் இப் பண்ணார் தமிழ் மறையையே இன்னிசை, கீதங் கந்தருவ மென்ற சொற்களால் குறிப்பதையும், அவை முன்னொரு நான்மறையாகிய ஆரிய மறையால் பழிக்கப்படாமல் அதினும் பெருமையுறப் பகரப் பட்டமையை விளக்குவதையும் உற்றுப்பார்க்க, இவை 'பழமறைகண் முறையிடப் பைந் தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே' 9 என்ற எண்ணத்திற்கும், "வேத வேள்வியை நிந்தனை செய்துழல்

1 திருஞானசம்பந்தர்-காந்தார பஞ்சமம்-திருக்கடவூர் (6)
2 ஷை காந்தாரம்-திருநல்லூர் (1)
3 ஷை பழந்தக்கராகம்-திருக்காவீரம் (5)
4 ஷை தக்கராகம்-திருவதிகை (4)
5 திருஞானசம்பந்தர்-இந்தளம்-திருமணஞ்சேரி (6)
6 ஷை காந்தார பஞ்சமம்-கோயில் (1)
7 திருநாவுக்கரையர்-திருக்குறுந்தொகை-திருப்பாலைத்துறை (3)
8 ஷை அடையாளத் திருத்தாண்டகம்-திருவதிகை (1)
9 மீனாக்ஷியம்மை பிள்ளைத் தமிழ்-காப்புப்பருவம்-திருமால்துதி

ஆதமில்லி அமணொடுதேரா" 1 ருக்கு முன் நிந்திக்க முடியாத படி "பல்லார்களும் பரவத் தமிழ்ப் பாசுரம் சொன்ன" 2 உண்மைக்கும் ஒத்துவருவதை உற்று நோக்குக. அன்றியும் மேற் குறித்த முதலாவது மூன்ருவது மேற்கோள்களுள் நான்மறை யுடன் பண்ணிசையும் பல கீதமும் பன்னப்படுவதாகக் குறிக்கப் பெறுவதால் அவ்விசை ஆரியத்தில்லாத் தமிழோ டிசையாவதை யுங் கண்டு களிக்க.

இவ்வாறு இறைவன் ஆடற்குப் பாடும் தமிழ்மறை யாதென வினவுவோர் அவை இறைவனின் அரும் பெருஞ் செயலாகிய உலகத் தோற்ற நிலை இறுதிக் கேற்றதாதலானும், அஃது அழுக்கு மறைப்புடைய எம்போலியர்க்கு மறைந்தும் அருள் பெற்ற அறிஞர்க்குப் புலனாகியும் உள்ளதென்றும் அதை உணர்ந் தியற்றியதே தேவாரம் முதலிய தமிழ்மறை யென்று முணர்வா ராக. இப் பன்னிரு திருமுறை தோன்றுவதற்கு முன்னர்த் தமிழ் மறையுண்டோ வென வினவுவார்க்குத் தமிழ் நிறைமொழிகளி லிருந்தமையை முன்னர் விளக்கினும். மூவர் தமிழ் போன்ற தமிழ் மறை இருந்திருக்கக் கூடுமென்பதைப் பின்னர்க் காட்டு வாம்.

இதனுல் ஏனைய வேதங்கள் மூவர் தமிழில் எடுத்தியம்பப் பெருது இருக்குஞ் சாமமுமே போற்றப் பெறுவது அவை முறையே நிறைமொழி, இசை யென்னுஞ் சிறந்த பொருள்களைக் குறித்து நிற்பதனுலேயேதான் என்று காணக்கிடக்கின்றது. இதற்கேற்பவே 'ஆனபாடலுகந்த திருக்கையே' என்னுஞ் சம்பந்தர் வாக்கு 'சாம வேதம் பெரிதுகப்பானை' என்னுஞ் சுந்தரர் வாக்கிற்கு முரண்படுவதாகத் தோன்றினும் இவ்விரு மறைகளும் நிறை மொழி, இசை யென்னும் பொருள் பெற்று முரணுகாது விளங்குதல் தெளிக.

இனி ஆறங்கம் என்னுஞ் சொல்லைப்பற்றி ஆராய்வாம். அஃது (1) ஒலி வேறுபாட்டினுல் ஒலிக்கு முறையை உணர்த்தும்

---

1 திருஞானசம்பந்தர்-ஈரடிமேல்வைப்பு-திருவாலவாய் (1)

2 ௸ கௌசிகம்-திருவாலவாய்-திருப்பாசுரம் (12)

ஒலி முறையியல் (சிக்ஷை) யென்னும் நூலையும் (2) மறைச் செயல்களைப் புரியும் வழியை யுணர்த்தும் மறைநெறி (கற்பம்) என்னும் நூலையும் (3) எழுத்தியல், சொல்லியல், பொருளியலை யுணர்த்தும் எழுத்து என்னும் நூலையும் (வியாகரணம்) (4) மறைப் பொருளை உணர்த்தும் நிகண்டு (நிருத்தம்) என்னும் நூலையும் (5) காயத்திரி முதலிய யாப்புக்களின் பெயர், எழுத்தை விரிக்கும் இசை நுணுக்கம் (சந்தோவிசிதி) என்னும் நூலையும், (6) மறைச் செயல்களைச் செய்யும் நேரத்தைக் குறிக்கும் ஓரை நூலும் (சோதிடம்) ஆகிய அறு நூற்களைக் குறிக்கும் ஒரு தொகைச் சொல்லாம். இவை மறையை உணர்த்துவதற்கெனத் தொகுக்கப் பட்டன வேனும் அதற்காக மட்டும் இயற்றப்பட்டன அல்லது பயன் படுத்தப்பட்டன வென்று எண்ண இடமில்லை. இவ்வாறனுள் மறை நெறியைத் தவிர்த்து ஏனைய ஐந்தும் மறையன்றி ஏனைய நூல்களை உணர்வதற்கும், ஏனைய செயல்களைச் செய்யும் பொழுதை அறிவதற்கும் பயன்படுத்தப்பட்டன, பயன்படுத்தப் படுகின்றன வென்பது யாவரும் அறியக்கிடக்கின்றது. இதற் கேற்பவே 'பங்கமில் பதினெட்டோடு நான்குக் குணர்வுமாய், அங்கமாறுஞ் சொன்னவனை யாறுடையையனே' 1 என நான்மறை யன்றிப் பதினெட்டு வரலாறுகளையும் உணர்த்து வதற்கென இவ்வாறங்கம் இயம்பப்பட்டன வெனச் சம்பந்தர் தெரிவிக்கின்றனர். ஆதலின் இவ்வாறனுள் ஒலிமுறையியல், எழுத்து, நிகண்டு, இசை நுணுக்கம் என்னும் நான்கும் ஒரு மொழியை நன்குணர்த்துவதற்கு வேண்டிய மொழிவரையறையும், ஏனைய விரண்டும் ஓர் நெறியை நன்கு பின்பற்றும் முறையும் உதவுவ.

இவ்வாறாக, ஓர் நாட்டின்கண் விளங்கும் மறைகளும் அவற்றாற் குறிக்கப்பெற்ற நெறிகளும் தமிழிலிருப்பின் ஆங்கு இவ்வாறுறுப்புகளுந் தமிழிலிருக்க வேண்டுமன்றோ! எனவே தமிழ்ப் பெரியார்களால் மறை, வேதம், இருக்கு, சாமம் முதலிய சொற்கள் தமிழ் நூற்களையுங் குறித்தே கையாளப் பெற்றிருக்

1 திருஞானசம்பந்தர்-திருவையாறு

கின்றன வென்று முன் நிறுவியதற்கிணங்க அத்தமிழ் நூற்களை விளக்குவதற்கும், அத்தமிழ் நெறியை வகுத்துரைப்பதற்கும் தமிழ் உறுப்பு நூற்கள் இருக்க வேண்டுமன்றோ? அவ்வாறு மலிந்துகிடக்கும் பல தமிழ் உறுப்பு நூற்களையும்[1] ஆறங்க மென்னும் இச் சொல் குறிக்கின்றதென்பது பொருந்து மென்றறிக.

இக் கட்டுரைக் கருத்து யாதெனின் இருக்கு, சாமம் என்னும் இருசொல்லே தமிழ் மூவரால் பயனுறுத்தப் பட்டிருப் பதால் அவற்றிற்கு வேறு உட் பொருளுண்டென்றும், அவற்றுள் இருக் கென்னுஞ்சொல் பாட்டு, நிறைமொழி, அறிவு நூல் என்னும் பொருள்படுமென்றும், சாம மென்னுஞ் சொல் இன்னிசை, இசை நூற்களைக் குறிக்குமென்றும், அவ்விசை நூற்களுள் தமிழ் மூவரால் தமிழிசை நூற்களே குறிக்கப்பட்டன வென்றும், இறைவன் பாடும் இசையின் றன்மை சிற்றுயிர்களின் உள்ளத்திற் கெட்டாததொன் றென்றும், எனவே இருக்கு சாம மென்னுமிரு சொற்கள் மட்டும் பயனுறுத்தப் பட்டமை அவை முறையே நிறைமொழி நூற்கள், இசைநூற்கள் என்னும் இரு பொதுப் பொருள்களையே குறிப்பதற்காகவே என்றும், ஆறங்க மென்னுஞ் சொல் தமிழ் நூற்களையுங் குறிக்கிறதென்றும், எனவே இவை ஆரியச் சொற்களேனுந் தமிழர்களாற் கையாளப்படும் பொழுது தமிழற்குப் பெரிதும் உரித்தான தமிழ் நூற்களையே குறிக்கின்றனவே யன்றி ஆரிய நூற்களைக் குறிக்கவில்லை யென் றும் கூறுவதேயாம்.

தொடரும்.

1 தொல்காப்பியம் முதலிய அத்தகை நூற்களை வழக்காற்றிலிருந்து கண்டு கொள்க.

294

தமிழ் இலக்கணமும் தமிழ் நாட்டின் இல்லறவாழ்க்கை முறையும்.

திருவாளர், ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், மன்னார்குடி.

தமிழ்நாடு என்பது நாம் பேசுகின்ற தமிழ்மொழி வழங்கும் நாடு. 'தமிழ்' என்பதற்கு 'இனிமை' யென்று பொருள். எல்லா மொழிகளிலும் இனிமையானது ஆதலால் தமிழ் எனப்பட்டது. பிறமொழிகளைப் பேசுவதை நீங்கள் ஊன்றிக் கேட்பீர்களானால், அம்மொழிகளின் கடுமையான ஒலியால் இனியாமை உணர்ந்துகொள்வீர்கள். வடமொழி அரபிமொழி முதலியன பேசும்போது கண்டமும் நாவும் மிகப் பாடுபடும். இந்தப்பாடு, தமிழ் பேசும்போது கிடையாது. அன்றியும் வடமொழி யென்பது, எழுத்து வழக்கில் மாத்திரம் உள்ளது. பேச்சு வழக்கில் இல்லை. நம்முடைய தமிழ் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் நடைபெறுவது. ஆகலால் தமிழ்மொழி மிகச் சிறந்ததென்று பெரியோர் கூறுவர்.

தமிழ்நாடு எந்தக்காலத்தில் தோன்றியதோ, அத் தமிழ் நாட்டில் மக்கள் எந்தக்காலத்தில் தோன்றினார்களோ, அந்தக் காலத்திலே தமிழ்மொழியும் தோன்றியது என்பதும் பெரியோர் கொள்கை. கம்பரும் 'என்றுமுள தென்றமிழ் இயம்பி இசை கொண்டான்' என்று அகத்தியரைப் புகழ்ந்துரைத்தார்.

நாம் உற்று நோக்குவோமானால் எந்த மொழியும், சிற்றறிவும் சிறுதொழிலும் உள்ள ஒரு மனிதனால் உண்டாக்க முடியாதென அறியலாம். எல்லா மொழிகளும் பேரறிவும் பேராற்றலும்

உள்ள ஒருவனாலே உண்டாக்கப்பட்டிருக்கவேண்டும். பேரறிவும் பேராற்றலும் உள்ளவன் கடவுளேயாம். ஆகவே கடவுளே எல்லா மொழிகளுக்கும் மூலகாரணன் என அறிக.

'வினையினீங்கி விளங்கிய அறிவின், முனைவன் கண்டது முதனூலாகும்' என்பது தொல்காப்பிய மரபியற் சூத்திரம். அது கடவுளே தமிழுக்கு முதனூல் செய்தார் என்று சொல்லுகிறது. 'ஆதியில் தமிழ்நூல் அகத்தியற்கு உணர்த்திய, மாதொரு பாகனை வழுத்துதும், போத மெய்ஞ்ஞான நலம்பெறற் பொருட்டே' என்னும் பழஞ் செய்யுளும் அதனை வலியுறுத்துகின்றது. ஆகவே மேற்கண்ட உரை மேற்கோளாலும் கடவுளே நம் தீந்தமிழுக்கே யன்றி எல்லா மொழிகளுக்கும் மூலகாரணன் என்பதறிக.

அவ்வாறன்றி ஓர் மனிதனோ அல்லது பலர்கூடியோ தமிழ் மொழியை உண்டாக்கக்கூடும் என்றால் குற்றம் என்னையோ எனின், மனிதர் உண்டாக்கிய மொழிக்கு, பின்னர் கடவுள் இலக்கணம் அமைத்தார் என்பது நகையை விளைவிப்பதாமென மறுக்க.

'நிறையுயிர் முயற்சியின் உள்வளி துரப்ப
எழும்அணுத் திரள்உரம் கண்டம் உச்சி
மூக்குற்று இதழ்நாப் பல்அணத் தொழிலின்
வெவ்வேறு எழுத்தொலி யாய்வரல் பிறப்பே' என்னும்

நன்னூற் சூத்திரக் கருத்தின்படி, எழுத்தை ஆக்குவோனும் எழுத்தினாற் சொல்லை ஆக்குவோனும் மனிதனேயாம் என்பது துணியப்பட்டதே எனின், அப்படியன்று. கண் ஒருபொருளைப் பார்ப்பது சூரியனுடைய ஒளியைக்கொண்டே. உயிர் ஒன்றை அறிவதும் ஒன்றைச் செய்வதும் கடவுள் கொடுத்த அறிவும் செயலும் கொண்டே. ஆகையால் மிகப்பரந்து கிடக்கும் மொழியை உண்டாக்கினவன் கடவுளேயாம்.

கிறித்துமத நூலாரும், பல மொழிகள் உண்டானதற்குக் காரணம், ஒருகாலத்தில் மனிதர்கள் வானுலகத்தில் ஏறுவதற்கு

'பேபல்' என்னும் கோபுரத்தைக் கட்டி எழுப்பும்போது கடவுள் அவர்களுள் ஒருவர் பேசுவது மற்றொருவர் அறியாதபடி வேறு பாடான பல மொழிகளை உண்டுபண்ணினர் என்று சொல்லுவர். மொழிகள் வேறுபட்டதற்கு அவர் கூறும் காரணம் எப்படியிருந்தாலும், மொழிகளை உண்டாக்கவல்லவன் கடவுளேயன்றி மனிதன் அல்லன் என்பதே அவருக்கும் உடம்பாடு ஆயிற்று.

பிறநாட்டு உரையாளர்கள் சிலர் மொழிகள் எல்லாம் அந்தந்த நாட்டில் மரம் முதலானவைகளைப்போல, இயற்கையாய் உண்டானவைகளேயாம்; அவற்றை உண்டாக்க ஒரு கடவுள் வேண்டாம் என்று கூறுகின்றனர். மொழி என்பது குடத்தைப் போல ஒரு காரியப்பொருள். அது தானே உண்டாக மாட்டாது. குடத்தை உண்டாக்க ஒரு குயவன் வேண்டும். அதுபோல மொழியை உண்டாக்க ஒரு கருத்தா வேண்டும். அந்தக் கருத்தா மனிதன் அல்லன். ஆதலால் கடவுளேயாகும்.

அப்படியானல் பலவேறுவகையான மொழிகளைக் கடவுள் படைப்பானேன். மனிதர்கள் எல்லாரும் வழங்குவதற்கு ஏதேனும் ஒரு மொழியே போதாதோ எனின், அது ஒரு கேள்வியன்று. பல வேறு வகையான மனிதர்கள், பல வேறுவகையான நிறங்கள், குணங்கள், தொழில்கள், மரங்கள், பறவைகள் முதலியவற்றைக் கடவுள் படைப்பானேன். இதுதான் மனிதனுல் ஆகாத செயல். இதை அறிவாளர் கடவுளுடைய திருவிளையாடல் என்பர்.

அதை ஒப்புக்கொள்வோம்; மொழிகள் எல்லாம் கடவுள் படைப்பாயிருக்க, அவற்றுள் ஒன்ருகிய தமிழ் மாத்திரம் மற்ற மொழிகளிற் சிறந்ததென்று எங்ஙனம் கூறலாம் எனின், மலர்களிலே தாமரை சிறந்ததென்று சொல்வது எப்படி? பறவைகளில் அன்னம் சிறந்ததென்பது எப்படி? நகரங்களில் காஞ்சி சிறந்ததென்பது எப்படி? மற்றதனில் இல்லாத பெருமை இவைகளிடத்தில் இருப்பதனுல் தான். அப்படியே மற்றமொழிகளுக்கு இல்லாத சில பெருமைகள் இதனிடத்தில் இருப்பது பற்றியே என்க.

தமிழுக்கு உள்ள பெருமை முன்னமே சொல்லியபடி மொழிகளில் இனிமையுள்ளது என்பது ஒன்று. உயிர்களுக்கு உறுதியாகிய அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு பொருள்களையும் குற்றம் அற ஓதுவது ஒன்று. இந்த நான்கு பொருளும் வடமொழியில் ஓதப்பட்டதும் உண்டு. ஆயினும் அவை சிலவிடத்திலே பழுதுபடும்.

அதன் விளக்கத்தை மேலே 'தமிழ் அறநூலின் மேன்மை' விரித்துரைக்கப்படும் இடத்தில் காண்க.

வடமொழியே அறம் பொருள் இன்பம் வீடு என்பவைகளை எடுத்துச் சொல்லும் முறைமையில் தமிழுக்குப் பின்னே மிகச் சேய்மையில் நிற்குமானால், ஆங்கிலம் முதலான மற்றை எண்ணிடைப்படக் கிடக்கும் மொழிகளைத் தமிழ் மொழியோடு ஒப்புக் காண வேண்டியதில்லை. ஏனெனில், அம்மொழிகளெல்லாம் அந்த நான்கு பொருள்களுள் இடையில் நின்ற பொருளும் இன்பமும்பற்றியே மிக எடுத்துக்கொண்டு பேசுவன; முதலும் கடையும் (அறமும் வீடும்) இலக்கண முறையோடு பேசுவன அல்ல.

அது கிடக்க, நான்கு பொருளையும் பழுதறச் சொல்லுவது தமிழ்மொழி நூலன்றி வேறுமொழி நூல் அன்றென்பது தேறுக. தமிழ்நூலின் நோக்கமே அதுவன்றி வேறில்லை யென்பதை 'அறம்பொருள் இன்பம்வீ டடைதல்நூற் பயனே' 'மாத்தின் கனக்கோட்டம் தீர்க்கும் நூல் அஃதேபோல் மாந்தர், மனக்கோட்டம் தீர்க்கும் நூல் மாண்பு' என்னும் நன்னூற் சூத்திரங்களைக் கொண்டும் துணிந்து கொள்க.

இத்துணையும் கூறியவாற்றால் தமிழ்மொழியின் பொருட் சிறப்பை அறிந்துகொள்க.

தமிழ்மொழியின் தன்மை.

தமிழ்மொழியில் உள்ள 'ழறழ' என்ற மூன்று மெய்யெழுத்துக்களும் 'எகரமும் ஒகரமும்' ஆகிய இரண்டு உயிரெழுத்துக்களும், ஆக ஐந்தெழுத்துக்களும் வடமொழி முதலியவற்றில் இல்லை.

ஆகையால் தமிழ்மொழி ஒரு தனி மொழியாம்.

அப்படியானல்

'ஐந்தெழுத்தால் ஒரு பாடையும் உண்டென்று
அறையவே நாணுவர் அறிவுடையோரே'
அன்றியும் தமிழ் நூற்கு அளவிலை அவற்றுள்
ஒன்றே யாயினும் தனித்தமிழ் உண்டோ'

என்று இலக்கணக்கொத்தில் சாமிநாத தேசிகர் கூறியதனுல், மேற்குறித்த ஐந்தெழுத்துக்கள் இருப்பதைக்கொண்டு தமிழுக்கு ஏற்றம் சொல்லுவது தகாதென்றும், தமிழ் நூல்கள் எல்லாம் வடமொழிக் கலப்பில்லாமல் செய்யப்படவில்லை யென்றும், வடமொழி நூல்களை மொழி பெயர்த்துச் செய்யப்பட்டனவே தமிழ்நூல்களாமென்றும் பெறப்படும் எனின், அவர் வடமொழிப் பற்று மிகுதியாக உடைமையாலும் தமிழ் நூல்களை உள்ளவாறு ஆராய்ச்சி செய்து அறிந்து கொள்ளாததினுலும் அவ்வாறு கூறினர். இவர் தம்மரபினோரால் பூசிக்கப்படும் திருமுறைகளுள் ஒன்ருகிய பெரிய புராணத்தில், திருஞானசம்பந்த நாயனர் புராணத்தில்,

'திசையனைத்தின் பெருமையெலாம் தென்றிசையே வென்றேற
மிசையுலகும் பிறவுலகும் மேதினியே தனிவெல்ல
வசையில் செழுந் தமிழ்வழக்கே அயல் வழங்கும் துறைவெல்ல
இசைமுழுதும் மெய்யறிவும் இடங்கொள்ளும் நிலைபெருக'.

... ...

'சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதாரம் செய்தார்' என்று சேக்கிழார் பாடிய பாட்டின் கருத்தை உய்த்துணர்ந்திருப்பாரே யானுல் அங்ஙனம் கூறமாட்டார்.

அப்பெரியார் புராணம் வடமொழி நூலின் மொழி பெயர்ப்பா? திருக்குறள் திருக்கோவையார் இவை வடநூலின் மொழி பெயர்ப்பா? தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி இவையெல்லாம் வடநூன் மொழிபெயர்ப்பா? பத்துப்பாட்டு எட்டுத்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, நாலடி முதலிய பதினெண்கீழ்க்கணக்கு முதலிய சங்க நூல்களெல்லாம் வடநூல் மொழிபெயர்ப்பா? அல்லவே. பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் முதலிய புராணங்களை வடமொழிப் புராணமொழி பெயர்ப்பு என்றுரும் உளர். அவர் உண்மை தெரியாதவர். பெரியபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கும் பெரியோரெல்லாம் தமிழ்நாட்டில் தமிழ்மொழி பேசும் குடிகளில் தோன்றியவர். அவர்களுடைய திருவருட் செயல்களெல்லாம் தமிழ் நாட்டில் நிகழ்ந்தனவே. அச்செயல்களெல்லாம் முதலில் அந்நிலத்து மொழியில் எழுதப்பட்டு, அப்பாலே பிறமொழியில் எழுதப்படும். முதலிலே பிறமொழியில் எழுதப்பட்டு அப்பால் அந்நிலத்து மொழியில் எழுதப்பட்டதென்று சொல்லுதல் கூடாது. ஆகவே பெரிய புராணத்திற் கண்ட அருட்செயல்கள் நிகழ்ந்த பின்னர் தமிழிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டு வடநூல்களில் ஏறியன வென்று தெளிக. தமிழ்த் திருவிளையாடற் புராணத்துக் கண்ட திருவருட் செயல்களும் அப்படியே. இதில் ஐயம் வேண்டா. ஐயம் தெளிவதற்குக் 'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி' என்ற திருப்பாட்டையும், 'மதிமலிபுரிசை மாடக்கூடல்' என்ற திருப்பாட்டையும் எடுத்துக்கொண்டு பாருங்கள். இரண்டு பாட்டும் பரமசிவனே பாடிக்கொடுத்தன வென்று அறிகிறோம். முன் குறித்தபாட்டு, தருமி என்னும் ஓர் அந்தணன் பொற்கிழி பெறுதற்பொருட்டுப் பாடிக்கொடுத்தது. பின் குறித்தபாட்டு பாணபத்திரர் சேரமான்பெருமாள் நாயனரிடம் பொருள் பெறும்படியாகப் பாடிக்கொடுத்தது. இந்த இரண்டு பாட்டும் சிவபெருமான் தமிழில் தானே பாடியன. அத்தமிழ்ப் பாடல் களைப்பற்றிய வரலாறெல்லாம், முந்துறத் தமிழில் எழுதப்பட்டு விளங்கிப், பின்னர் வடமொழியாளரால் மொழிபெயர்த்துக் கொள்ளப்பட்டனவேயாகும்.

தமிழ் நாட்டில் உள்ள, காஞ்சி, காழி, ஆரூர், திருமறைக் காடு, நாகை, திருவேங்கடம் முதலிய தலங்களின் அருளிச் செயல்கள் எல்லாம் தமிழிலிருந்தே வடமொழியில் ஏறினவெனக் கொள்க. அத்தலங்களில் நிகழ்ந்த அருட்செயல்களின் வரலாறு களை, வடநூன் முனிவர் ஒருவருக்கொருவர் கூறிக்கொண்டதாக, அப்புராணங்களின் முகவுரைகளில் சொல்லப்பட்டிருப்பது புனைந்துரைவகையில் சேர்ந்தது. உண்மையெனக் கொண்டா லும், தமிழிலிருந்து மொழிபெயர்த்துக் கொண்டவற்றை அவ் வடநூன்முனிவர் ஒருவருக்கொருவர் கூறிக் கொண்டாரென்று கொள்க. அவ்வாறன்றி, வடமொழி தெய்வமொழி யென்பது பற்றி அவை வடமொழியில் முன்னர் எழுதப்பட்டுத் தமிழில் பின்னர் மொழி பெயர்க்கப்பட்டன என்பாரும் உளர். அவர் சிவபெருமானும், அகத்தியரும், முருகவேளும், திருமாலும் போற்றிய தமிழ்மொழியைத் தெய்வமொழியன்றென்பாராய்த் தம் தாயை மலடியென்பாரை ஒப்பர். ‘தேவபாடையின் இக் கதை செய்தவர் மூவரானவர்’ என்னும் கம்பர் வாக்கினாலும் வடமொழி தேவபாடை யெனப்பட்டதெனின், அவர் ஆரிய மொழியை உபசாரவழக்கால் தேவபாடையென்றார் என்க. ஆரியரைத் தேவர் என்றல் உபசாரம். அவர் கூறியது உபசாரம் என்பது, அவர் அகத்தியரைப் புகழ்ந்துரைக்குமிடத்தில் ‘தழற் புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான்’ என்று கூறியதனாலும் உணர்க. எனவே, தமிழ்த்தலபுராணங்களுக்கு முதனூல் வட மொழிப் புராணங்கள் அல்லவெனத் தெரிந்துகொள்க. ஆகவே தனித்தமிழ்நூல் ஒன்றும் இல்லையென்ற இலக்கணக்கொத்து நூலார் உரை மயக்கவுரையாதல் அறிக.

பிரயோக விவேக நூலாரும், தமிழ் என்பது திரமிளம் என் னும் வடசொல்லின் திரிபென்றும், அகத்தியத்துக்கு முதனூல் பாணினீயம் என்றும் மயங்கியுரைத்தார். வடமொழியாளர் தமிழ் என்பதற்குத் திரமிளம் என்னும் பெயரிட்டு வழங்குவதற்கு முன் எப்பெயரால் தென்னாட்டில் அம்மொழி வழங்கியது? தமிழ் என்பதன்றி வேறென்ன? ஆகலின் தமிழ் என்பது வட மொழியில் திரமிளம் எனத்திரித்துக்கொண்டாரென்றே கொள்க.

இப்படியே தமிழ்மொழிகள் பலவற்றை வடமொழியாளர் திரித்துக்கொண்டனர். "'மணலூர்புரம்' என்னும் தமிழ் வியாச பாரதத்திலும் சென்றது என்று பிரயோக விவேக நூலாரும் கூறினர்.

தமிழ்மொழிப் புணர்ச்சிக்கட்படும் செய்கைகளும், குறியீடுகளும், வினைக்குறிப்பு வினைத்தொகை முதலிய சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சில சொற்பாகுபாடுகளும், அகம், புறம் என்னும் பொருட் பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுள் இலக்கணமும், இவை போல்வன பிறவும் வடமொழியில் பெறப்படாமையால், தமிழ் இலக்கண நூலுக்கு வடமொழியிலக்கண நூல் முதனூல் அன்றென்று ஆசிரியர் சிவஞானமுனிவர் பாயிரவிருத்தியிலே கூறினர். கடைப்பிடிக்க.

இனி, வேதம் சாத்திரம் மந்திரம் முதலாயின வடமொழியில் உள்ளனவேயன்றித் தமிழில் கிடையா; ஆதலால் வடமொழியே சிறந்தது என்று கூறுவாரும் உளர். வேதமும் சாத்திரமும் மந்திரமும் எற்றுக்கு? உயிர்கள் ஞானத்தை அடைந்து, வினைப்பாசத்தை வேர் அறுத்து, இறைவன் அடி சேர்தற்குத்தானே? அந்த ஞானம் கிடைக்கப்பெற்று இறைவன் அடியில் அன்புகொண்ட உயிருக்கு, வேதம் வேண்டா, சாத்திரம் வேண்டா, மந்திரமும் வேண்டா. வேதத்தை ஓதிய ஒருவன் பாவத்தைச் செய்ததனல் கரிக்குருவி யாகப் பிறக்கலுற்றான். யானையும் சிலந்தியும் பனைமரங்களும் இறைவன் திருவடியைச் சேர்ந்தன. அவை எந்த வேதத்தை, எந்த மந்திரத்தை ஓதியன? திருமாலை அழைத்து வீடுபெற்றயானை எந்த மந்திரத்தை ஓதியது? வடமொழி மந்திரமா தென்மொழி மந்திரமா? நந்தனர் ஓதியது எந்த வேதம்; எந்த மந்திரம்? கண்ணப்ப நாயனர் ஓதியது

எந்தச்சாத்திரம் எந்த மந்திரம்? அன்பு உருக்கொண்ட அடியார்கள் நினைப்பதெல்லாம் மந்திரமே; சொல்வதெல்லாம் மந்திரமேயெனத் தெளிக. கண்ணப்பநாயனார் கூறியது தமிழ். அதுவும் குழறல். அது வடமொழி வேதத்தைக் காட்டிலும் சிறந்தது, மந்திரத்தைக் காட்டிலும் சிறந்தது என்று காளத்திநாதரே சிவகோசரியாருக்கு எடுத்துரைத்தார். இதனை,

'மன்பெருமா மறைமொழிகள் மாமுனிவர் மகிழ்ந்துரைக்கும்
இன்பமொழித் தோத்திரங்கள் மந்திரங்கள் யாவையினும்
முன்பிருந்து மற்றவன்றன் முகமலர அகநெகிழ்ந்த
அன்பினினைந் தெனையல்லால் அறிவுறுமொழிநல்ல'

என்னும் சேக்கிழார் திருவாக்கால் அறிக.

'கருமமாதவம் செபஞ்சொல் காசறு சமாதிஞானம்
புரிபவர் வசமதாகிப் பொருந்திடேம் புரையொன்றின்றித்
திரிவறும் அன்புசெய்வோர் வசமதாய்ச் சேர்ந்துநிற்போம்
உரைசெய்வோம் அவர்முன்பெய்தி அவருளத்து உறைவோம் [என்றும்'

என்னும் வாயு சங்கிதையானும் தெளிக.

'வேதம் ஓதிலென் சாத்திரம் கேட்கிலென்
நீதிநூல் பல நித்தல் பயிற்றிலென்
ஓதி அங்கமோர் ஆறும் உணரிலென்
ஈசனை உள்குவார்க்கன்றி யில்லையே'

என்று திருநாவுக்கரசரும்,

'கோழைமிட றாககவி கோளுமில வாகஇசை கூடும்வகையால்
ஏழையடி யார்கள்அவர் யாவைசொன சொல்மகிழும் ஈசன் இடமாம்
தாழையிள நீர்முதிய காய்கமுகின் வீழநிறை தாறுசிதறி
வாழைஉதிர் வீழ்கனிகள் ஊறிவயல் சேறுசெயும் வைகாவிலே'

என்று திருஞான சம்பந்தரும் ஓதியவாறு காண்க.

வெறும் வேதத்தை ஓதுவதனாலே முத்தியடைவோம் என்று மனப்பால் குடிப்பவர், காளத்தி அப்பர், வேதமே ஓதி மந்திர

விதியின் மரபுளி வழாமல் அருச்சித்த சிவகோசரியாருக்கு முத்தி யளிக்காமல், கண்ணப்பநாயனருக்கு முத்தி அளித்ததற்குக் காரணம் என்னவென்று பார்க்கவேண்டும்.

அதுவுமன்றி, வடமொழி வேதங்கள் சிவபெருமானை வழிபட்டு வேண்டிய வரங்களைப்பெற்ற திருப்பதிதான், வேதாரணியம் என்றும் திருமறைக்காடு என்றும் சொல்லப்படும். இப்பதி தமிழ்நாட்டில் உள்ளதே. வேதங்களுக்குத் தலைவனாகிய பிரமன் வழிபட்டு வேண்டிய வரங்களைப் பெற்ற திருப்பதி தமிழ்நாட்டில் உள்ள காழியே. பிரமன் வழிபட்ட காரணத்தால் பிரமபுரம் என்னும் பெயர் பெற்றது. இந்த இரண்டு திருப்பதிகளும் முறையே திருமறைக்காடு என்றும் பிரமபுரம் என்றும் பெயர் பெற்று வழங்குவது எதற்காக? இவ்விரண்டு திருப்பதிப்பெயரும், தமிழ்மறையினும் வடமொழி வேதமே பெரிதென்று சொல்லுவாருடைய அகக்கண்ணின் குருட்டை ஒழிக்கும் அருமருந்துகளாம். இவ்விரண்டு மருந்தினாலும் அக்குருடு தீராதாயின், அவ்வேதங்கள் வழிபட்டு அடைத்த திருக்கோயிற் கதவைத் திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும், முறையே திறக்கவும் மூடவும் பாடிய தேவாரங்களாகிய பெருமருந்துகள் தீர்ப்பது திண்ணம்.

'வேதங்கள் எண்ணில்கோடி மிடைந்துசெய் பணியைமிக்க
ஏதங்கள் நம்பால்நீப்பார் இருவரும் செய்துவைத்தார்
நாதங்கொள் வடிவாய்நின்ற நதிபொதி சடையார்செய்ய
பாதங்கள் போற்றுமேலோர் பெருமையார் பகருநீரார்.'

என்னும் பெரியபுராணச் செய்யுளின் கருத்தை உணர்ந்து கொள்க.

'ஆகவே, வடமொழியில் வேதங்களும் சாத்திரங்களும் எப்பொருளைப் பேசுகின்றனவோ அப்பொருளைப் பேசும் தமிழ் நூல்களெல்லாம் தமிழ் வேதமும் இயல் நூல்களுமாம் என அறிக. திருக்குறள், மூவர் தேவாரம், மணிவாசகர் .கோவை,

திருவாசகம், ஆழ்வார் திருவாய்மொழி, திருமந்திரம், முதலான வைகள் எல்லாம் தமிழ் மறைகளெனத் தெளிக. திருவாசகத்தில், சிவபுராணம், கீர்த்தித்திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல் இவற்றின் கருத்துக்களைக் காட்டிலும் வடமொழி மந்திரங்களின் கருத்து வேறானவையும் அல்ல அவற்றினும் சிறந்தவையும் அல்லவென்று அறிக. இதனை,

> தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
> மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
> திருவா சகமும் திருமூலர் சொல்லும்
> ஒருவா சகமென் றுணர்.

என்னும் அவ்வையார் திருவாக்கானும் உணர்க.

> 'பதிக நாண்மலர் கொண்டு தம்பிரான் கழல்பரவி
> அதிக நண்பினை நீல நக்கருக்களித்தருளி
> எதிர்கொளும் பதிகளில் எழுந்தருளினர் என்றும்
> புதிய செந்தமிழ்ப் பழமறை மொழிந்த பூசுரனர்.'

என்னும் திருநீலநக்க நாயனர் புராணத்துச் செய்யுளிலே, திருஞானசம்பந்தப் பெருமான் மொழிந்தருளிய தேவாரத்தை 'என்றும் புதிய செந்தமிழ்ப் பழமறை' யென்று சேக்கிழார் சிறப்பித்துக் கூறியதைக் கொண்டும் தெளிக. பழமறை என்றதனல் தமிழிலும் மறைகள் தொன்றுதொட்டே இருந்தன. அவற்றின் பொருளையே செந்தமிழில் பாடினர் என்பது பெறப்படும். பழமறை என்றது வடமொழி வேதம் எனக்கொண்டு அதன் பொருள்களில் பழையன கழிதல் என்பதனல் தள்ள வேண்டியதைத் தள்ளிக் கொள்ளவேண்டியதைக் கொள்ளவைத்தார் எனினும் பொருந்தும். செந்தமிழை என்றும் புதிதென்றார், வடமொழி போலப் பேச்சுவழக்கு இறவாமைபற்றி.

வடமொழி நான்மறைகளுக்கு முந்தியதாகிய தொல்காப்பியத்தில் 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதனூலாகும்' என்னும் சூத்திரக் கருத்தை நுட்பமாக ஆராய்ந்தால், அதில் சாத்திரக் கருத்துக்கள் பொதிந்து கிடப்பதைக் கண்டு

கொள்ளலாம். வினையின் நீங்கி விளங்கிய அறிவினை யுடைய முதல்வன் இறைவன் எனவே, வினையுண்மையும், வினைக்கு அடியான மலம் உண்மையும், வினையின் நீங்காதவனும் விளங்கிய அறிவற்றவனும் முதன்மையில்லாதவனும் ஆகிய சீவன் உண்மையும் குறிக்கப் பட்டவாறாயிற்று. இச்சூத்திரக் கருத்தை முற்றும் உரைக்கப்புகின் மிக விரியும். வடமொழிச் சாத்திரங்களை ஒத்தனவான பண்டைத் தமிழ் நூல்கள் பல இருந்தன, தென்னாட்டைக் கடல் கொண்ட காலத்தில் இறந்தனவெனக் கொள்க. அறிவு நூல்கள் இரண்டு நாட்டினும் தனித்தனி வழங்கின வென்பது ஆன்றோர் துணிபு. (தொடரும்.)

உடல் இயலும் உடல் நல வழியும்.

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள், B.A., L.T.,
உரத்தநாடு.

(முற்றொடர்ச்சி 192-ம் பக்கம்.)

தீனிப்பை :—இது வயிற்றின் இடது பக்கத்திலிருக்கிற ஒரு பெரும்பை. இது நன்றாய் விரிந்தால் ஒன்றே முக்காலே அரைக் காற்படி கொள்ளும். இது உணவின் அளவிற்குத்தகப் பெருத்து அல்லது சிறுத்திருக்கிறது. இது நீளவசம், குறுக்குவசம் (Crosswise), சாய்வுவசம் (Slantwise) உடைய மூன்று

தசைப்படைகளாலாயது. உண்வு இப்பைக்கு வந்தவுடன் இத் தசைப்படைகள் சுருங்குவதால் இப்பை முதலில் நீளவசத்திலும், பிறகு குறுக்குவசத்திலும் அதன் பின்னர் சாய்வு வசத்திலுஞ் சுருங்கி உணவைக்கடைகிறது. இவ்வாறு கடைபடும்பொழுது உணவுடன் கலப்பது பைக்கரைநீர் (Gastric Juice) ஆகும். இது நாள் ஒன்றிற்கு ஒன்றேகால்முதல் ஒன்றேகாலேயரைக்காற் படி ஊறுகின்றது. இதை உண்டாக்குவன தீனிப்பையின் உட்புறச் சுவரில் பொதிந்துள்ள எண்ணிறந்த சிறுபைகளே! * இப்பைகள் இச்செரிநீரைக் குருதியிலிருந்தே தயாரிக்கின்றன. இச் செரிநீரில் ஊன்கரைபொருளும் (Pepsin), உப்புப்புளிப்பும் (Hydrochloric acid) இருக்கின்றன. இவற்றுள் உப்புப் புளிப்பு உணவிலுள்ள பல நச்சுக்கூடுகளைக் கொல்வதோடு நில்லாது. எச்சிலால் காரமாக்கப்பட்ட உணவைப் புளிப்பாக்கிவிடுகிறது. இவ்வாறு புளிப்பாக்க உணவு எவ்வளவுக்கெவ்வளவு மெல்லப்பட்டு எச்சிலுடன் கலக்கப்பட்டதோ அவ்வளவுக்கவ்வளவு மிகுதியாக இப்பைச் செரிநீரும் ஊறுகிறது. ஆதலின் நன்றாய் மென்றுண்பதின் அரும் பயன்களில் இதுவுமொன்றே. இவ்வாறு புளிப்படைந்த பின்னரே அவ்வுணவை ஊன்கரை பொருள் தாக்கி அதிலுள்ள ஊன் முதலைக் கரைக்கிறது. இவ்வாறு கடையப்பெறும் பொழுது உணவின் தன்மையையும், சமைக்கப்பட்ட விதத்தையும், மெல்லப்பட்ட அளவையும் பொறுத்து 2 முதல் 4 மணி நேரம் வரை ஆகும். குறைந்த சத்தும், நன்றாய்ச் சமைக்கப்பெறுதலும், மெல்லப்படுதலும் உடைய உணவு சடுதியிலும், இவற்றிற்குமாறுன உணவு நீண்டபொழுதும்

---

* இவை நார்த்தம்பழத்தோலின் வெளியில் காடு முரடான பைகளிலிருந்துகொண்டு தோலேமடக்கிஞல் சாற்றைப் பீரிடுவதுபோல் தீனிப்பையின் தோலில் இருந்துகொண்டு அது சுருங்கும்போது இக்கரைநீரைச் சொரிகின்றன. இவ்வாறு சொரிவதற்குமுன் ஆங்குவருங் குருதியின் மிகையால் தீனிப்பை சிவக்கிறது.

கடையப் பெறுகின்றன.* எந்நேரமாயினும் இறுதியில் கொழ கொழப்பான பாகு (Chyme) ஆவதே பக்குவமாம். பாகானதும் தீனிப்பையின் மற்றொரு ஓரத்துள்ள குடர்க்கதவின் (Pylorns) வழியே சிறுகுடலுக்குட் செல்கிறது.

குடர்க்கதவு:—இதைப்போன்ற அறிவுடைக்கதவு உலகத்தில் வேறொன்றுமில்லை. உணவு பாகாகும்வரை இது அதை விடாமல் மூடிக்கொண்டே இருக்கிறது. பின் பாகானதைத் தானே தெரிந்துகொண்டு ஒன்று அல்லது இரண்டுதுடி நேரத்திற் கொருமுறை திறந்து திறந்து பாகைச் சிறிது சிறிதாகக் குடற்குட் செல்லவிடுகிறது. விடும்பொழுது பாகாக்கப்படாத கட்டிப் பொருள் ஏதேனும் ஒன்று நெருங்கினாலும் உடனே கெட்டியாய் மூடிக்கொள்கிறது. என்ன விந்தை! உடனே தீனிப்பை வருந்தி முயன்று கடைந்து அதைப் பாகாக்க முயல்கிறது. இவ்வாறு பன்முறை பல் மணி நேரம் முயன்றும் பாகாகாவிடின் இனி முயல்வது வீணென்றறிந்து இக்கதவு நன்றாய்த்திறந்து யாவற்றையும் விட்டுவிடுகிறது. என்ன பொழுதிற்கேற்ற அறிவு! (சமயோசிதபுத்தி).

சிறுமணிக்குடல்:—இது ஒரு அங்குலக் குறுக்கும் ஏறக் குறைய 20 அடி நீளமுமுள்ளது. இத்துணை நீளமுடைய குடல் சுருட்டி மடக்கிச் சிறு இடத்தில் அடைக்கப்பெற்றிருக்கிறது. இதனால் மடிப்புகள், மூலை முடக்குகள் மிகுந்து அதன் ஊற்றுப்

* நன்றாய் மென்றுண்பழக்கம் இல்லோர்க்கும், அளவிற்கு மிஞ்சி உண்போர்க்கும், இடையிடையே தண்மை நுகர்வோர்க்கும் இப்பையின் சுவர் மிகுந்த வேலையால் களைத்து ஊதித்தொந்தியாக விழுந்துவிடுகிறது. ஆதலின் அடிக்கடி கோதுமைத்துணுக்குகள் (Biscuits), சர்க்கரைத் துணுக்குகள் (Peppermints), கோக்கோத்துணுக்குகள், பட்டாணிக் கடலை, பொட்டுக்கடலை, கல்கண்டு, காராபூந்தி, ஓமப்பொடி முதலிய வற்றைத் தின்றுகொண்டே இருத்தல் கூடாது.

பரப்பும் (Secreting surface), சோரும் பரப்பும் (Absorbing surface) நேரேயிருப்பதைவிடப் பன்மடங்கு மிகுத்திருக்கின்றன. இதன் உட்பரப்பு முழுவதிலும் ஆயிரக்கணக்கான பிசிறுகள் (Villi) புல் முளைத்தாற்போற் நெருங்கிக்கொண்டிருக்கின்றன. இவற்றின் நெருக்கத்தால் குடலின் உட்புறம் மயிர்ப்பட்டுப் (Velvet) போன்று மெத்தென்றிருக்கிறது. இவற்றினிடையே ஆயிரக்கணக்கான குடற்பைகள் (Intestinal Glands) இருக்கின்றன. இவை சொரியும் குடற்கரை நீர் (Intestinal Juice) கரைபடாத சர்க்கரையைக் கரைக்கிறது. இதுவன்றிக் கணையக் கரைநீரும், (Pancreatic Juice) பித்தநீரும் (Bile) மணிக் குடலுட் சொரியப்படுகின்றன. இவற்றுள் எல்லாக்கரை நீர்களினும் மிகச் சிறந்த கணையக்கரை நீரையுண்டாக்குவது தீனிப்பைக்குப் பின்னுள்ள கணையமென்னும் நீண்ட, தட்டையான, குருதிச் சிவப்பான ஓர் பெரும்பையாகும். இஃதுண்டாக்குங் கரைநீர் மிகச் சிறந்ததேனெனின் இதிலுள்ள மூன்று காடிப் பொருள்களுள் ஒன்று வாயினூற் கரைக்கப்பெற்ற கஞ்சிப் பொருளின் சிறுபங்கைத் தவிர எஞ்சிய பெரும்பங்கையும், மற்றொன்று தீனிப்பையினூற் கரைக்கப்பட்ட ஊன் பொருளின் சிறுபங்கைத் தவிர எஞ்சிய பெரும்பங்கையும் கரைக்கின்றன. இனி மூன்றும் பொருள் கல்லீரல் உண்டாக்குகிற பித்த நீருடன் சேர்ந்து ஒருறுப்புங்கரைக்காத கொழுப்பை மிகச் சிறு கோளங்களாகப் பிரித்து நீரில் மிதக்கச் செய்கிறது. இவ்வாறு உணவின் பெரும் பகுதியை இதுவே கரைக்கிறது. இப்படியாக மணிக்குடலுள் கரைதல் முற்றுப்பெறுகிறது. இவ்வாறு முற்றுப்பெறல் எளிதாக மணிக்குடலும் நெளிந்து நெளிந்து கொடுக்கிறது. இந்நெளிவை உண்டாக்குவது பித்தநீரின் செய்கையேயாம். இதுவன்றிப் பித்தநீர் ஓர் காரப்பொருளாயிருந்து கொண்டு பைக்கரை நீர் உணவை ஆக்கின புளிப்பை மாற்றியும் விடுகிறது.

உணவு உறிஞ்சப்பெறும் வகை :—இவ்வாறு பலவகைப்பட மாறுபடும் உணவு உடலால் உறிஞ்சப்பெறும் வழியைக் கருதுவாம். முதலில் வாயின் சுவரிலுள்ள மயிர்க்குழாய்கள்

சிறிது நீரையும் உப்புக்களையுஞ் சர்க்கரையையும் உறிஞ்சிக் கொள்கின்றன. இதனின் சிறிது மிகுதியாகத் தீனிப்பையின் சுவரில் உள்ள மயிர்க்குழாய்கள் இத்தகைப் பொருள்களை உறிஞ்சிக் கொள்கின்றன. ஆதலின் வாயும் தீனிப்பையும் உறிஞ்சுவது நீர், உப்பு, சர்க்கரை மட்டுந்தான். ஆனால் இப்பொருள்களின் பெரும்பகுதியையும் ஏனைய பொருள்களையும் உறிஞ்சுவன மணிக்குடற் சுவரிற்றெங்கும் பிசிறுகளுக்குள்ளிருக்கும் மயிர்க் குழாய்களும் பாற்குழாய்களுமாம் (Lecteals)*. பிசிறுகளின் சுவர்ப் புறத்துள்ள நுண்கூடுகள் கரைக்கப்பட்ட உணவுப் பொருள்களில் பயனுடையன யாவற்றையும் தெரிந்தெடுத்து உறிஞ்சி ஊன் பொருளையும், கரிநீர் முதற் பொருள்களையும் மயிர்க்குழாய்களுக்கும், கொழுப்பைப் பாற்குழாய்களுக்கும் பிரித்துக் கொடுப்பது வியக்கத் தகுந்த தொன்றே. இவ்வாறு உறிஞ்சும் மயிர்க் குழாய்கள் சேர்ந்து சேர்ந்து வடிகுழாய்களாகி இவை ஒன்று சேர்ந்து கல்லீரல் வடிகுழாயுட் (Portal Vein) கலக்கின்றன. இது கல்லீரலுக்குட் சென்றதும் ஆங்கு மிகுந்துள்ள மாப்பொருளுஞ் சர்க்கரையும் இரும்பும் வேண்டியபொழுது பயன்படும்படி சேமித்து வைக்கப்பெறுகின்றன. இதுவன்றி ஈண்டு இவ்வுணவுப் பொருள்களிலுள்ள நச்சுப் பொருள்கள் எரிக்கப்பட்டுப் பித்த நீராக்கப்பெறுகின்றன. சாராயம், அபின், காப்பி, புகையிலை ஏனைய மருந்துகள், இவைகளின் சத்துக்கள் ஈண்டு எரிக்கப் பெறுவதால் இவை அத்துணைத் தீங்கு செய்வதில்லை. ஒருவனைத் தோலின் காயத்தின் வழியே புகட்டிக் கொல்ல எத்துணை நச்சுப் பொருள்வேண்டுமோ அதிலிருமடங்கு வாயின் வழியே கொல்லத் தேவை. ஏனெனில் அவை கல்லீரல் வழியே போகவேண்டியதாயிருப்பதால் அது தன்னாற் கூடிய வரை எரித்து விடுகிறது.

* கொழுப்பு மிகுந்த உணவை உண்டபின் அக்கொழுப்பு பால்போற் கரைக்கப்பட்டு இக்குழாய்களால் உறிஞ்சப் படுவதால் இவை பால்போன்ற நிறத்துடன் விளங்குகின்றனவாதலின் இப்பெயர் பெற்றன. பாலின் ஆடை (Cream) நுண் கோளங்களாகப் பிரிக்கப்பட்டு நீரில் மிதந்து கொண்டிருக்கும் பொழுது பாலாகிறது. இவ்வாறு ஏனைய கொழுப்புகளும் பிரிபட்டு மிதந்தால் பால்போலாகின்றன.

அளவிற்கு மேல் உண்டால் கல்லீரல் எரித்ததுபோக எஞ்சியது உயிர்க் கிறுதி பயக்கிறது. இக்கல்லீரல் நன்றாய் வேலை செய்ய இதற்குப் பயிற்சி தேவை இவ்வாறு தூய்மையாக்கப்பெற்ற உணவுப் பொருள்களில் கொழுப்பைத் தவிர ஏனையவை பிசிறுகளிலுள்ள மயிர்க்குழாய்களின் வழியே குருதியுடன் கலந்து கூடுகளை ஊட்ட உடல் முழுவதும் பரவுகிறது. பாற்குழாய்களின் வழியே சென்ற கொழுப்பு ஒன்று சேர்ந்து ஊநீரோட்டத்துடன் கலந்து ஓடி முற் கூறியதுபோல் கழுத்தின் பக்கத்தில் மேற் பெருவடிகுழாயுடன் கலந்து குருதியுடன் ஓடுகிறது.

பெருங்குடல்:—இவ்வாறு உறிஞ்சப் பெற்றதுபோக எஞ்சிய அரைக் கட்டிப் பங்கு (Semisolid Mass) பெருங்குடலுக்குள் ஓர் ஒருவழிக்கதவின் வழியே செல்கிறது. இது வலது பக்கத்தில் ஏறிப் பின் குறுக்கே சென்று கடைசியில் இடது பக்கத்தில் இறங்குகிறது. இவற்றிற்கு முறையே ஏறும் பங்கு (Ascending Colon), குறுக்குப் பங்கு (Transverse Colon) இறங்கும் பங்கு (Descending Colon) என்று பெயர். இவற்றில் சிறு குடலால் உறிஞ்சப்படாத சிறிது உணவுப் பொருள்களுஞ் சிறிது நீருஞ் சேருகின்றன. உணவு இம்மணிக்குடல் பெருங்குடலாகிய இரு குடர்களிலும் 24 முதல் 36 மணி வரையிற்றங்குகிறது. இவ்வாறு உரிஞ்சல் முற்றியதும் சக்கை வெளித்தள்ளப் படுகிறது. தள்ளப் படும் வழியை அடுத்த படலத்துள் விளக்குவாம்.

கழிவாய்கள்.

பெருங்குடலுள்வரும் உணவுப்பொருள்களிலுள்ள சத்துக்கள் யாவும் உரிஞ்சப்பட்டானதும் எஞ்சிய சக்கை நீக்கப்பட வேண்டிய அளவு சேர்ந்து விட்டால், உடனே பொறுக்கமுடியாத ஓர் உணர்ச்சி எற்படுகிறது. இதனால் நாம் வெளிக்குப் போகிறோம். இப்பொழுது பெருங்குடல் சுருங்குவதால் எரு வெளிப்படுகிறது. இவ்வாறு நாள்தோறும் நீக்கப்படுகிற எரு அரைச்சேர் நிறையுள்ளதாகும். இதில் சமிக்கப்பெறாத உணவும், பித்தநீரின் சில பங்குகளும் (parts), உரிஞ்சப்படாத கரைநீரின்

சில பங்குகளும் இருக்கின்றன. பித்தநீர் முரிபட்டதனல் (Decomposition) உண்டான பொருள்களே எருவிற்கு அதன் நிறத்தைக் கொடுக்கின்றன! இப்பித்த நீரின் நச்சுநீக்குஞ் திறத்தால் பல நச்சுப்பொருள்கள் எரிக்கப்படுகின்றனவேனும் பல நுண் நச்சுக்கூடுகளால் (Bacteria) இவ்வெரு அழுகி, முரிந்து கெட்ட நாற்றமுடையதாகிறது.

நலவழி:— (1) இவ்வாறு கெட்ட நாற்றமுண்டாம்படி அடக்க அடக்கப் பல நச்சுப்பொருள்களுண்டாய் உடலுட் சோர்ந்து பெருங்கேடு விளைவிக்கின்றன. ஆதலின் வெளிக்குப் போகும் உணர்ச்சி உண்டாகும் பொழுதெல்லாம் தவருது எருவைக் கழிக்கவேண்டும். இவ்வுணர்ச்சி உண்டாவதையும் எதிர்பாராது காலை மாலை வழக்கப்படி எருக்கழித்தல் நல்ல பழக்கமாகும். ஏனெனில் இவ்வாறு செய்யாவிடின் எருக்கழிக்க இயலாத பொழுதெல்லாம் உணர்ச்சி தோன்றி நம்மை ஏங்கச் செய்யும் இதை நீக்க வருமுன் காப்பதே அறிவுடைச் செய்கையாகும்.

(2) சிலர் நாளொன்றிற்கு ஒரு முறைக்கு மேல் எருக் கழித்தல் தீதெனக் கருதி அவ்வாறே செய்யும்படி இளமையிலிருந்தே பழக்கிவருகிறார்கள். இது முழுத்தவறு. ஏனெனில் நமது பெருங்குடல் தொன்றுதொட்டு அரைநாளில் வருகிற எருவைக் கொண்டிருக்கும் அத்துணைப் பெரிதாய் அமைக்கப் பட்டிருக்கிறது. அதைக் கருதாது ஒருநாள் முழுவதும் வரக் கூடிய கழிபொருள்களையெல்லாம் அடக்கிவைத்திருக்கும்படி செய்வதால் இடம்போதாது பெருங்குடர் வருந்துகிறது. நெடு நாட் பழக்கஞ் செய்யச் செய்ய இவ்வருத்தத்தை நீக்கிக்கொள்ளப் பெருங்குடலைச் சுற்றிக் கட்டுக்களும் (bands) தோல்களும் (membranes) உண்டாகின்றன. இதனல் நன்மை தானே யெனின் இல்லை! ஏனெனின் புதுமைப் பழக்கங்களுக்கும், வெளி மாறுபாடுகளுக்குந்தக எவ்வெம்மாறுதல்கள் நம்முடலில் உண்டாகின்றனவோ அவை நம் வாழ்நாளைக் குறைக்கின்றன என்று கண்டு பிடித்திருக்கின்றனர். ஆதலின் நம் ஆண்டு குன்றும். இது

மட்டுமா? இப்பெருங்குடலில் எருமிக்க நேரம் தங்குவதால் ஆங்கு அது அழுகிப் பல கொடிய நச்சுக்கூடுகளுண்டாய் அக்கூடுகள் சிறு குடலுக்குஞ் சென்று ஆங்குள்ள உணவுப் பொருள்களையும் அழுகச்செய்து கொடிய நச்சுப் பொருள்களையுண்டாக்கி அவை உணவுடனே பிசிறுகளால் உரிஞ்சப் பெறுகின்றன. இந்நச்சுப் பொருள்கள் அளவிற்கு மிகுதியாய் இருப்பதால் கல்லீரல், குண்டிக்காய் முதலிய நச்சை எரிக்கும் உறுப்புக்களாலும் முழுவதும் எரிக்கப்பெறாது உடல் முழுதும் உலவி ஆங்குள்ள ஒவ்வொரு அணுக்கூட்டின் வலுவையுங்குறைத்து விடுகின்றன. இதனுல் உண்டாகும் நோய்களுக்களவின்மையாதலின் இத்தீப்பழக்கத்தை அறவே ஒழித்தல் வேண்டும்.

எருக்கழிவிடமும் அதன் தூய்மையும்:—குடலினுள்ளேயே அழுகிக்கெடும் நம் எரு வெளிப்பட்டதும் மிக விரைவில் கெட்டுப் பொறுக்கமுடியா நாற்றத்தை உண்டு பண்ணுகிறது. இந்நாற்றப் பொருள்கள் கொடிய நச்சுப்பொருள்களானதினுல், இதைப் பொறுத்துக்கொண்டு கலைசுகளில் பலர் எருக்கழிப்பதால் இவை மூக்கின்வழியே உடலுட் சோர்ந்து விடுவதால் நோய் உண்டாக்கிக் கொள்ளுகின்றனர். இத்தீமையையும் நம் எருவின் வெறுப்பைத் தரும் காட்சியையும் நீக்க எளிய வழியொன்றுண்டு. அதுதான் ஒவ்வொருவரும் எருக்கழித்தவுடன் ஒன்று அல்லது இரண்டு கொட்டங்கச்சி சாம்பல் அல்லது மண்கொண்டு எருவை மூடுதலாகும். இப்பழக்கம் இழி விலங்குகளாய பூனை முதலியவற்றிற்கிருப்ப, நாம் இதைக் கையாடாதது மதியின்மையேயாம். இப்பழக்கத்தால் உண்டாம் இன்னொரு மிகப்பெரு நன்மை யாதெனின் இவ்வெருவில் மொய்த்து ஆங்குள்ள கொடிய நச்சுக்கூடுகளைத் தன் காலிற்றாக்கிச்செல்லும் ஈக்கள் இவ்வாறு மூடுபட்ட எருவில் மொய்க்க முடியாது நோயைப் பரப்பாதிருக்கும். ஆதலின் நாற்றத்தையும், வெறுக்கத்தக்க காட்சியையும், ஈக்களின் கெட்ட செய்கையையும் நீக்க ஒவ்வொருவரும் தவறாது தம் எருவைத் தாமே மூடவேண்டும். கழிவிடமில்லாது வெளிப்புறங் கழிக்கநேருமானுல் ஆங்கு ஒரு சிறு குழிதோண்டி அதிற்

கழித்துப் பின் மூடல் வேண்டும். இதனால் அவ்வெரு வெகு விரைவில் மக்கிப்போய் மண்ணுடன் கலந்துவிடுகிறது. எரு வாரும் வேலையாளர் இல்லா ஊர்களில் வீட்டுக் கொல்லைப் புறத்தில் மண் வெட்டியால் ஓர் குழி முக்காலடி அகலம், மூன்றடி நீளம், இரண்டடி ஆழமுள்ளதாய்த் தோண்டி அதில் கழித்துப் பின் அதை வேண்டிய அளவு வெட்டு மண்ணாலேயே மூட வேண்டும். அக்குழி மூடுபட்டதும் வேறு குழி அயலிற் றோண்டிக் கொள்ளலாம். முதற்குழி மூடுபட்ட மூன்று திங்களுக்கெல்லாம் அவ்விடம் மறுபடியுந் தோண்டத் தகுந்ததாகும். இக்குழிகள் கிணறு குளம் முதலிய நீர்நிலைகளுக்கு எவ்வளவு தூரத்துள்ளனவோ அவ்வளவு நன்று. ஏனெனில் நீர் இக்குழி வழியே ஊறிச் செல்லாதிருத்தல் வேண்டும்.

இவ்வாறிலாது கழிவிடங் கட்டவேண்டுமானால் அது வீட்டிற்கு எவ்வளவு தொலைவில் கட்டமுடியுமோ ஆங்குக் கல்லாலுஞ் சாந்தாலுங் கட்டவேண்டும். ஏனெனில் மண் தரையாயின் ஆங்குச் சிறுநீர் எருநீர் முதலியன சுவறிவிடும். மேற்புறம் பாதி திறந்ததாயும், உட்காருமிடத்திற்குமேல் வெய்யில், மழை படாதபடி மூடப்பட்டதாயுமிருக்கவேண்டும். பக்கங்களில் தூய காற்றுப் பரவும்படி சாளரங்களுடையதாயிருத்தல் வேண்டும். கதவுகளிற் சிறுதொளைகளும் சுவர்களில் வளைந்திருப்பதால் ஊடே பார்க்க இடங்கொடாதவாறுள்ள தொளைகளும் இருத்தல் நன்றும். நாள்தோறும் இருவேளை அல்லது ஒருவேளையாவது அது நன்றாய்க் கழுவப்பெற்று மருந்து (Phenyle) தெளிக்கப்பெறவேண்டும். இவை உடல் நலவழிக்கும் மிகவும் இன்றியமையாதனவாதலின் யாவராலும் நன்கு கருதப்பெற்றுப் பழக்கத்திற்குக் கொண்டுவரப்படல் வேண்டும்.

எருக்கட்டு (Constipation):—இக்கொடிய நோயிலிருந்தே நூற்றிற்குத் தொண்ணூறு விழுக்காடு ஏனைய நோய்கள் தொடங்குகின்றன. அவற்றுள் சிறந்தன வயிற்றுவலி (colitis), குடல்வால் வேக்காடு (Appendicitis), பித்தப்பை (Gall bladder) வேக்காடு, கருநோய் (menstrual disorder), இடுப்

பைப்பற்றிய நோய்கள் (Pelvic troubles), இழுப்பு (Convulsions), குருதிக்குறைவு (anaemia), தோலைப்பற்றிய நோய்கள் (சிரங்கு முதலியன), இளமையிற் கிழத்தன்மை, திமிர்நோய் (Paralysis), கட்டிகள் (Cancer), எருவாய் முளை (Piles-மூலம்) முதலியனவாம். இவையன்றி இன்னும் பல நோய்களுண்டாவதால் இவை வாராமற் றடுத்துக்கொள்ளல் வேண்டுமன்றோ? அதற்கு, இதன் வருவாய் யாவென ஆராய்வாம்.

உணர்ச்சி தோன்றும் பொழுது எருவைக் கழிக்காது அடக்குவதால் அவ்வுணர்ச்சியின் பயனற்றுப் பின் அவ்வுணர்ச்சி யுண்டாகாது நின்றுவிடும். இவ்வாறே வீணான பல கழிச்சல் மருந்துகளையே உட்கொண்டேயிருந்தால் பின் அஃதின்றிக் கழிவு ஏற்படாது. இவையன்றிக் குடற்றசையின் மெலிவு, உணவின் குற்றம், சோம்பல், கல்லீரல், தீனிப்பை, நரம்புமண்டலத்திலுள்ள நோய்கள் ஆகிய பல கெடுதிகளாலும் இது உண்டாகின்றது. இவற்றுட் சிறந்தன தக்க உணவையுண்ணாமை, மீதூண், உடற்பயிற்சியின்மை முதலிய பல கெட்ட பழக்கங்களாம். இன்னும் இந்நோய் கருவை யொட்டித் தாய் தந்தையரிடமிருந்து பிள்ளைக்கும் வந்து சேரும்.

இந்நோய் வந்திருக்கிற தென்பதற்கு அடையாளங்களாவன:— தலைவலி, சுறுசுறுப்பின்மை, பசியின்மை, நாற்றமுள்ள மூச்சு, வேர்வை, தூக்கமின்மை, நாக்கில் அழுக்குப் படிதல் முதலியனவாம்.

மருந்து:—பேதி மருந்துகள் இந்நோயை நீக்குமென்று நம்புவது பெரும் பிழை. அவை இந்நோயை எப்பொழுதுமுள்ளதாய் ஆக்குகின்றன. அத்துடன் எந்நோயையும் நீக்குவதற்கு மருந்துகள் எளிய வழிகளாகா வென்பது பாராட்டத்தகுந்தது. அதற்குமாறாக வேண்டிய (உணவுப்) பொருள்களைத் தக்க அளவில் உடைய உணவும் (Balanced Diet) தக்க உடற்பயிற்சியுமே சிறந்த மருந்துகளாம். இவற்றுள் தக்க உணவு பழங்களும், வீண் பொருள் மிகுத்த வாழைப்பூ, தண்டு, கீரை முதலியனவு

மாம். பழங்களிலுள்ள புளிப்பும் (acida) உப்புக்களும் குடலைக் கழுவிவிடுந் தன்மைய. வீண்பொருள்கள் நிறைந்த பண்டங்கள் பெருங்குடலுக்கு மிக்கவேலையையும், மிகுந்த கழிபொருள் களையுங் கொடுத்துக் கழிக்கச் செய்கின்றன. இந்நோயை நீக்கும் உடற்பயிற்சிகளுட் சிறந்தன மெதுவாகவும் உறுதியாகவும் வயிற்றைத் தேய்த்தல், வயிற்றுப் பங்கிற்கு மிகுதியாகப் பயிற்சி கொடுப்பவைகள் ஆம். பிந்தியவற்றுள் நம் முன்னோர்களால் கையாளப்பெற்ற கதிரவன் வணக்கப் பயிற்சிகள் (சூரியநமஸ்காரம்) மேனாட்டார்களாலும் பெரிதும் போற்றப்படுகின்றன. அவற்றுட்காணப்பட்ட ஹராம், ஹரிம் ஹ்ரௌம் முதலிய நிறைமொழிகள் (மந்திரங்கள்) பெருங்குடற் கோடி, (Rectum) எருவாய் (Anus) முதலியவற்றிற்குப் பயிற்சி கொடுப்பனவாகத் தெரிகின்றன. இந்நோய் வாராமற்றடுப்பதற்கும் இப்பயிற்சிகளும், மீதூண் விரும்பாமை, எளிதில் சமிக்கா உணவுண்ணாமை, அடிக்கடி உண்ணாமை, உண்டபின் களைப்பாறல், நேரப்படி வெளிக்குப்போகும் பழக்கம் முதலியன மிக நன்றாம். இரவிற் படுக்கப் புகும்பொழுதும், காலையில் எழுந்தவுடனும் இரண்டொரு குவளை நீருண்டால் வயிற்றை இளக்கி எருவை எளிதிற் கழித்துவிடும்.

கழிச்சல் மருந்துகள் (Purgatives).—இவை இருவகைப் படும். ஒன்று எளியது; மற்றொன்று வலியது. மக்கனம் (magnesiva) ஆலிவெண்ணெய் (Olive Oil), சிறிது விளக்கெண்ணெய், குழவுபாக்கு, களிப்பாக்கு, சுண்டைக்காய், தேன், அத்திப்பழங்கள், பழங்கள் முதலியனவாம். இவை குடலின் தசைகளைச் சிறிது ஊக்கப்படுத்தி எருவைக் கழிக்கச் செய்கின்றன. எருக்கட்டுண்டாம்பொழுது இவைகளைச் சிறிது பயன் படுத்தல் நன்று.

பலமருந்துகள், அரைச்சேரளவு ஊற்றின விளக்கெண்ணெய், வீரம், உப்புக்கள் முதலியன வலிவுடைய கழிமருந்துகளாம். இவை தம் காரத்தால் உணவுக்குழாய் உண்டாக்கும் கரைநீர்களை மிகுதிப்படுத்தி, குடற்றசைகளை மிகுதியாய் வேலை

செய்யச் செய்கின்றன. இதனால் ஆங்குள்ள பொருள்கள் எளிதில் வெளித்தள்ளப்படுகின்றன. விளக்கெண்ணெயும் ஏனைய எண்ணெய்களும் மிகவுங் கொழகொழப்பானவை யாதலின் எளிதில் குடர்க்கதவை (Pylorus)த் தாண்டிக் குடர்களையுந் தூய்மைப் படுத்துகின்றன.

குண்டிக்காயுந் தோலும் :—தசை நார்கள் உண்டு கழிக்குங் கழிபொருள்களாய கரிக்காற்று, சிறுநீருப்பு, (Urea) சிறுநீருப்புப் புளிப்பு (Uric acid), சில உப்புகள், என்றிவை குருதியில் வந்து சேருகின்றன. இவை நீக்கப்பெறாவிடின் நோயும், இறுதியில் சாக்காடும் உண்டாகின்றன. இவற்றுள் கரிக்காற்று நுரையீரலால் நீக்கப்பெறுகிறதை மூச்சுறுப்புப் படலத்துட் கண்டோம். ஏனையவை பெரும்பாலும் குண்டிக் காயினாலும், சிறுபான்மை தோலினாலும் நீக்கப் பெறுகின்றன.

குண்டிக்காய் :—இது ஈரல் தாங்கியை ஒட்டிக் கீழே, முள்ளந்தண்டை ஒட்டி இருபக்கத்திலும் இரு முந்திரிக்கொட்டை வடிவுடனிருக்கும் உறுப்புக்களாம். வலக் குண்டிக்காய்க்குமேல் கல்லீரலும், இடக் குண்டிக்காய்க்குமேல் மண்ணீரலும் (Spleen) இருக்கின்றன. பெரும்பாய் குழாயின் இருகிளைகள் இவற்றிற்குள் வந்து பல் கிளைகளாய்ப் பிரிந்து குண்டிக்காய் முழுவதும் பரவியிருப்பதால் அக்கிளைகளின் வழிவருங் குருதியும் குண்டிக்காய் முழுவதும் பாய்கிறது. இக்குண்டிக்காயின் பல் கூடுகள் அழுக்கு நீரையும் பல நச்சுப்புக்களையுந் தக்கபடி பிரித்துப்பற்பல குழாய்கள் வழியே போகவிடுகின்றன. இவை சேர்ந்து சேர்ந்து இருபெருங் குழாய்களின் வழியே சிறு நீர்ப்பை (Bladder)க்குச் செல்லுகின்றன. இவ்வாறு அழுக்கெடுக்கப்பட்ட குருதி பல் மயிர்க்குழாய் வழியே சென்று சேர்ந்து இரு வடிகுழாய்கள் வழியே சென்று கீழ்ப்பெரு வடிகுழாயுட் சேருகிறது. இக் குருதிதான் உடலிலுள்ள குருதியெல்லாவற்றிலும் மிகத்தூயது. ஏனெனில் இதில் உணவுப்பொருள்கள் எரிவதாலுண்டாம் நச்சுக் களிற் கொடிய ஊன் முதலெரிவதாலுண்டாம் நச்சு இல்லை. இவ்வாறு ஒருநாளில் நீக்கப்பெறும் பொருள்களின் அளவாவன:-

சிறு நீருப்பு	1	பலம்
சிறு நீருப்புப் புளிப்பும், ஏனைய உப்புக்களும்	6	,,
நீர்	$\frac{7}{8}$	ஆகும்.

இவற்றுள் குளிர் நாட்களில் தோலின் குருதிக் குழாய்கள் சுருங்கிப் போவதால் குருதி மிகுதியாய் உள்ளுறுப்புகளுக்கும் அதிலும் மிகுதியாய்க் குண்டிக்காய்க்கும் பாய்வதால் அதன் வழியே நீர் மிகுதியாய் நீக்கப்படும். ஆனால் கோடை நாட்களில் குருதி தோலின் குழாய்களின் வழியே மிகுதியாய்ப் பாய்வதால், குண்டிக்காய்க்குச் செல்லுங் குருதி குறைந்துபோய், நீர் குறைவாகவே நீக்கப்பெறும். இதனாற்றான் குளிர் நாட்களில் சிறுநீர் வெளிப்படுந் தடவையும் அளவும் மிகுந்தும் கோடை நாட்களிற் குறைந்தும் வருகிறது. இது எவ்வாறேனும் குண்டிக்காய் நீக்கும் உப்புக்களின் அளவுமட்டும் என்றும் ஒன்றாகவே இருக்கிறது. இவ்வுப்புக்களையுடைய நீர், சிறுநீர்ப்பையுட் சேர்ந்து நிறைந்ததும், ஒருணர்ச்சியுண்டாகிறது. உடனே நாம் நீரிறக்கச் செல்கிறோம். அப்பொழுது சிறு நீர்ப்பையின் அடியிலுள்ள குழாயை (இதுவே கருவாய்) மூடியிருக்கும் ஓர் வளையம்போன்ற தசை திறக்கவே நீர் வெளிப்படும். இவ்வாறு நீர் சரிவரப்பிரிக்கப்படாவிடின் நீர்த்தங்கல் (ஜலோதரம்) உண்டாகிறது. இதற்கு முதல் குருதியேற்றம் நன்றாய்க் குண்டிக்காய்க்கு இரைக்காததும் குண்டிக்காயக்குத் தக்க பயிற்சி இல்லாததுமே யாகும். ஆதலின் குருதியேற்றத்திற்கும் குண்டிக்காய்க்குந் தக்க பயிற்சி கொடுத்தல் நலம். இப்பயிற்சிகளைப் பின்னர்க் காட்டுதும்.

தொடரும்.

செந்நீர்.

திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், தலைமைத் தமிழ்ப்பண்டிதர், உயர்தரக்கல்லூரி, நான்குநேரி.

நமது கைவிரல்களை அமுக்கித் தேய்த்தால் அவை சிவந்து விடுகின்றன. இவ்வாறு அவை சிவப்பேறுவதற்கு ஒரு வகைச் சிவந்தபொருள் தோலின்கீழ் இருத்தல்வேண்டும். நமது காலில் ஒரு சிறு முள் தைத்தால் அதை எடுக்கும்போது அதனுடன் சிவந்த நீர் ஓடி வருகிறதைத நாம் காண்கின்றோம். இச் சிவந்த நீர்ப்பொருளே நமது கை விரல்களிலும் ஏனைய கால், கண் முதலிய உறுப்புக்களிலும் தோலின் கீழ் அமைந்திருக்கிறது. நமது உடம்பில் இப்பொருள் இல்லாத இடமே கிடையாது.

இது சிவப்பு நிறமான நீராகலின் செந்நீர் எனப்பெயர் பெறும். செந்நீரே நமது உடம்பில் உயிரை இருத்துகிறது, அதாவது நிலைபெறச் செய்கிறது. அதனால் இது இருத்தம் என்ற பெயரையும் உடையது. இரு என்பது தன் வினைப்பகுதி; இது தங்கு, நிலைபெறு எனப்பொருள்படும். இதற்குப் பிறவினை இருத்து என்பது. இருத்து என்பது தங்கச்செய், நிலைபெறச் செய் எனப்பொருள்படும். இத்துடன் அம் என்ற தொழிற் பெயர் விகுதிசேர்ந்தால் இது 'இருத்தம்' என்ற தொழிற்பெயராகும். இது ஆகுபெயராய் உயிரை உடலில் தங்கச்செய்வது, நிலைபெறச் செய்வது என்ற பொருளுடன் செந்நீருக்காகும். இதனையே வடமொழியாளர் "ரக்தம்" எனத் தம்மொழியில் வழங்குவாராயினர். தமது சொல்லே வடமொழியில் இவ்வாறு வழங்குவதாயிற்று என்ற உண்மையை உணராமல் தமிழ் மக்கள் பலர் இச்சொல்லை "இரத்தம்" எனத் தமது பேச்சில் வழங்கி வருவதோடு இதை வடமொழிச் சொல்லே எனவும் நம்புகின்றனர். இத்தகைய சொற்கள் எண்ணிறந்தன.

செந்நீர் நமது உடம்பணுக்கள் ஒவ்வொன்றிலும் சென்று பரவி அவைகளுக்கு வேண்டிய உணவைக் கொடுத்து வளர்க்கிறது. செந்நீரோட்டம் உடம்பில் உயிர் நிலைத்திருக்கிற வரையிலும் இருக்கிறது. எப்பொழுது இவ்வோட்டம் நிற்கிறதோ அப்பொழுதே உயிர் உடம்பைவிட்டுப் போய்விடும். இவ்வோட்டம் எவ்வாறு நிகழ்கின்றதென ஆராய்வோம்.

நீர் எப்பொழுதும் மேட்டிலிருந்து பள்ளத்திற்கே ஓடும் இயற்கையை உடையது. இது பள்ளத்திலிருந்து மேட்டிற்கு இயற்கையாக ஒரு நாளும் ஏறாது. ஆதலின் நீரைப் பள்ளத்திலிருந்து மேட்டுக்குக் கொண்டுபோக வேண்டுமானால் அதனை மேலே கிளப்பும் தன்மை வாய்ந்த விசைக் கருவிகொண்டு அடித்தே கொண்டுபோதல் கூடும்.

நாம் நிற்கும்போது கால் பள்ளமாகவும் தலை மேடாகவும் உள்ளன. படுத்திருக்கும்போது பெரும்பாலும் நமது உடல் சமநிலையிலிருந்தாலும் ஒவ்வோரிடத்திலும் மேடும் பள்ளமுமாகவே உள்ளது. இருத்தமோ நமது உடம்பிலுள்ள பள்ளங்களிலும் பாவுகிறது, மேடுகளிலும் பாய்ந்து செல்லுகிறது. ஆதலின் நீர்ப் பொருளாகிய இவ்விருத்தம் ஓர் சிறந்த வலிமை பொருந்திய விசைக் கருவியினாலே பெருவிசை கொண்டு செலுத்தப்பெறல் இன்றியமையாததாகிறது. நமது உடம்பில் பெரிய நாம்புகள் வெளியே தெரியும் இடங்களில் அந்நாம்புகளின்மேல் விரல்களை வைத்து உணர்வோமானால் அடிக்கடி அவை விரிவதையும் சுருங்குவதையும் தெரிந்து கொள்ளலாம். இருத்தம் பாய்ந்து வரும்போது அவை விரிகின்றன, அது அவ்விடத்தை விட்டுச் சென்றவுடன் அவை சுருங்குகின்றன. இதனை நாம் முதன்மையாக நமது நாட்டு மருத்துவ மணிகள் கையில் நாடி பார்க்கும் இடத்திலும், நமது காதுகளுக்கு மேலுள்ள பொருத்து நாம்புகளிலும் தெளிவாக அறிந்துகொள்ளலாம்.

நாம் நமது கைவிரல்கள் சிவந்த நிறத்தோடிருக்கக் காண்கின்றோம். கையை ஓரிடத்தில் அமுக்கிப் பார்த்தால் வெள்ளை

நிறம் தோன்றுகிறது. மறு நொடியில் அவ்வெள்ளை நிறம்மாறிப் பழையபடி சிவப்புநிறம் வருவதையும் நாம் காணலாம். இதற்குக் காரணமென்னை? முதலில் நாம் அமுக்கியபோது அவ்விடத்திலுள்ள உடம்பணுக்களில் இருந்த இருத்தம் வேறிடம் போகிறது; அமுக்குதலை விடுத்தபோது இருத்தம் மறுபடி அவ்வணுக்களில் பாய்ந்துவந்து நிரம்புகிறது.

மேலேகண்டபடி செந்நீரை உடம்பின் பல இடங்களுக்கும் விசைகொண்டு பாய்ச்சும் கருவிதான் யாதோ? நமது நகரங்களிலுள்ள இக்கால அரசாங்க மருத்துவரிடம் சென்றால் அவர் நமது உடல் நிலையை அறிவதற்காக ஓர் குழாய்க்கருவியை நம் மார்பில் வைத்து அதன் மற்றோர் நுனியைத் தமது செவிகளில் வைத்து ஆராய்கிறார். அக்கருவியை நாமும் அவரைப்போல நமது மார்பிலும் செவியிலும் வைத்து உணர்வோமானால் "லப்டப், லப்டப்" என்ற ஒலியை நாம் கேட்டுக்கொண்டேயிருக்கலாம். அது நமது உயிர்போமளவும் கேட்டுக்கொண்டேயிருக்கும். நமது செவியை நம்முடைய நண்பனது மார்பின் இடது புறத்தில் வைத்து உற்றுக்கேட்போமானாலும் அவ்வொலி நமக்கு நன்றாகக் கேட்கும். அந்த இடத்தில் நாம் கையை வைத்துப்பார்த்தால் நெஞ்சு படபட வென்று அடிப்பதை உணரலாம். இதனால் 'அந்த இடத்தில் ஏதோ ஒரு பொருள் இருந்துகொண்டு சுருங்கவும் விரியவுமாக இருக்கிறது, அவ்வொலியே நமக்குக் கேட்கிறது, அது சுருங்கி விரிவதே கைக்குத் தெரிகிறது' என்ற உண்மை வெளிப்படுகிறது.

தொடரும்.

இரங்கல்.

இச்சங்கத்தின் உறுதுணையாகிய திருச்சிராப்பள்ளிக் கிளையின் அமைச்சர் திரு: இராம. நடேசபிள்ளையவர்கள் 18—1—1930 நாள் விண்ணுலக வாழ்வு எய்தியதுணர்ந்து, இச்சங்கம் துயர்ப் பெருங் கடலுள் ஆழ்கின்றது. பெருநிலக்கிழமை மேவிய திருமிகு நற்குடியிற்றோன்றி, ஆங்கிலக் கல்வியும் அதன்பயனாயதோர் அலுவலும் பெற்றிருந்த இவர்கள், அச்செல்வத்தினையும் அன்னனைய அலுவல்களையும் பொருள் செய்யாது, தமிழ்த் தொண்டாற்றலே தமது வாழ்க்கைப்பயனாகக் கொண்டு, அதுபற்றித் தமது உடல்நல வாழ்விற்கு ஒவ்வாமை யுணர்ந்துவைத்தும் திருச்சிராப்பள்ளியில் குடிகொண்டு, கிளைச்சங்க அமைச்சும் ஒரு ஆங்கிலக் கல்லூரியில் தமிழ்ப்புலமையும் நடாத்தித், தமது உண்மைத் தமிழன்பினையும் சிறந்த தமிழ்ப் பயிற்சியினையும் யாவரும் போற்ற, அத்தொண்டினை நன்கு நடாத்திவந்தார்கள். தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் கூறிய இல்லறமாண்புகளைக் குறைவறக்கொண்டு நலமுற நிகழ்ந்து வந்தது இவர்கள் நல்லறவாழ்க்கையாகும்.

இவர்கள், அன்பிற்கு ஒரு அமையுளாய், நண்பிற்கு ஒரு நல்லுயிராய், (இவர்களை இழக்கும் தீயூழினை மேவிய இச்) சங்கத்திற்கு ஒரு தனித்துணையாய் விளங்கினர். இவர்கள், அருமை மகப்பிரிவு, உறுநோய் என்றாய இறைவன் மறக்கருணை சில கண்டும் உளஞ் சலியாது, எய்திய தமிழ்த் தொண்டும் இறைவனன்பும் வளரப்பெறும் சான்றோராய் விளங்கினர். இவர்கள், பலகாலமாக விடா மெலிவு நோயால் உடல் நலம் இழந்து வந்தமையின், உயிர்க்குப் பொறையாய ஊன் முதலாயவெல்லாம் கழிந்தொழிய, அவ்வுயிர்க்குத் துணையாய அன்பு மட்டும் எஞ்சி இடையூறின்றி நிரம்பித் ததும்ப, கண்ட நண்பர்களின் உள்ளங் கரைத்துக் கண்ணீர் பெருக்கும் நிலையினதாய் என்பெழுந்தியங்கும் யாக்கையினராகி, உள்ளத்தான் உண்மை யோகியாகிய இவர்சட்கு உடலும் ஒத்தது என்னுமாறாயினர். நண்பர்கள் வேண்டுதல்களும் அருட்பெருங்குரவராகிய வாலையானந்த அடிகளது அரும்பெருஞ் சிறப்பினவாகிய மருத்துவங்களும் தமிழ்த்தாயின் தவமும் ஊழொடு மாறுகொள்ள வியலாவாயின. அந்தோ! என்செய்வாம்! இவர்கள் திருவுருவப்படமும் அன்பர்கள் கூறிய இரங்கற் பாக்களும் அடுத்த இதழில் வெளிவரும்.

வே.